REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 செப்டெம்பர் 12 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN

1932 - 2022

வரு. 90 இல. 215 | Monday 12, September, 2022 | 16பக்கங்கள் | 40/-

லண்டனில் 19ஆம் திகதி நடைபெறவுள்ள

## எலிசபெத் மகாராணியின் இறுதிச்சடங்கில் ஜனாதிபதி



இரண்டாவது எலிசபெத் மகாராணியின் இறுதிச்சடங்கு நிகழ்வில் கலந்து கொள்வதற்காக

06

ஜெனீவா 51வது கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகிறது;

## உள்ளக பொறிமுறையின் அவசியம் குறித்து இலங்கைக் குழு வலியுறுத்து

ஐ.நா மனித உரிமைகள் தலைவருடன் அலி சப்ரி, விஜேயதாச ராஜபக்ஷ சந்திப்பு



ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தலைவர் பெட்ரிகோ விலிகஸை சந்தித்துக் கலந்துரையாடியுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் நீதியமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ ஆகியோரடங்கிய இலங்கையின் உயர்மட்டப் பிரதிநிதிகள் குழு, உள்ளகப்பொறிமுறையை வலுப்படுத்துவதன் அவசியம் தொடர்பில் அவரிடம் மீள வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையில் நீதியமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் அடங்கிய அரச உயர்மட்டப் பிரதிநிதிகள் குழு கடந்த செவ்வாய்க்கிழமை ஜெனீவா பயணமானது.

ஜெனீவாவில் இன்று திங்கட் கிழமை (12) மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர்

06



அமரத்துவமடைந்த எலிசபெத் மகாராணிக்கு தமது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதற்காக கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலயத்திற்கு நேற்று விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகரிடம் தமது அனுதாபங்களைத் தெரிவித்ததுடன் அங்கிருந்த மகாராணியின் உருவப்படத்துக்கு அஞ்சலி செலுத்தி அனுதாப ஏட்டிலும் கையெழுத்திட்டார்.

இலங்கையின் பொருளாதார ஸ்திரத் தன்மைக்கு

# அமெரிக்கா முழுமையான ஆதரவை வழங்கும்

ஜனாதிபதியுடனான சந்திப்பில் சமந்தா பவர் உறுதியளிப்பு





- உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைக்கு ஸ்கொட்லண்ட்யார்ட் உதவி பெறப்படும்
- கட்சிகளிடையே உடன்பாடு ஏற்படாவிடின் தேர்தல் முறை தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு
- பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டோர் விடுதலை குறித்து கவனம்
- உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் தடுப்புக்காவலில் உள்ள முஸ்லிம்களில் விடுதலை செய்யக்கூடியோரை அடையாளம் கண்டு விடுவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு முழுமையான ஆதரவை வழங்க அமெரிக்கா அர்ப்பணிப்புடன் செயற்படும் என அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் அதிகாரி சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்கள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களின் இயல்புவாழ்க்கையை கட்டியெழுப்புவதற்கும் நாட்டை முன்னேற்றுவதற்கும் அமெரிக்கா தொடர்ந்தும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குமென சமந்தா பவர் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு மேலும் 60 மில்லியன்

06

கட்சி மறுசீரமைப்பு; இளைஞர்கள் உள்வாங்கல்

## SLPP தேசிய அமைப்பாளர் பதவி நாமல் ராஜபக்ஷவுக்கு



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு புதிய இளைஞர், யுவதிகளை இணைத்துக்கொள்ளும் பொறுப்பு முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ளது. கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியை நாமல் ராஜபக்ஷவிற்கு வழங்குமாறு பொதுஜன

06

அரசாங்க செலவினங்கள் அதிகரிப்பு;

## அடுத்த வருடத்திற்கான ஆட்சேர்ப்பு நிறுத்தம்

அரச நிறுவனங்களுக்கு நிதி அமைச்சு அறிவிப்பு

அடுத்த வருடத்திற்கான பொதுத்துறை ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அனைத்து அரச நிறுவனங்களுக்கும் அறிவித்துள்ளது.

06

நாட்டு விவசாய மக்களின் நலன் கருதி

## உரம், விவசாய பொருட்களின் கொள்வனவுக்கு 40 மில். டொலர்

இலங்கை வந்துள்ள சமந்தா பவர் உறுதியளிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

விவசாயிகளின் நன்மை கருதி, இலங்கைக்கு மேலும் 40 மில்லியன் அமெரிக்க டொலரை மேலதிக உதவியாக வழங்கவுள்ளதாக சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க நிறுவனத்தின் அதிகாரி நிர்வாகி சமந்தா பவர் உறுதியளித்துள்ளார்.

06

## மார்ட்டின் சுங்கோங் நேற்று இலங்கை வருகை



உலக பாராளுமன்றங்களுக்கு இடையிலான ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் மார்ட்டின் சுங்கோங் நேற்று இரவு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகைதந்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினதும், பிரதமரினதும்

06

தர்ஜினி சிவலிங்கத்தின் அபார விளையாட்டு;

## இலங்கை வரலாற்று சம்பியன்

ஆறாவது தடவையாக சம்பியன் வென்று சாதனை



ஆசிய மகளிர் வலைப்பந்து சம்பியன்சிப் தொடரின் இறுதிப் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றுள்ளது. இறுதிப் போட்டியில் சிங்கப்பூர் அணியுடன் மோதிய இலங்கை அணி 63க்கு 53 என்ற அடிப்படையில்

06

தெற்கில் ஒரு மாதத்தில் 13 பேர் கொலை;

## கொலையாளிகள் தப்பிக்க ஒருபோதும் இடமளியோம்

SSP அஜித் ரோஹண தெரிவிப்பு



தெற்கில் கடந்த மாதம் முதலாம் திகதியில் இருந்து தற்போது வரையிலான காலப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களால் 13 பேர் உயிரிழந்துள்ளதாக

06

## துருக்கி, துபாயிலிருந்து விரைவில் மா இறக்குமதி

பாண் விலையை அதிகரிக்க வேண்டாம்

பேக்கரி உரிமையாளர்களிடம் அரசாங்கம் வேண்டுகோள்

லோரன்ஸ் செல்வநாயகம்




பாண் மற்றும் கோதுமை மா மூலமான உற்பத்திப் பொருட்களின் விலைகளை அதிகரிக்க

06

## அமைச்சர் டக்ளஸ் சிறந்த ஒரு தலைவர்

– பாலசுந்தரம்பிள்ளை பாராட்டு





நடைமுறைக்கு சாத்தியமாக கிடைக்கின்ற சந்தர்ப்பத்தினை நழுவ விடாமல் செய்யக்கூடியவற்றை செய்வோம் என்று தான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சென்று

06

கொ.தமிழ்ச் சங்க முன்னாள் தலைவர்

## இராஜகுலேந்திராவின் இறுதிக் கிரியை இன்று



கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் தலைவரும், பேரவை உறுப்பினருமான சிரேஷ்ட சட்டத்தரணி குழந்தைவேலு இராஜகுலேந்திரா அவர்களின் இறுதிக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, கல்கிசை இந்து பொது

06

## தேசிய அரசாங்கத்தில் CWC க்கு முக்கிய அமைச்சு

நிச்சயம் கிடைக்கும் என்கிறார் சக்திவேல்

(ஹற்றன் சுழற்சி நிருபர்)



மலையக மக்களின் அபிவிருத்தியில் மிகவும் ஒரு முக்கிய பங்களிப்பை செலுத்திய இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கத்தில் சேவை செய்யக்கூடிய ஒரு அமைச்சை

06

கிழக்கில் சட்டவிரோத கடற்பயணம்;

## வெளிநாடு செல்ல முயன்ற 85 பேர் கடற்படையால் கைது

லோரன்ஸ் செல்வநாயகம்



சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக வெளிநாடு செல்ல முற்பட்ட 85 பேர் படகுகளுடன் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பலநாள் மீன்பிடி படகுகளின் உதவியுடன் இவ்வாறு செல்ல முற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கிழக்கு கடற்படைக் கட்டளைக்குட்பட்ட

06

## எட்டு மாதங்களில் 500 டாக்டர்கள் வெளிநாடுகளுக்கு

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் கடந்த எட்டு மாதங்களில் 500 மருத்துவர்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம்

06

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# கொழும்பு கதிரேசன் வீதி ஸ்ரீ காட்டு மாரியம்மன் ஆலயம்

**13ஆம் திகதி தேர்த்திருவிழா**
**14ஆம் திகதி பால்குட பவனி**

அருள்மிகு பார்வதி தேவியின் அவதாரமான அருள்மிகு மாரியம்மன் குறிப்பாக கிராமப்புறங்களிலும் மலையகப் பகுதிகளிலும் பரவலாக வழிபடப்படுபவர். கோடை காலங்களில் ஏற்படும் வெப்பத்தால் மனிதர்களுக்கு அம்மை போன்ற வெப்பகால நோய்கள் ஏற்படுகின்றன.

இந்த வெப்ப நோய்கள் வராமல் தடுக்க கோடை காலத்தில் மழை பெய்து குளிர்ச்சி அடைய வேண்டும் என்று நினைத்து பக்தர்கள் மழை தர வேண்டி இறைவனை வழிபட்டார்கள். அவர்களது பக்திக்கு அமைய அருள்மிகு மாரி (மழை) அம்மன் மழை அருளி அருள்பாலித்தார். அதற்கமைய இவர் அருள்மிகு மாரியம்மன் என்று அழைக்கப்பட்டார். இந்த மாரியம்மன் பல நோய்களைப் போக்கும் சக்தி வாய்ந்தவள்.

கூழுக்கு மிஞ்சிய விருந்தும் இல்லை, வேப்பிலைக்கு மிஞ்சிய மருந்தும் இல்லை என்பதற்கமைய பக்தர்கள் பக்தியுணர்வோடு அன்பாக கூழை கொடுத்தாலும் குடித்து விட்டு அருள்பாலிக்கக்கூடியவள் இந்த மாரியம்மன். அதேபோல் வேம்பினால் பல நோய்களை போக்க க்கூடியவள் இந்த மாரியம்மன். கசப்பு சுவையுடைய வேம்பு மரத்தைத் தல விருட்சமாகக் கொண்ட சக்தியின் நிலை மற்றுமொரு அம்சம் என்றும் சொல்கிறார்கள்.

இதனால் இந்த மாரியம்மனுக்குத் தல விருட்சமாக வேம்பு மரமே இருக்கிறது. இந்த மாரியம்மன் இடத்திற்குத் தகுந்தபடி பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறாள். மாரியம்மன் ஆதிசக்தியின் வடிவமாகும். காடுகளிலும் மேடுகளிலும் குடி கொண்டு அருள்பாலிக்கக்கூடியவள் அருள்மிகு மாரியம்மன். கொழும்பு 13, ஸ்ரீ கதிரேசன் வீதியில் வாழ்ந்து வருகின்ற திருமதி மகேஸ்வரி ஸ்ரீதரன் அம்மையார், ஒரு முறை ஹட்டனில் உள்ள கன்னியப்பு கோயிலில் நடைபெற்ற தீமிதிப்பு உற்சவத்தில் கலந்துகொண்டு தீமிதிப்பில் ஈடுபட்டபோது இவரது அருள்வாக்கில் மாரியம்மன் வந்து அருள்வாக்கு கூறினார். அன்று முதல் இவர் கொழும்பு 13, ஸ்ரீ கதிரேசன் வீதியில் உள்ள தான் குடியிருந்த வீட்டில் இருந்து அருள்வாக்கு கூறி வந்தார். இதன் பயனாக இவரை தேடி பக்தர்கள் வர முற்பட்டனர். இவரை நாடி வந்தவர்கள் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டு நலம் வேண்டி வந்தார்கள். இவரது சித்தப்பா புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவரை இவரிடம் அழைத்து வந்ததன் பயனாக காட்டுமாரியம்மனின் அருளால் அவரது நோயை தீர்த்து வைத்தார். இதன் பயனாக அமெரிக்காவைச் சேர்ந்தவர் 35 இலட்சம் ரூபா பெறுமதியான வீடொன்றை இவ்வாலயம் அமைக்க பெற்றுக் கொடுத்துள்ளார். இங்கு இவ்வாலயம் அமைக்கப்பட்டு 19 வருடங்களாகி விட்டன. நோய்களை தீர்த்துக் கொள்ளவும் அருள்வாக்குக் கேட்டுக் கொள்ளவும் இவ்வாலயத்தைத் நாடி வருகின்ற பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. பிரதி வெள்ளிக்கிழமையும் நண்பகல் 12 மணியிலிருந்து இவர் இவ்வாறு அருள்வாக்கு கூறி பக்தர்களின் குறைளை தீர்த்து வருகிறார்.



இந்த அருள்மிகு ஸ்ரீ காட்டுமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவ திருவிழா கடந்த 05ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து எதிர்வரும் 13.09.2022 ஆம் திகதி சித்திரத்தேர் பவனியும், 14.09.2022 பால்குட பவனியும் இடம்பெறவுள்ளது. நிகழ்வுகள் அனைத்தும் ஆலய ஆதீனகர்த்தா திருமதி மகேஸ்வரி ஸ்ரீதரன் அம்மையார் தலைமையில் நடைபெறவுள்ளது.

**சைவ மஞ்சரி**

## மானுடவியல்
(தொடர்)

### கழறிற்றறிவார் நாயனார்



87

பெருமாதைக் கோதையார் தாம் பெற்ற அரச பதவியின் பயனும் நிறைந்த தவமும், தேடும் பொருளும், பெருந்துணையும் ஆகிய இவையெல்லாமாக விளங்குவது தில்லைச் சிற்றம்பலத்தில் ஆடல் புரிந்தருளும் திருவடித்தாமரையெனத் தெளிந்தார். ஆதலால் நாள்தோறும் சிவபூசை செய்வதை, தமக்குரிய கடைமையாக மேற்கொண்டார். திருமஞ்சனம், பூ, புகை, ஒளி ஆகியவற்றுடன் செய்யும் அன்பு நிறைந்த சிவபூசை ஏற்றுக்கொண்ட இறைவர், தமது திருவடிச் சிலம்பின் ஒலியினைச் சேரமான் செவிகுளிரக் கேட்டின்புறும் வண்ணம் ஒலிப்பித்தலை வழக்கமாகக் கொண்டருளினார்.

இந்நிலையில் பாண்டியனது தலைநகராகிய மதுரையம்பதியிலே திருவாலவாயென்னுந் திருக்கோயிலிலே எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரக் கடவுள் தம்மை இன்னிசையாற் பரவிப்போற்றும் பாணபத்திரனென்னும் இசைப் பாணரது வறுமையை நீக்கத் திருவுளங் கொண்டு அவரது கனவில் தோன்றி 'அன்பனே, என்பாற் பேரன்புடைய சேரமான் பெருமாளென்னும் வேந்தன் உனக்குப் பொன், பட்டாடைகள், நவமணிகலன்கள் முதலாக நீ வேண்டியதெல்லாங் குறைவறக் கொடுப்பான். அவனுக்கு ஒரு திருமுகம் எழுதிக் கொடுத்திருக்கிறோம் நீ அதனைப் பெற்றுக்கொண்டு மலைநாடு சென்று பொருள் பெற்று வருவாயாக' எனக் கூறினார் சிவபெருமான்; 'மதிமலிபுரிசை' எனத் தொடங்கும் திருப்பாடல் வரையப் பெற்ற திருமுகத்தைக் கொடுத்தருளினார்.

திருவாலவாயுடையார் அருளிய திருமுகப்பாசுரத்தைப் பெற்ற பாணபத்திரர், சேர நாட்டையடைந்து சேரமான் பெருமாளைக் கண்டார். பாணர் தந்த திருமுகத்தை வாங்கி முடிமேற் கொண்ட சேரர் பெருமான் அப்பாசுரத்தைப் பலமுறை படித்து உளமுருகினார். (தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**

# ஸ்ரீ வம்மியடி பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகம்

வரலாற்று புகழ்மிக்க களுவாஞ்சிகுடி ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையாரின் மஹாகும்பாபிஷேகம் 06.09.2022 ஆம் திகதி வாஸ்து சாந்தி மற்றும் கிராமசாந்தி பிரவேஷ வேள்விகள் போன்ற பல கிரியைகளுடன் ஆரம்பமாகியது. இவ்வாலயத்தில் 07.09.2022 ஆம் திகதி எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் அதனைத் தொடர்ந்து 08.09.2022 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.38 மணி மஹா கும்பாபிஷேகமும் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்று வருகின்றது. இறுதி நாளன்று சங்காபிஷேகம் நடைபெறும்.

கிரியைகளை சிவத்திரு பஞ்சாச்சரக்குருக்கள் புவனேசராசா குருக்களின் நல்லாசிகளுடன் பிரதிஸ்டா பிரதம குரு கிரியா கலாபமணி, பிரதிஷ்டா விபுலமணி, வாமதேவ சிவாச்சாரியார்,காகபுஜண்ட ஜோதிடர் சிவஸ்ரீ சு.கு.விநாயகமூர்த்தி குருக்களும் பிரதிஷ்டா உதவிக்குருமார்களான ஈசான சிவாச்சார்யார் சிவஸ்ரீ செ.கு.சுப்பிரமணியக் குருக்கள், தெய்விக கிரியாஜோதி சத்தியோயாத சிவாச்சாரியார் சிவஸ்ரீஅ.கு.லிகிதராஜாக்குருக்களும் சர்வ சாதகாசிரியர்கள் சிவஸ்ரீ செல்வப்பிரசாத் சர்மா, சிவஸ்ரீ பு.கு. புவனேஸ்வரசடாட்சர சர்மா (வம்மியடி பிள்ளையார் ஆலய பிரதம குரு)சிவஸ்ரீ வி.கு.சிஸ்யமேனசர்மா வேததோத்திர பாராயணம் சிவஸ்ரீ சு.விதுசன் சர்மா மற்றும் யாகசம்ரக்ஷகர்கள் சிவஸ்ரீ உ.மதுசூதனன் சர்மா, சிவஸ்ரீ ந.சதுஷன் சர்மா ஆகியோர் சிறப்பாக நடத்திவருகின்றனர்.

**ஆலய வரலாறு**

அருள்மிகு ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயம் கணபதி ஐயர் அவர்களால் ஆரம்பித்து வழிபட்ட ஆலயம் ஆகும். இவர் மரப்பொந்து ஒன்றிலிருந்து கல்வடிவத்தில் விநாயகரை கண்டெடுத்திருந்தார். அக்கல்லினை வைத்து வழிபட்டபோது அச்சிலைக் கல்லானது களவாடப்பட்டதினால் கணபதி ஐயர் மிகுந்த கவலை கொண்டு இருந்தார். அவ்வேளை விநாயகர் அவரின் கனவில் தோன்றி கவலைப் பட வேண்டாம். மூன்று கல்லை வைத்து என்னை எண்ணி வழிபடு நான் உன்னுடன்தான் இருப்பேன் எனக்கூறியதற்கு அமையவே கணபதி ஐயர் வம்மி மரப்பொந்தில் வைத்து வழிபட்டு வந்ததாக பழம்பெரும் கதைகள் சித்தரிக்கின்றன.

வம்மிமரப் பொந்தில் வைத்து வழிபட்டதனாலே இவருக்கு வம்மியடிப்பிள்ளையார் எனப் பெருநாமம் ஏற்பட்டது.கோயில் அமைந்திருந்த இடமானது மூதுரைச் சேர்ந்த வா வா மாணிக்கம் என்பவருக்கு சொந்தமான காணியாகும். எனவே இவருடைய வளவிற்குள்ளேயே கணபதி ஐயர் மேற்படி விநாயகரின் வழிபாடு மேற்கொண்டிருந்தார். கணபதி ஐயர் சமாதிநிலையை அடைந்ததும் அவரின் வேண்டுகோளுக்கு இணங்கவே அவரின் சாமாதி உடலானது கோவில் அமைந்திருந்த இடத்திலேயே புதைக்கப்பட்டது. அச்சமாதியானது தற்போதும் ஆலயத்தில் காணப்படுவதால் பூசை நடைபெறுகின்ற போது அச்சமாதிக்கும் பூசைசெய்து வழிபடுவதும் ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்தில் தொன்மைமிக்க வரலாற்றை செப்பிநிற்கின்றன

கணபதி ஐயரின் மறைவிற்குப்பின்னர் அக்கோவிலின் மூலஸ்தான மண்டபமானது சாமித்தம்பியால் அமைக்கப்பட்டிருந்ததுடன் வெளிமண்டபம், வைரவர் கோயில்கள் யாவும் முருகுப்பிள்ளையால் அமைக்கப்பட்டது. இவர்கள் கணபதி ஐயரின் வழி வந்தவர்களேயாகும்.

பன்னெடுங்காலமாக இவ்வாறு கட்டிடமாகவே காணப்பட்ட ஆலயம், 1978 ஆம் ஆண்டு சூறாவளி அனர்த்தம் காரணமாக சிறுசேதத்திற்கு உட்பட்ட போது கோயில் மீண்டும் புனரமைக்கப்பட்டது. இக்கோயிலை பெரிதாக புனரமைக்கும் நோக்கில் தா. நமசிவாயத்தால் நிதியொழுங்கு செய்யப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக ஆலயத்தை சார்ந்த குடும்ப அங்கத்தவர்கள் நிதியுதவிகள் செய்ததுடன் 2006ஆம் ஆண்டில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்ற போது அங்கு இரண்டு ஆலயங்கள் மாத்திரமே அமைக்கப்பட்டிருந்தன. அதாவது ஆதிமூலப் பிள்ளையார் கோயில் மற்றயது புதிதாக அமைக்கப்பட்ட பிள்ளையார் கோயில் ஆகும்.

இதன் பின்னர் வைரவர் கோயில் அமைக்கப்பட்டதுடன் தற்போது இவ்வாண்டு (2022) மேலதிகமாக வசந்த மண்டபமும் மற்றும் நாகலிங்கேஸ்வரர் ஆலயம், நவக்கிரக கோயில், சிவன், உமை போன்றோருக்கும் கோவிலமைத்து மேற்படி மகா கும்பாபிஷேகம் நடைபெறவிருக்கின்றது.

இக்கோயிலின் ஆரம்பகாலத்தில் இருந்து தற்போது வரைக்குமான பூசகர்களை நோக்குகின்ற போது முதலில் கண்பதிஐயர், பஞ்சாட்சரக்குருக்கள், சுப்பிரமணியக் குருக்கள், மு. பத்மநாதன்குருக்கள் (சின்னவன் குருக்கள்) , முருகுப்பிள்ளைக் குருக்கள், ஜெகதீஸ்வரன் குருக்கள் அதன் பின் சபாநாயகம் குருக்கள் என கடமையாற்றினர்.

தற்போது பஞ்சாச்சரக்குருக்களின் பேரனும் புவனேசராசாக்குருக்களின் மகனாகிய சடாச்சர சர்மா சேவையாற்றி வருகின்றார்.

கீர்த்திஸ்ரீ, இலக்கிய வித்தகர்
**நாராயணபிள்ளை நாகேந்திரன்...**
ஓய்வு நிலைஅதிபர், களுவாஞ்சிகுடி





வத்தளை இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் வத்தளை போபிட்டிய அவரகொட்டுவ பிரதேச இந்து அமைப்புகளால் விநாயகர் சதுர்த்தியையொட்டி வழிபாடு செய்யப்பட்ட விநாயகர் சிலைகள் ஊர்வலமாக முகத்துவாரம் காக்கைத்தீவு கடற்கரை பூங்காவுக்கு கொண்டுவரப்பட்டு கடலில் சங்கமமாக்கப்பட்டது. (படங்கள்: வட கொழும்பு தினகரன் நிருபர்)

## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
**தமிழர் நற்பணி மன்றத் தலைவர்**

**(19271) சுவாமிக்குப் பிரசாதம் படைக்கும்போது திரையிட்டுக் கொள்வது ஏன்?**

குளிப்பது, சாப்பிடுவது, ஜெபிப்பது போன்ற விஷயங்களை பிறர் பார்க்கும்படி செய்வது கூடாது என்பது நியதி. தெய்வத்திற்குப் பிரசாதம் படைக்கும் நைவேத்யத்தை ரகசியமாக செய்யும்படி சாத்திரங்கள் கூறுகின்றன. கௌரவம், பயபக்தியோடு மட்டுமே கடவுளுக்கு உணவு படைக்கவேண்டுமே தவிர மேடை காட்சியாக செய்யக்கூடாது.

**(19272) பெண்கள் கர்ப்பமாக இருக்கும்போது வழிபாட்டில் தேங்காய் உடைக்கக் கூடாதா ஏன்?.**

கர்ப்பமாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் பெண்கள் தேங்காய் உடைக்கக் கூடாது. பெண்கள் தேங்காயை உடைக்கவோ, பூசணிக்காயை வெட்டவோ கூடாது. ஆண்கள் தான் எப்போதும் செய்ய வேண்டும்.

**(19273) சக்தியந்திர வழிபாடுகளில் மிக உயர்ந்தது எது?** ஸ்ரீ சக்ரம்.

**(19274) யந்திர ராஜா என்ற எதனைக் கூறுவர்.** ஸ்ரீசக்ரத்தை

**(19275) இந்த யந்திரம் எந்த வடிவம் கொண்டது?**

ஒரே அளவிலான 43 முக்கோணங்களைக் கொண்டது

**(19276) இச்சக்கரத்தை எந்த தெய்வங்களுக்கு பிரதிஷ்டை செய்து வழுபடப்படுகிறது?** துர்க்கை, ராஜேஸ்வரி, லலிதாம்பிகை போன்ற தெய்வங்களுக்கு

**(19277) சக்திவாய்ந்த இதனை வழிபடுபவர்களுக்கு என்ன நன்மை கிடைக்கும்?**

எல்லா நலன்களும் உண்டாகும். உபதேசம் பெற்று உரிய நியமங்களை அறிந்து ஸ்ரீசக்ரத்தை வழிபடவேண்டும்.

**(19278) சூரியோதயத்திற்கு முன் ஜபம் செய்ய நல்லநேரம் பார்க்கத் தேவையில்லை என்கிறார்களே ஏன்?**

சூரியோதயத்திற்கு முன் விடியற்காலை 4.306மணி வரை பிரம்ம முகூர்த்தம். இரவில் தூங்கி மீண்டும் எழுவதே ஒரு மறுபிறப்பு தான். பிறப்பு என்பது படைத்தல் அதாவது சிருஷ்டி சம்பந்தப்பட்டது. சிருஷ்டியைச் செய்யும் பிரம்மனின் பெயரால், ஒருநாளின் துவக்க நேரத்தை பிரம்ம முகூர்த்தம் என குறிப்பிடுவர். இவ்வேளைக்கு தோஷம் என்பதே கிடையாது. நேரம் பார்த்து செய்ய இயலாத ஒருசில அவசியமான சுபநிகழ்வுகளை பிரம்மமுகூர்த்தத்தில் செய்யலாம்.

## "யுகரிஷியின் ஆன்மீகச் சிந்தனைகள் - 5



மனிதனோ அல்லது மற்ற உயிரினங்களோ கடவுளின் வடிவங்களே. உண்மையில் உயிருக்கு வடிவம் இல்லை. பரமாத்மாவே பல வடிவங்களில் உலவுகின்றார். உயிர் உணர்வு என்னும் கற்பனை, மாயையில் இருக்கும் வரை தனது சக்தி, சாமர்த்தியம் துச்சமாகத் தான் இருக்கும். கடவுள் மீது நாம் கொள்ளும் பக்தியினால் தான் எச்செயலும் பெருமை மிக்கதாக உணரப்படும் ஒரு புழு பரிணாம வளர்ச்சியடைந்து ஒரு வண்டாக மாறும் வரை பல தடைகளை, இடைஞ்சல்களை சந்திக்க வேண்டி இருக்கும். ஆரம்பத்தில் கடினமாகவும், இயலாது போல தோன்றினாலும் இறுதியில் வளர்ச்சி என்பதை அடைந்தே தீரும். ஆரம்பத்தில் அந்தப் புழுவானது சுயநலம். மோகம் போன்ற மாயவலையில் சிக்கிக் கொண்டிருக்கும்.

அந்த மாயவலையிலிருந்து விடுபட்ட பின் தான் அந்தப் புழு வண்டாக உருமாறும். அது போல் மனிதனும் தன் அஹம் பாவத்தை விட்டுவிட்டு சாத்திய வழியில் தொடர்ந்து பயணித்தால் கடவுளின் அனுக்கிரஹம் பெறலாம். ஆரம்பக் கட்டத்தில் குறுகிய எண்ணத்துடன் இருக்கும் மனம் அஹங்காரத்தை. அதனை விட்டுவிடும் போது மனம் விசாலமடைந்து சர்வ சக்தி படைத்தவனாக மனிதன் மாறி விடுகிறான். பின் மனிதன் தன்னுள் தெய்வீகத் தன்மையைக் காண்கிறான். உயிரணுக்கள் விஸ்தாரமடைந்து அஹம் ப்ரஹ்மா நானே கடவுள் என்ற நிலையில் சக்தி பெறுகிறான்.உலகத்தில் சுகம், வளம் யாவற்றையும் வழங்கவல்ல இறைவன் மீது பக்திக் கொண்டு தெய்வீக வழி சென்று தெய்வீக ஆற்றல் பெறும் போது வாழ்க்கை வளமாகும் என்பது திண்ணமே.

ஒவ்வொரு நிகழ்வுகளிலும் உன்னை நீயே உணர்ந்து கொள். ஆத்மசக்தி அடையும் நேரம் வந்ததும், கடவுளை அறிவது எளிதாகி விடும். இறைவனை அடையும் நேரம் ஏற்படும். அதே ஆனந்தம் நம்பிக்கையுடன் ஒரு செயலில் இறங்கும் போதும் ஏற்படும்.

தன்னிடம் மறைந்துள்ள சக்தியை உணராமல் ஒருவன் சக்திமான் ஆக முடியாது. எவன் ஒருவன் தன்னை உணர்கிறானோ, தன் சக்தியை வெளிப்படும் முயற்சியில் தொடர்கிறானோ அவன். தான் நினைத்தப்படி அதுவாகவே மாறி விடுவான். சித்திகளில் எல்லாம் மிக உயர்ந்தது தன்னை உணர்வதே ஆகும்.

லட்சத்தில் ஒரு சிலரே தன்னை உணர முற்படுவர். அவர்களில் ஒரு சிலரே தொடர் முயற்சியில் ஈடுபடுவர். அவர்களில் ஒரு சிலரே கடவுளை அடைவர் மனித உடலிருந்து பிறப் பெடுத்தவர்களில் ஒரு உணர்ந்துள்ளனர். சிலரே ஆத்மாவை

மனிதன் உடலில் காமம், கோபம், மோகம், சந்தோஷம். தண்டனை. தயவு. தாட்சன்யம் ஆகிய அனைத்து உணர்வுகளும் உள்ளன. அவைகளே ஆனந்தத்திற்கு காரணமாகவும் அந்த ஆனந்தத்தை பெறுவதில் ஏற்படும் தடைகளாகவும் எதிரும் புதிருமாக விளங்குகின்றன. அனைவருக்கும் ஆனந்தம் அடிப்படை, ஆனந்தமே லட்சியம். லட்சியத்தை அடைவது என்பது ஆத்மாவிலேயே அடங்கியுள்ளது. எவன் ஒருவன் ஆத்மா வழி நடந்து தன் ஆத்மாவை பகுத்து அறிகிறானோ அவன் தான் நினைத்ததை நினைத்தப்படி அடைந்து விடுவான். பரமாத்மாவின் அம்சமே ஆத்மா. எனவே ஆத்ம ஞானம் (தன்னை அறிதல்) அடைந்தவனுக்கு கடவுளை அடைவது மிக எளிதாகி விடும்.

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்







வத்தளை இந்து மன்றம் ஏற்பாடு செய்த விநாயகர் சதுர்த்தி விழா வத்தளை இந்து மன்ற ஏற்பாட்டாளர்களான சுரேஷ் சுப்பிரமணியம், கண்ணன் மற்றும் ராஜா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. வத்தளை ஹெமில்டன் பூங்கா வளாகத்தில் இருந்து விநாயகர் இரதபவனியாக மட்டக்குளி காக்கைத்தீவு கடற்கரை பூங்காவை நோக்கி ஊர்வலமாக வந்து அங்கு சிறப்பு பூஜை வழிபாடுகள் இடம்பெற்ற பின் காக்கைத்தீவு சமுத்திரத்தில் விக்கிரகம் சங்கமம் செய்யப்பட்டது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 செப்டெம்பர் 12 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 04.46
லுஹர் - 12.08
அஸர் - 03.14
மஃரிப் - 06.13
இஷா - 07.23

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் ஆவணி 27
ராகுகாலம் : பகல் : 7.30 - 9.00வரை
சுபநேரம் : மாலை : 6.00 - 7.30வரை
யோகம்: சித்தயோகம்
திதி: திதித்துவயம்



ஆசிய வலைப்பந்து சம்பியன் பட்டம் வென்ற

# இலங்கை அணிக்கு ஜனாதிபதி வாழ்த்து!



2022 ஆசிய வலைப்பந்து சம்பியன் பட்டம் வென்ற இலங்கை அணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை வலைப்பந்தாட்ட அணித் தலைவர் உள்ளிட்ட அணியின் ஏனைய வீரர்களின் ஒற்றுமை மற்றும் மகத்தான அர்ப்பணிப்பினால், சவால்களுக்கு மத்தியிலும் இலங்கை அணிக்கு இந்த சிறந்த வெற்றியைப் பெற முடிந்ததாக ஜனாதிபதி அவர்கள் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். சர்வதேச விளையாட்டு ரசிகர்கள் உள்ளிட்ட விளையாட்டை விரும்பும் அனைவரது கவனத்தையும் இலங்கையின் பக்கம் ஈர்த்த இந்த வெற்றி, இலங்கை அணி வீர, வீராங்கனைகளுக்கு மட்டுமன்றி அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் உத்வேகமாக அமையும் எனவும் ஜனாதிபதி அவர்கள் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இலங்கை வலைப்பந்தாட்ட அணி மேலும் வெற்றிகளை பெறவும் ஜனாதிபதி அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

# மின்சார சபைக்கான கட்டண நிலுவை பல பில்லியனானது

## வீட்டு பாவனையாளர்களால் மட்டும் 9.56 பில். ரூபா



இலங்கை மின்சார சபைக்கு வீடுகள், சிறுதொழில் நிறுவனங்கள் மற்றும் பாரிய அரச நிறுவனங்கள் உட்பட மொத்த நுகர்வோர், கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை 14.6 பில்லியன் ரூபா கொடுப்பனவுகளை செலுத்த தவறியுள்ளனர்.

இதில் 9.56 பில்லியன் ரூபா கட்டணங்கள் சாதாரண வீட்டுப் பாவனையாளர்களின் கட்டணங்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் கீழ் இந்த நிலுவைத் தொகையை வசூலிப்பது இன்றியமையாததாகும்.

எனவே, மின்சார நுகர்வோர் தங்கள் நிலுவைத் தொகையை விரைவில் செலுத்த வேண்டும் என்று மின்சார சபை கோரியுள்ளது.

தரவுகளின்படி, ஜூன் 30 ஆம் திகதிக்குள் தொழிற்சாலைகள் செலுத்தத் தவறிய கட்டணப் பெறுமதி 2.7 பில்லியன் ரூபாய்களாகும். அடுத்த அதிகபட்ச நிலுவைத் தொகையான 870 மில்லியன் ரூபாய்கள், இராணுவம், பொலிஸார் ,சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகள், கல்வி,

06

# எரிபொருள் தாங்கிய நான்கு கப்பல்கள் நாட்டுக்கு வருகை

150 மில்லியன் டொலர்களை திரட்டும் முயற்சியில் அரசு



இரண்டு டீசல் கப்பல்களும் ஒரு கச்சா எண்ணெய் கப்பலும் ஏற்கனவே கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ள நிலையில் மற்றுமொரு பெற்றோல் கப்பல் இன்று வரவுள்ளது.

இந்த நான்கு எரிபொருள் கப்பல்களில் ஒரு டீசல் கப்பலுக்கான கொடுப்பனவின்

06

# யானை தாக்கி குடும்பஸ்தர் பலி

(ரொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஈச்சம்குளம் காட்டுப்பகுதியில் யானை தாக்கி நபரொருவர் உயிரிழந்துள்ளதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர். தம்பலகாமம் 96ம் கட்டைப் பகுதியில் வசித்துவரும் பியதிஸ்ஸ பண்டா (41வயது) என்பவரே யானையின் தாக்குதலினால் உயிரிழந்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

கடந்த ஒன்பதாம் தேதி விறகு எடுப்பதற்காக குறித்த நபர் முள்ளிப்பொத்தானை ஈச்சம்குளம் காட்டுப்பகுதிக்கு சென்றவர் இன்னும் வீடு திரும்பவில்லை என உறவினர்கள் நேற்று 11 ஆம் திகதி தம்பலகாமம் பொலிஸ் நிலையத்தில்

06

பிரதமர் தினேஷ் குணவர்தன சபை முதல்வராக பதவிவகித்த போது:

# மீதப்படுத்திய எரிபொருள் கொடுப்பனவு ரூ.15,68,000ஐ மீள கையளித்துள்ளார்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



பிரதமர் தினேஷ் குணவர்தன தாம் பாராளுமன்ற சபை முதல்வராக பதவி வகித்த காலத்தில் உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட எரிபொருளுக்கான கொடுப்பனவை மீதப்படுத்தி ஒருதொகை நிதியை பாராளுமன்றத்திற்கு மீள வழங்கியுள்ளார்.

அதற்கிணங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன தாம் சபை முதல்வராக பதவிவகித்த 2020 ஜனவரி மாதம் முதல் 2022 ஜுலை மாதம் வரையான காலப்பகுதியில் அவருக்கு வழங்கப்பட்ட எரிபொருள் கொடுப்பனவை மீதப்படுத்தி 1,568,000 ரூபாவை பாராளுமன்றத்திற்கு கையளித்துள்ளார். அவர் அதனை பாராளுமன்ற சபை முதல்வர் அலுவலகத்திடம் கையளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, பிரதமர் தினேஷ் குணவர்தன சபை முதல்வராக பதவிவகித்த காலத்தில் அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச நிறுவனங்களினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கைகளின் பிரதிகள் தொடர்பில் ஏற்பட்ட பெருமளவு செலவை குறைப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருந்தார்.

06

# சபாநாயகரின் தாயார் காலமானார்

(வெலிகம தினகரன் நிருபர்)



சபாநாயகரும் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தாயார் நந்தாவதி ஹெட்டியாராச்சி (வயது 96) தமது மாகந்துர இல்லத்தில் (09) காலமானார்.

9 பிள்ளைகளின் தாயாரான இவர், 1926 மே மாதம் 29 ம் திகதி பிறந்தார். அன்னாரது இறுதிக் கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (11) பிற்பகல் மாத்தறையில் நடைபெற்றது.

இதில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உத்தியோகத்தர்கள், அரச முத்தியஸ்தர்கள், உறவினர்கள், பொதுமக்கள் என பெரும் திரளானோர் கலந்து கொண்டனர்.

# ஐக்கிய நாடுகள் பொதுச் சபை அமர்வுகளில் அலி சப்ரி!



எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை அமர்வுகளில் இலங்கையின் சார்பில் வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி பங்கேற்கவுள்ளார்.

இந்த அமர்வில் அரச தலைவர் அல்லது அரசாங்க தலைவர் பங்கேற்கும்போது அவர்களின் உரைக்கு முன்னுரிமை வழங்கப்படும் வகையில் அவர்களின் உரைகளுக்கு முன்னுரிமை தினங்கள் ஒதுக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி, கடந்த மாதம் உரையாற்றுவோர் பட்டியலில் வெளியிடப்பட்டபோது அதில் இலங்கையின் அரச தலைவருக்கு செப்டம்பர் 21ஆம் திகதியன்று உரைக்கான திகதி ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது அந்த திகதி 24ஆம் திகதிக்கு பின் தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச தலைவர்கள் மற்றும் அரசாங்கத் தலைவர்கள் ஆகியோருக்கு உரைகள் வழங்கப்பட்ட பின்னரே நாடுகள் சார்பிலான அமைச்சர்களின் உரைகள் இடம்பெறும் என்ற அடிப்படையில் இலங்கையின் உரை, 24ஆம் திகதியில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த தடவை ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை அமர்வில் ரஷ்ய ஜனாதிபதி விளாதிமிர் புட்டின்,

06

நிலக்கரி விநியோகஸ்தர்களுக்கு எதிரான

# குற்றச்சாட்டு தீர்க்கப்பட்ட பின்னரே நிலக்கரி விநியோகம்

## அமைச்சர் கஞ்சன தெரிவிப்பு



நிலக்கரி விநியோகஸ்தர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் சட்டரீதியாக தீர்க்கப்படும் வரையில் விநியோகம் இடம்பெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

குறைந்த விலையில், நிலக்கரியினை விநியோகிப்பதற்கு விலை மனுவினை பெற்றுக்கொண்ட விநியோகஸ்தர்கள் மீது இந்த குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன. அனல் மின் நிலையங்களுக்கு தேவையான நிலக்கரியினை பெற்றுக்கொள்வதற்காக, விநியோகஸ்தர்கள் மீது எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களை தீர்க்கும் நோக்கில் வலுசக்தி அமைச்சருக்கும், விநியோகஸ்தர்களுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களை சட்டரீதியாக தீர்ப்பது மற்றும் நிலக்கரி கொள்வனவு தொடர்பிலான மாற்று யோசனைகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

# சில அரச நிறுவனங்களால் ஒரு இலட்சம் கோடி இழப்பு

## மத்திய வங்கி ஆளுநர் அதிர்ச்சித்தகவல்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



அரச நிறுவனங்களான கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள் மூலம் அரசாங்கத்துக்கு ஒரு இலட்சம் கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க இதனை தெரிவித்துள்ளதுடன் மத்திய வங்கியின் அறிக்கையிலும் அது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைய நட்டம் ஈட்டும் நிறுவனங்கள் தொடர்பில் அரசாங்கம் தொடர்ந்தும் நிதி சுமைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு நட்டம் ஏற்பட்டுள்ள அரசாங்க நிறுவனங்களில் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம், மின்சார சபை, இலங்கை போக்குவரத்து சபை உள்ளிட்ட நிறுவனங்கள் பிரதான இடத்தை வகிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிறுவனங்கள் காரணமாக தொடர்ந்தும் அரசாங்கத்தினால் மேலும் சுமைகளை ஏற்க முடியாது என தெரிவித்துள்ள அவர்,இவ்வாறு நட்டம் ஏற்படும் நிறுவனங்கள் இனங்காணப்பட்டு அவற்றை மறுசீரமைப்பு செய்வது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

# "SAI BHAJAN" ஆங்கில நூல் வெளியீடு

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையத்தின் மகளிர் அணித் தலைவி திருமதி சர்வகுணதேவி சண்முகநாதன் அவர்களின் தொகுப்பு நூலான "SAI BHAJAN" ஆங்கில நூல் பௌர்ணமி தினமான 10ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4. 00 மணிக்கு அறங்காவலர் சபைத் தலைவர் எஸ். என். உதயநாயகம் தலைமையில் வெளியிடப்பட்டது, நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்திய கலாசார நிலையத்தின் பணிப்பாளர் ரேவந் விக்ரம் சிங் கலந்து கொண்டு "சாயி பஜன்" நூலின் முதல் பிரதியை உதயநாயகத்திடம் இருந்து பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.



கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போஷாக்கு உணவுக்கான

# ரூ. 20,000 கொடுப்பனவு இம்மாதத்தில் வழங்க தீர்மானம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

இந்த வருடத்தின் ஜூன் மற்றும் ஜுலை மாதங்களில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்பட வேண்டிய 20,000 ரூபா போஷாக்கு உணவுக்கான கொடுப்பனவு இம்மாதத்தில் வழங்கப்படுமென மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.கடந்த ஜூன் மற்றும் ஜுலை மாதங்களில் மேற்படி தொகையை பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு இம்மாதத்தில் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. அதுதொடர்பில் அமைச்சு தெரிவிக்கையில்,

06

# சிறைக்கைதி திடீர் மரணம்

## விசாரணைகள் ஆரம்பம்

அநுராதபுரம் தினகரன் நிருபர்

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைத்திருந்த சிறைக் கைதியொருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

போதைப் பொருள் விற்பனை தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த கைதி யொருவர் அநுராதபுரம் சிறைச்சாலையில் நேற்று முன்தினம் (10 ) உயிரிழந்த சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த முறைப்பாட்டினை அடுத்தே அநுராதபுரம் பொலிஸ் நிலைய

06

# போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் மூவர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில்

## சுற்றிவளைப்பின் போது தாக்குதல்

லோரன்ஸ் செல்வநாயகம்

போதைப்பொருள் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போதைப்பொருள் பொலிஸ் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் மீது இனந்தெரியாத சிலர் நடத்திய தாக்குதல்களினால் மூவர் காயமடைந்து புத்தளம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். புத்தளத்திலிருந்து கொட்டுக்கச்சி பிரதேசத்திற்கு போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட இருவரை கைதுசெய்வதற்காக சென்றபோதே அவர்கள் மூவரும் தாக்குதலுக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கைதுசெய்ய சென்ற மேற்படி சந்தேக நபர்கள் இருவரையும் மோட்டார் சைக்கிளில் ஏற்றிச்சென்றபோது இடையில் மறைந்திருந்த இளைஞர் கும்பலொன்று மேற்படி சிவில் உடைகளில் காணப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் இரும்பு கம்பிகள் மற்றும் தடிகளால் மனிதாபிமானமற்ற ரீதியில் தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் அதனையடுத்து 1990 இலக்க அவசர அம்பியூலன்ஸ் வண்டிகள் வரவழைக்கப்பட்டு அவர்கள் புத்தளம் அரசாங்க வைததியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

அவர்களுக்கு ஆரம்பகட்ட சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளதுடன் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்காக வார்ட்டுகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் புத்தளம் வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


# அறிவித்தல்

## ஹஜ் பயணத்தினை உறுதிப்படுத்துவதற்காக திணைக்களத்தில் வைப்புச் செய்த பணத்தினை மீளப்பெற்றுக் கொள்ளல்

2012ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரை ஹஜ் பயணத்தினை உறுதிப்படுத்துவதற்காக மீளளிப்புத் தொகையாக ரூபா 25,000/- செலுத்தியவர்களில் இதுவரை இத்தொகையினை மீளப் பெற்றுக் கொள்ளாதவர்கள் பின்வரும் ஆவணங்களை சமர்ப்பித்து மீளளிப்புத் தொகையினை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

- திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப் பிரதி (Orginal Receipt)
- தேசிய அடையாள அட்டையின் பிரதி (N.I.C. copy)
- கடவுச்சீட்டின் பிரதி (Passport copy)
- வங்கிக் கணக்கை உறுதிப்படுத்தும் ஆவணம் (கணக்கு வைத்திருப்பவரின் பெயர், கணக்கிலக்கம் தெளிவாக இருத்தல் வேண்டும்.)
- விண்ணப்பப்படிவம் (விண்ணப்பப்படிவத்தினை www.muslimaffairs.gov.lk எனும் திணைக்கள இணையத்தள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.)

மேற்குறித்த ஆவணங்களை பணிப்பாளர், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், இல. 180, டீ. பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு -10. எனும் முகவரிக்கு 2022 ஒக்டோபர் 30ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**இப்றாஹிம் அன்ஸார்,**
**பணிப்பாளர்,**
**முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,**
**தொலைபேசி : 011 2667909/011 2669972**
**Email : director@muslimaffairs.lk**
**Fax : 011 2672147**

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 27ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஸபர் பிறை 15

## குறள் தரும் சிந்தனை



அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தார்
அல்லார்முன் கோட்டி கொளல்

*அறிவுள்ளவர்கள், அறிவில்லாதவர்களின் அவையில் பேசுவது, தூய்மையில்லாத முற்றத்தில் சிந்திடும் அமிழ்தம்போல் வீணாகிவிடும்.*

# அமைதியும், பொறுமையுமே இவ்வேளையில் அவசியம்!

பொருளாதார வீழ்ச்சிக்குள் தள்ளப்பட்டிருந்த எமது நாடு படிப்படியாக மீண்டெழுந்து வருவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. அதலபாதாளத்தில் வீழ்ந்திருந்த நாட்டை மீண்டும் முன்னைய நிலைமைக்குக் கொண்டு வருவதென்பது ஒரே நாளிலோ அல்லது ஓரிரு மாதங்களிலோ சாத்தியமாகக் கூடிய காரியமல்ல. அதற்காக நாம் வருடக்கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளது.

பொறுமையும் அர்ப்பணிப்புமே இன்றைய வேளையில் மக்களுக்கு அவசியமாகின்றன. ஜனாதிபதி தலைமையிலான இன்றைய அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற பொருளாதார மீட்புத் திட்டங்களுக்கு அரசியல்வாதிகள் அனைவரும் நிபந்தனையின்றி ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியம்.

ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதனாலோ அல்லது அமைதியின்மையை ஏற்படுத்துவதாலோ நெருக்கடி நிலைமைக்கு தீர்வு ஏற்பட்டு விடப் போவதில்லையென்பதை அனைவரும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். இன்றைய இக்கட்டான நிலைமையிலிருந்து விடுபடுவதற்கான காத்திரமான நடவடிக்கைகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்காக அனைத்துத் தரப்பினரும் கட்சி பேதங்களை மறந்து ஒத்துழைப்பை வழங்க வேண்டியதே நாட்டின் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான ஒரே வழியாகும்.

ஆர்ப்பாட்டங்களை மீண்டும் முன்னெடுத்து நாட்டில் குழப்பகரமான நிலைமையை உருவாக்குவதற்கு ஒருசில தரப்பினர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகின்றது. அவர்கள் இவ்வாறு முயற்சி செய்வார்களானால் நாட்டில் பொருளாதார நிலைமை மீண்டும் வீழ்ச்சிக்குச் சென்று விடுமென்பதை மறந்து விடலாகாது.

நாட்டில் முன்னர் மிகவும் முக்கியமான சிக்கலாக இருந்தது எரிபொருள் பிரச்சினை ஆகும். சமையல் எரிவாயுவுக்கான கியூவரிசைகள் முடிவுக்கு வந்து விட்டன. பெற்றோல், டீசல் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வதிலும் சிரமங்கள் பெருமளவில் குறைந்து கொண்டு வருகின்றன. கியூவரிசைகள் விரைவில் இல்லாமல் போய் விடுமென்பதே நம்பிக்கையாகும்.

அதேபோன்று பொருளாதார சரிவும் மீண்டும் சீராகி விடுவதற்கான அறிகுறிகளே தென்படுகின்றன. கடந்த காலத்தில் அரசினால் கடைப்பிடிக்கப்பட்ட தவறான பொருளாதாரக் கொள்கைகளும் இன்றைய பொருளாதார நெருக்கடிக்குக் காரணமென்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. அவ்வாறான தவறான பொருளாதாரக் கொள்கைகளைச் சீரமைத்து, நடைமுறைச் சாத்தியமான வழியில் நாட்டை முன்கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே மக்கள் சிறிது காலம் பொறுமை காக்க வேண்டியது அவசியமாகின்றது.

ஆர்ப்பாட்டங்கள் என்பதன் பேரில் நாட்டில் வன்முறையைக் கட்டவிழ்த்து விடுவதற்கு எந்தவொரு தரப்பினரும் முற்படுவார்களேயானால், பொறுப்புள்ள அரசாங்கமென்ற வகையில் மக்களின் பாதுகாப்பு கருதி நாட்டில் அமைதியைக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமென்பதை மறந்து விடலாகாது. நாட்டில் ஜனநாயகத்தன்மை சீரழிவதற்கு அரசாங்கம் இடமளிக்காதென்பதையும் சம்பந்தப்பட்ட தரப்பினர் புரிந்து கொள்ள வேண்டும்.

நாடு இப்பொழுதுதான் வீழ்ச்சியிலிருந்து படிப்படியாக மீண்டெழுந்து கொண்டு வருகையில், மீண்டும் அமைதியின்மையை கட்டவிழ்த்து விடுவதற்கு எவருமே இடமளிக்கலாகாது. அமைதியை விரும்புகின்ற மக்கள் இவ்வாறான உள்நோக்கம் கொண்ட முயற்சிகளுக்கு எதிராக குரல் கொடுப்பது அவசியம். பொறுமையே இன்றைய வேளையில் மக்களுக்கு அவசியமாகின்றது.

நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வந்து, நாட்டை மீளக்கட்டியெழுப்புவதாயின் அரசியல் பேதங்களுக்கு அப்பால் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படுவதே அவசியமாகும். நாட்டின் நலன்களை மறந்து அரசியல் ஆதாயம் தேடி அரசியல்வாதிகள் செயற்படுவார்களானால், இன்றைய பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீண்டெழுவதென்பது இயலாத காரியமாகிப் போய்விடும்.

இந்த விடயத்தை எமது அரசியல்வாதிகள் அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். இது அரசியல் செய்வதற்கான வேளையல்ல. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை எமது நாடு அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கின்றது. நாட்டை மீளக்கட்டியெழுப்புவதே அனைத்து தரப்பினரதும் கடமையாக இருக்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கடனுதவி வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதையும் இவ்விடத்தில் குறிப்பிட்டுக் கூற வேண்டியுள்ளது. நாட்டை பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீட்டெடுப்பதற்கு சர்வசே நாணய நிதியத்தின் கடனுதவி அவசியமானதென்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியை முன்கூட்டியே இலங்கை பெற்றிருக்க வேண்டுமென்பதே பொருளாதார நிபுணர்களின் கருத்தாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி தாமதமாகிய வேளையில், ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதுமே அந்த உதவி சாத்தியமாகியதென்பதை மறுப்பதற்கில்லை. அதேபோன்று பொருளாதார மீட்சித் திட்டங்களும் ஜனாதிபதியின் முயற்சியினாலேயே முன்னேற்றமடைந்துள்ளனவென்பதை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

நாம் சில வலிகளைப் பொறுத்துக் கொண்டு சில காலம் பயணம் செய்ய வேண்டியுள்ளது. பொருளாதாரம் பழைய நிலைமைக்கு வருமென்ற நம்பிக்கை தென்படுகின்றது. ஆனால் அதற்கு சில காலம் செல்லுமென்பதை மறந்து விடலாகாது.

editor.tkn@lakehouse.lk

# மகாகவி பாரதியார் மறைந்து நேற்றுடன் 101 வருடங்கள்

## எழுத்தாளர் முருகபூபதி எழுதிய 'பாரதி தரிசனம்' மின்னூல் வெளியீடு

மகாகவி பாரதியார் மறைந்து நேற்று 11 ஆம் திகதி 101 வருடங்களாகின்றன. இந்நினைவு நூற்றாண்டில் எழுத்தாளரும், ஊடகவியலாளருமான லெ. முருகபூபதி எழுதியிருக்கும் பாரதி தரிசனம் என்ற புதிய படைப்பு மின்னூலாக வெளியாகியுள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி மகாகவி பாரதியின் நினைவு நூற்றாண்டு ஆரம்பமானது.





அதனை முன்னிட்டு முருகபூபதி எழுதிவந்த பாரதிதரிசனம் தொடர் தற்போது மின்னூலாக கிண்டிலில் வெளியாகின்றது.

பன்னிரண்டு அங்கங்கள் கொண்டிருக்கும் இந்நூல் நேற்று 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, மெய்நிகரில் வெளியிடப்பட்டது.

மெய்நிகர் அரங்கில் இந்நூல் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. அகில இலங்கை கம்பன் கழகத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரும், இலக்கியவாதியும் சிட்னி தமிழ்ப் பாடசாலைகளின் உயர்தரவகுப்பு ஆசிரியருமான திருநந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கே.காளிராஜன் (கப்பலோட்டிய தமிழன் வ. உ.சி. அவர்களின் பேரன்), கவிஞர் இரா. உமாபாரதி (பாரதியாரின் கொள்ளுப்பேத்தி), முனைவர் அரிமளம் பத்மநாபன் (புதுவை பல்கலைக்கழகம்) ஆகியோர் உரையாற்றினர்.

ஏற்புரையை முருகபூபதி ( நூலாசிரியர்) நிகழ்த்தினார். கலை,இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள், பாரதிஇயல் ஆய்வாளர்கள் பலர் இந்த மெய்நிகர் அரங்கில் இணைந்து கொண்டனர்.






# திருமலை பெண் இலக்கிய ஆளுமைகள் ஒன்றுகூடல்

திருகோணமலை மாவட்ட பெண் இலக்கிய ஆளுமைகளை ஒருங்கிணைத்து கலைத்துறைசார் வாண்மையை மேலும் முன்னோக்கி நகர்த்தும் நோக்கில் 'ஒரு பொழுதில் ஒன்று கூடுவோம்' எனும் தொனிப்பொருளில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒன்றுகூடல் அன்மையில் மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்ஷன் தலைமையில் இடம்பெற்ற இந்த ஒன்றுகூடல் நிகழ்வுக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்த ஒன்றுகூடலின் வளவாளர்களாக தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெயகௌரி ஸ்ரீபதி, திருகோணமலை மெதடிஸ்த மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி சுபத்திரா ஜோன் தேவதாஸ், திருகோணமலை புனித மரியாள் கல்லூரியின் அதிபர் அருட்சகோதரி நிரோஷா, முன்பள்ளி அதிபர் அருஷா ஜெயராஜா, சட்டத்தரணி திருமதி ஐஸ்வர்யா சிவகுமார், பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற மாகாணப் பணிப்பாளர் திருமதி என்.ஸ்ரீதேவி, கிழக்கு பல்கலைக்கழக நூலகர் திருமதி பானு சுதாகரன், சுதந்திர ஊடகவியலாளர் கல்யாணி நவரெத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இதன்போது தற்கால இடர் மிகுந்த சூழலை எதிர்கொள்வதில் பெண்களின் பங்களிப்பு, பெண்களும் சட்டமும், பெண் ஆளுமையும் இன்றைய நிலையும், நிர்வாகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள், பெண்களும் நிர்வாக ஆற்றலும், பேகர் சமூக பண்பாடும் தற்காலத்தின் சவால்களும், பெண் தலைமைத்துவ குடும்பமும் தற்காலத்தில் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களும், பெண்களும் அரசியலும், அரங்கும் பெண்களும், தற்கால கல்வி முறைமையில் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் சமூகத்தில் எதிர்கொள்ளும் சவால்கள் என்ற தலைப்புக்களில் பல்வேறுபட்ட முக்கிய விடயங்கள் பேசப்பட்டன.









பாடல், வயலின் இசை, கவிதை, நாடகம், கூத்து போன்ற நிகழ்வுகளும் பெண்களினால் நிகழ்த்தப்பட்டன.

இந்த ஒன்றுகூடலில் கலந்து கொண்ட திருகோணமலை மாவட்ட பெண் இலக்கிய ஆளுமைகளை கௌரவித்து அவர்களுக்கான சான்றிதழ் மற்றும் திணைக்களத்தினால் வெளியீடு செய்யப்பட்ட 100 சிறுகதை அடங்கிய நூல்களை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் சரண்யா சுதர்சன் வழங்கி வைத்தார்.

எம்.எப். நவாஸ்
(திராய்க்கேணி நிருபர்)

# சௌபாக்கிய சமுர்த்தி திட்டம்; வீடமைப்புக்கான அடிக்கல் நிகழ்வு

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவின் எண்ணக்கருவில் உருவான சௌபாக்கிய வேலைத் திட்டத்தின் கீழ் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் நடளாவிய ரீதியில் நடைபெற்று வருகின்றன. இத்தொடரின் கீழ் சமுர்த்தி சௌபாக்கிய 'உங்களுக்கு வீடு | நாட்டுக்கு எதிர்காலம்' எனும் வேலைத் திட்டத்தின் கீழ் இறக்காமம் 05 ஆம் கிராம சேவகர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் புதிய வீடு நிர்மாணத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.சி.எம். தஸ்லீம் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் அஷ்ஷேய்க் எம்.எஸ்.எம். ரஷ்ஷான் (நளீமி) கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் சமுர்த்தி வங்கி முகாமையாளர் டீ.கே. றஹ்மதுல்லாஹ், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் ஏ.எல். ஜெமீல், கிராம சேவகர் பிரிவுக்குப் பொறுப்பான சமுர்த்தி உத்தியோகத்தர் ஏ.எல். பஸீர் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.



வீடற்ற குடும்பங்களுக்கு வீடமைத்துக் கொடுப்பதனூடாக எல்லோரது வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்தும் நோக்குடன் சௌபாக்கிய வேலைத்திட்டத்தின் கீழ் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினுடாக வழங்கப்பட்ட நிதிப்பங்களிப்பு, பிரதேச தனவந்தர்களின் நிதி மற்றும் பொருள் பங்களிப்புடன் இவ்வீடுகள் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

நிரந்தர வீடில்லாத, வறுமைக் கோட்டின் கீழ் உள்ள, பெண் தலைமை தாங்கும், சமுர்த்தி பெறும் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு அவர்களின் சொந்த இடங்களில் வீடமைத்து கொடுக்கும் அரசின் வேலைத்திட்டத்தின் கீழ் இவ்வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு பயனாளிகளுக்கு கையளிக்கப்படவுள்ளதாக சமூர்த்தி வங்கி முகாமையாளர் ரீ.கே. றஹ்மத்துல்லா தெரிவித்தார்.

றிசாத் ஏ. காதர்
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

**84 ஆவது ஜனன தினம் அண்மையில் அனுஷ்டிப்பு**

# செட்டிபாளையத்தில் கலை வளர்த்த சிந்தனைச் செல்வன் மயில்வாகனம்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள செட்டிபாளையத்தில் சிந்தனைச் செல்வன் என்ற புனைபெயர் கொண்ட கவிஞர் க. மயில்வாகனம் ஆவார்.

அவர் கவிதையோடு மட்டுமன்றி நாடகம், நாட்டுக் கூத்து, நாட்டிய நாடகம், வசந்தன், கும்மி, கோலாட்டம் போன்ற கலைகளில் வல்லவராக திகழ்ந்தார்.

மட்/செட்டிபாளையம் பாடசாலையில் அவர் பணிபுரிந்த காலம் (1971_1983) சிறப்பானதாகும்.

இவரது படைப்புக்கள் கவிதை, பாடல், நாடக இயக்கம், நாட்டுக்கூத்து என விரிந்தவெளி கொண்டவை. மாணவர் மன்றங்கள், வாணிவிழா நிகழ்வுகள், பாடசாலைகளுக்கிடையேயான போட்டி நிகழ்வுகள் போன்றவற்றில் அவரது பங்களிப்பு அளப்பரியது.



கவிஞரின் வீடு கலைக்கூடமாகவே காணப்படும். இவ்வாறாக கலைப்பணியோடு நின்று விடாது சமூகத்தை நேசிக்கும் நல்மனிதராக அவர் வாழ்ந்தார்.

நல்லபல சமூகபணிகளை இவ்வூருக்கு செய்து, மக்களோடு மக்களாக எளிமையான வாழ்க்கை வாழ்ந்து, மக்கள் பிரச்சினைகளை தனது பிரச்சினையாக முன்னிலைப்படுத்தி ஊர்போற்ற வாழ்ந்த செட்டியூர் சிந்தனைச் செல்வன் மயில்வாகனம் அவர்களின் 84 ஆவது பிறந்த தினம் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது.

மூ.கோபாலரெத்தினம்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
கிழக்கு மாகாணம்

# பொருளாதார பின்னடைவுக்கு இனவாதமே காரணமாகும்


பாராளுமன்றத்தில் முஷாரப் எம்.பி

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலேயே முதன்மையான நாடாக பார்க்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி அடையாத நாடுகளின் நிலைமையை நோக்கி பின்னோக்கி தள்ளப்பட்டதற்கான அடிப்படைக் காரணம் இனவாதமாகும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ். எம். எம்.முஷாரப் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றியதாவது:

ஒரு சமூகத்திற்காக, ஒரு இனத்திற்காக என்று அரசியல் செய்ய முற்பட்டோமோ அன்றிலிருந்து இந்த நாட்டினுடைய பொருளாதாரம் அதல பாதாளத்திற்கு போய்விட்டது. இனவாதமற்ற சூழ்நிலையை உருவாக்கினால் மாத்திரமே இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியும். இந்த யதார்த்தத்தை சகல இன மக்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையிலே போர்க் குற்றங்கள் தொடர்பில் பேசப்படுகின்ற செப்டம்பர், மார்ச் மாதங்களில் இனவாத பேச்சுக்கள் வரும். அரசாங்கம் மேற்குலகுக்கு எதிராக நிற்கின்ற போதெல்லாம் இலங்கை மிகவும் நெருக்கடியான சர்வதேச அழுத்தத்திற்கு உள்ளாகின்றது. இதுதான் யதார்த்தமாகும்.

எங்கோ இருந்து யாரோ வந்து நமக்கு தீர்வு தருவதை விடுத்து இங்கே உள்ள மக்களிடையே இது எமது தேசம், நாம் எல்லோரும் இணைந்து நாட்டை கட்டி எழுப்ப வேண்டும் என்கின்ற எண்ணம் துளிர் விடுகின்றதோ அப்போதுதான் நாட்டை கட்டியெழுப்ப முடியும்.

இனவாதம் நாட்டை அழித்திருக்கின்றது என்பதை உணர்ந்து கொண்டு இனவாதம் அற்ற தேசத்தை கட்டி எழுப்புவோம் என்று அரசியல் தலைவர்களில் இருந்து எல்லோரும் திருசங்கற்பம் பூண வேண்டும்.


கடந்த ஆட்சிக் காலத்தில் நல்லிணக்கத்தை உருவாக்க அமைச்சு ஒன்று உருவாக்கப்பட்டது. இது வெறுமனே பொழுதுபோக்கிற்காக கண்துடைப்பிற்காக உருவாக்கப்பட்டதாக இருக்கக் கூடாது.

எமது ஜனாதிபதி அவர்கள் 2048 இல் இலங்கையை வளர்ச்சி அடைந்த நாடாக மாற்ற வேண்டும் என்னும் திட்டம் தன்னிடம் இருப்பதாகவும் அதனை காண்பதற்காக தான் உயிரோடு இருப்பேனா என்றும் அதனை முன்னெடுத்துச் செல்ல எல்லோரும் தன்னோடு சேர்ந்து பயணிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார். அவரின் கருத்து வரவேற்கத்தக்கதாகும். பாராளுமன்றத்தில் பல குழுக்கள், அமைப்புகள் உருவாக்கப்படுகின்றன. அதில் என்ன முடிவுகள், என்ன வெற்றிகள் நடந்திருக்கின்றது என்றால் அது கேள்விக்குரியதாகவே இருக்கின்றது. இந்த விடயங்களை தேசிய சபையினூடாக கொண்டு வாருங்கள். ஆட்சியாளர்கள் மாறினாலும், அதிகாரம் மாறினாலும் இந்தத் திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கான வழிவகைகளை செய்யுங்கள்.

நமது உற்பத்தியில் எவ்வளவு தடங்கல்கள் இருந்தாலும், பிரச்சினைகள் இருந்தாலும் நாமே உற்பத்தி செய்து உற்பத்தி பொருளாதாரத்திற்கு வழி ஏற்படுத்துவோம். அதற்கு இந்தப் பாராளுமன்றம் கால்கோலாக அமைய வேண்டும்."

**எஸ்.எம்.அறூஸ் ...**

# தமிழுக்கு அளவில்லாப் பணியாற்றிய ஆற்றலாளன் அமரர் இராஜகுலேந்திரா



## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் தலைவரும், பேரவை உறுப்பினருமான குழந்தைவேலு இராஜகுலேந்திரா மறைவு

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் தலைவரும், பேரவை உறுப்பினருமான குழந்தைவேலு இராஜகுலேந்திரா அவர்கள் காலமான செய்தியை அறிந்ததும் நாம் அதிர்ந்து போனோம்.

அன்னாரின் இழப்பு தமிழுக்கும் தமிழ் உலகிற்கும் பேரிழப்பு ஆகும். அத்துடன் தகைசால் தமிழ் அறிஞனாகவும், ஆளுமையாளனாகவும் அவரது இழப்பு என்பது தமிழ்ச் சங்கத்திற்கு நிரப்பப்பட முடியாத ஒரு வெற்றிடமாகவே என்றும் இருக்கும்.

2004 ஆம் ஆண்டில் ஆயுட்கால உறுப்பினராக கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இணைந்து கொண்ட அவர், பின்னர் நிர்வாகக்குழு உறுப்பினராகி, துணைத் தலைவராகி, 2018 ஆம் ஆண்டில் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றவர். மூத்த சட்டத்தரணியாக அவரை நாடு அறிந்திருந்தாலும், தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவே அவரை தமிழ் உலகம் அறிந்திருந்தது.

தமிழ்ச் சங்கத்தின் நிலையான இயக்கம் கருதி 2018இல் சங்க அமைப்பு விதிகள் திருத்தப்பட்டு பேரவை ஒன்று உருவாக்கப்பட்டு பேரவையின் மூலமாக நிர்வாகக்குழு தெரிவு செய்யப்படும் புதிய முறைமையை அறிமுகப்படுத்தியபோது அதன் அமுலாக்கத்திற்கு தலைவராக இருந்து பெரும்பணி ஆற்றியவர் முன்னாள் தலைவர் இராஜகுலேந்திரா.

தமிழ்ப் பேறிஞர் கந்தமுருசேனார் புலமை வழிவந்த தமிழ்ப் புலமையையும் சுவீகரித்துக் கொண்ட இராஜகுலேந்திரா அவர்கள், தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு என பரந்து விரிந்த தளங்களில் கற்றலும் தேடலும் உடையவராய் இருந்தார்.

இந்த மரபுசார் பண்புவழி நின்று தமிழ்ச் சங்கத்தின் தமிழ்ப்பணிகளை ஆற்றுப்படுத்துவதிலும், தக்க நேரத்தில் தகுந்த ஆலோசனைகளை முன்வைத்து தீர்க்கமான முடிவுகளை எடுத்து செயற்படுவதிலும் தனி ஆளுமையாக வெளிப்பட்டவர் இராஜகுலேந்திரா.

சட்டம், இலக்கியம், வரலாறு போன்ற விடயங்களில் ஆளுமை மிக்க இவர், திருக்குறளை அணு அணுவாகப் பிரித்துக் பொருள் சொல்லும் சக்தி கொண்டவர். சிறந்த கவிஞராக, மேடைப்பேச்சாளராக அனைவரையும் கவரும் வண்ணம் உரையாற்றும் வல்லமை கொண்டவராகவும், ஓய்வு நேரங்களில் எப்போதும் வாசிக்கும் பழக்கத்தையும் முன்னெடுத்து வந்தார்.

சங்க நிகழ்வுகளான இலக்கியக்களம், அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு முற்போக்கான கருத்துக்களை வெளிக்கொணரும் ஆளுமை மிக்க தலைவராகவும் திகழ்ந்தார்.

இவரது நாவில் தவழ்ந்து வரும் தமிழுக்கு தனியான ஒரு கம்பீரம் உண்டு.

**கொழும்புத் தமிழ்ச் சங்கம் அனுதாபம்**

பேச்சாற்றலில் தனக்கானதொரு பாணியை உருவாக்கி தமிழ் உள்ளங்களைக் கவர்ந்தவர் அவர். அனைவருடனும் அன்பாகப் பழகும் சுபாவம் கொண்ட இவர், இலங்கையின் மத்திய மாகாணசபை உறுப்பினராக இருந்து மலையக மக்களுக்கு பெரும்பணி ஆற்றியவர்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் பேரவை உறுப்பினராகவிருந்து தமது பணிகளைத் தொடர்ந்ததுடன், தமது துணைவியார் திருமதி சுகந்தி இராஜகுலேந்திராவையும் தனது மகள் சட்டத்தரணி எழில்மொழி ஆதீஷ் அவர்களையும் இணைத்து சங்கப் பணிகளை முன்னெடுத்தவர்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்ப உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

# மஹதிவுல்வெவ குளத்தில் கண்கவரும் பறவை கூட்டம்



திருகோணமலை மஹதிவுல்வெவ குளத்தில் புதிய வகை ஒரே இனத்தைச் சேர்ந்த பறவைகள் அதிகளவில் நடமாடுவதை காணக் கூடியதாக இருக்கின்றது. காலநிலை மாற்றத்தினால் இந்தப் பறவைகள் வெளிநாடொன்றில் இருந்து வந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. திருகோணமலை_ ஹொரவ்பொத்தானை பிரதான வீதியினூடாக செல்லும் வழியில் மஹதிவுல்வெவ குளம் அமைந்துள்ளது. இக்குளத்தை நோக்கி தற்போது சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ள நிலையில், வெளிநாட்டுப் பறவைகள் நடமாடுவது கண்களுக்கு விருந்தாக உள்ளது. இந்தப் பறவைகள் வட்டமாகவும், நீண்ட வரிசையிலும் நின்று கொண்டிருப்பதை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. வீதியால்செல்பவர்களைபார்க்கத்தூண்டும்வகையில் இப்பறவைகளின் காட்சி அமைந்துள்ளது.

**அப்துல்சலாம் யாசீம்...**
(ரொட்டவெவ குறூப் நிருபர்)

# அறுவடை செய்த நெல்லை சந்தைப்படுத்த முடியாத நிலையில் மாந்தை கிழக்கு விவசாயிகள்

(பரந்தன் குறூப் நிருபர்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு வவுணிக்குளத்தின் கீழ் சிறுபோக செய்கை மேற்கொண்ட விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை சந்தைப்படுத்த முடியாத சூழ்நிலையில் இருப்பதாக கவலை தெரிவிகின்றனர்.

இவ்வாண்டு சிறுபோக நெற்செய்கையில் வவுனிக்குளம் நீர்ப்பாசனத்தின் கீழ் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்யும் நெல்லை உரிய விலைகளில் சந்தைப்படுத்த முடியாத சூழ்நிலையில் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாக தெரிவித்துள்ளனர். இதேவேளை ஏக்கர் ஒன்றின் அறுவடைக்காக இயந்திரக் கூலியாக 15,000 ரூபாவுடன் அதற்காக செலவாகும் டீசலினையும் பெற்றுக்கொள்கிறார்கள்.

ஆனால் கமநல சேவை நிலையத்தின் ஊடாக ஏக்கருக்கு 10லீற்றர் டீசல் வழங்கப்படுகின்ற போதிலும் கிடைக்கின்ற டீசலானது போதுமானதாக இல்லாத இடத்து மேற்கொண்டு அறுவடை செய்யமுடியாத நிலையில் கையினால் அரிவாள் கொண்டு வெட்டும் சூழ்நிலையும் காணப்படுகின்றது என மேலும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை நாற்பதாயிரம் ரூபாவிற்கு உரத்தினையும் அதிகூடிய விலைகளில் களை நாசினிகளையும் வாங்கி பயன்படுத்தி விவசாயத்தை செய்து உரியவாறு அறுவடை செய்ய முடியாமல் இருப்பதுடன் அறுவடை செய்த நெல்லை அதாவது 75 கிலோ எடைகொண்ட மூடை ஒன்றை ஏழாயிரத்து நாநூறு ரூபாவிற்கே விற்பனை செய்யும் நிலை காணப்படுகின்றது. இதனால் பெரும் நட்டத்தினை எதிர் கொள்ளும் நிலை காணப்படுகின்றது.

இவ்வாறானதொரு நிலைமை நீடிக்கும் பட்சத்தில் விவசாய செயற்பாடுகளை மட்டுப்படுத்தி செய்யும் நிலைமை தான் உருவாகும் எனவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

**தினகரன் வடக்கின் உதயம் Vadakkin Uthayam**

# கைதடி விபத்தில் மீசாலை இளைஞன் படுகாயம்

சாவகச்சேரி விஷேட நிருபர்

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடிச் சந்திப் பகுதியில் 10/09 சனிக்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

பட்டா ரக வாகனமும்மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது. இதில் மோட்டார்சைக்கிளை செலுத்திச் சென்ற மீசாலை கிழக்கு மீசாலையைச் சேர்ந்த 30வயதான மதுசுதன் என்ற இளைஞன் படுகாயமடைந்த நிலையில் உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கொடிகாமம் கெற்பேலியில் கைக்குண்டுகள் மீட்பு

சாவகச்சேரி விஷேட நிருபர்

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெற்பேலிப் பகுதியில் அமைந்துள்ள தனியார் காணி ஒன்றில் இருந்து 09/09 வெள்ளிக்கிழமை 26 கைக் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. குறித்த காணியை உரிமையாளர் உழுத போது சில வெடி பொருட்கள் தென்பட்ட நிலையில் அது தொடர்பாக கொடிகொமம் பொலிஸ் நிலையத்திற்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் விசேட அதிரடிப்படையினர் வெடிக்காத நிலையில் மண்ணில் புதைந்து காணப்பட்ட 26 கைக்குண்டுகளை மீட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வரணி வடக்கில் 8 பவுண் நகை திருட்டு

சாவகச்சேரி விஷேட நிருபர்

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வரணி வடக்கு பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து (09/09) வெள்ளிக்கிழமை காலை 8 பவுண் நகைகள் திருடப்பட்டிருப்பதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

செல்வச் சந்நிதி ஆலயத்திற்கு அணிந்து சென்ற ஆபரணங்களை வீட்டின் அலுமாரியில் பூட்டி வைத்து விட்டு வெளியே சென்ற போது குறித்த திருட்டு இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.








முன்னாள் யாழ் மாநகர முதல்வர் அமரர் பொன். சிவபாலனின் நினைவு தினம் சித்தங்கேணியில் அன்னாரது இல்லத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் நடனேந்திரன், முன்னாள் யாழ் மாநகரசபை உறுப்பினர் தங்க முகுந்தன், முன்னாள் வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் மதியழகராஜா, ஷ்ப்றா கல்வி நிறுவன முதல்வர் ச. ஐங்கரன் மற்றும் அமரரின் குடும்பத்தினர் அமரரின் உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினர். வலி. வடக்கு பிரதேச சபை தலைவரும், முன்னாள் யாழ் மாநகரசபை உறுப்பினர்களும் தமது நினைவுகளைப் பகிர்ந்து கொண்டனர்.

# துன்னாலை காளிகாம்பாள் தேவஸ்தான கும்பாபிஷேகம்

கரவெட்டி தினகரன் நிருபர்




துன்னாலை வடக்கு நவிட்டான்பதி மனோன்மணி சக்தி சமேத காளிகாம்பாள் தேவஸ்தான நூதன புனர்ருத்தன மஹா கும்பாபிஷேகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (11) காலை இடம்பெற்றது.

வெள்ளிக்கிழமை(09) காலை விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகின.

அதனைத் தொடர்ந்து காளியம்பிகை, விநாயகர், முருகன், வைரவர் போன்ற நூதன விக்கிரகங்கள் கிராமத்தை வலம் வந்தன.

பின்னர் மாலை கிரியைகள் நடைபெற்றன.

நேற்று முன்தினம் சனிக்கிழமை (10) காலை 8.00 மணியிலிருந்து எண்ணைக் காப்பு சாத்தும் வைபவம் இடம்பெற்று மாலை 5 மணிக்கு மாலை கிரியைகள் ஆரம்பமாகி நடைபெற்றன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை (11) காலை 6.00 மணி முதல் கிரிகைகள் ஆரம்பமாகி பிரதமை திதியும் பூரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 9 மணி 03 நிமிடம் முதல் 10 மணி 33 நிமிடம் வரையான சுப முகூர்த்த வேளையில் மகா கும்பாபிஷேகம் இடம்பெற்றது.

கும்பாபிஷேக கிரியைகளை பிரதிஷ்டாகுரு கிரிய கிரம ஜோதி சிவாச்சாரியார் திலகம் சிவஸ்ரீ. ராம் சபாநாதக் குருக்கள், கிரிய ஜோதி சிவஸ்ரீ. துஸ்யந்த குருக்கள் ஆகியோர் மேற்கொண்டனர்.

# சுருட்டு பற்ற மூட்டிய தீயில் எரிந்து மூதாட்டி உயிரிழப்பு

(நாகர்கோவில் விஷேட நிருபர்)

சுருட்டினை பற்ற மூட்டிய தீயில் எரிந்த மூதாட்டி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். திரவளவு, வல்வெட்டி, வல்வெட்டித்துறையில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் பவளம் கிருஷ்ணசாமி (வயது 83) என்ற மூதாட்டியே உயிரிழந்துள்ளார்.

கடந்த 04 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வீட்டில் சுருட்டு பற்றுவதற்காக மூதாட்டி தீயினை மூட்டியதாகவும் அத் தீயில் எரிந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில்

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை(10) மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். நேற்று ஞாயிற்றுக்கிழமை(11) பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்த சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார்.

## இராஜகுலேந்திராவின்...

மயானத்தில் பிற்பகல் 4.00 மணியளவில் பூதவுடல் தகனம் செய்யப்படும். சட்டத்தரணி குழந்தைவேலு இராஜகுலேந்திரா இந்தியாவில் கடந்த 2022.09.08 ஆம் திகதி காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இல.34/1 நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தையில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. அன்னாரின் பூதவுடலுக்கு ஏராளமானோர் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

## மார்ட்டின் சுங்கோங் நேற்று ...

அழைப்பையேற்று அவர் நேற்று இலங்கைக்கு விஜயம் செய்தார்.

குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க ஆகியோர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் மார்ட்டின் சுங்கோங்கை வரவேற்றுள்ளதாக பாராளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்தது.

மார்ட்டின் சுங்கோங் தனது விஜயத்தின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர், எதிர்கட்சித் தலைவர் ஆகியோரையும் சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## அமைச்சர் டக்ளஸ்...

கொண்டிருக்கிறார். அவர் தான் இப்போது மாகாண சபையினை விடாத பிடி என்று நிற்கிறார். மாகாண சபையினை வளர்த்தெடுப்போம் என 10 வருடங்களுக்கு முன்னர் கூறியிருந்தார்.

டக்ளஸ் தேவானந்தா நடைமுறைச் சாத்தியமாக தனக்கு கிடைக்கும் சந்தர்ப்பத்தையும் சரியாக பயன்படுத்திக் கொண்டு செய்யக்கூடியவற்றை செய்து கொண்டு இருக்கிறார். அவர் அரசியலை தனியாக செய்கிறார்.

காலை எழும்பி கடலை சாப்பிட்டு ரெலிபோனை புடிச்சுக்கொண்டு பொழுதுபோகும் மட்டும் இதனை தானே செய்துகொண்டிருக்கிறார். ஆனால் மற்றவர்களுக்கு பல வேலைகளில் இது ஒரு வேலையாக இருக்கிறது.

தற்போது இருக்கும் அமைச்சர்களில் டக்ளஸ் தேவானந்தா, நல்ல அனுபவமும், ஆற்றலும் கொண்டவராக இருந்த போதிலும், அவர் செய்யக்கூடியவற்றை செய்வோம் என இருக்கிறார்.

அவர் யார் பிரச்சினைகளோடு சென்றாலும் அதனை செய்துகொடுப்பார். உதாரணமாக எங்களது கிளிநொச்சி பல்கலைக்கழகத்தினை அமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கி 3 பீடங்கள் கட்டி இருக்கிறோம் என யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்தார்.

யுத்தம் இடம்பெற்று இன்று 11 வருடங்களுக்கு மேலாகி விட்டது. "ஆறின கஞ்சி பழங்கஞ்சி போல" எங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டும் என்று நான் நினைக்கவில்லை.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புது வாழ்வு கொடுக்க வேண்டும், எங்களை நாங்களே ஆட்சி செய்யக்கூடிய பிரதிநிதிகளையும், முதல்வரையும் கொண்டு இயங்க வேண்டும்.

13 ஆவது திருத்தத்தின் படி எங்களுக்கு கிடைத்த உள்ளக சுயாட்சியில் கிடைத்த மாகாண கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டும், இலங்கையை மீளவும் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்கு மேற்கு நாடுகளிடம் சிறிய மரியாதை ஒன்று இருக்கிறது. என்னவெனில் நல்லதொரு வேலைப்படை. அந்தந்த நாடுகளை கட்டி வளர்ப்பதில் மிகப்பெரிய பங்கு உள்ளது.

இங்கிலாந்தில் இலங்கைத் தமிழர்கள் வைத்தியத்துறையில் மிகப்பெரிய பங்கு வகிக்கிறார்கள், கனடா நாட்டின் பொருளாதாரத்தை வளர்ப்பதில் இலங்கைத்தமிழர் மிகச்சிறந்த பணியாற்றி வருகின்றனர்.

ஆனால் அரசியலில் இறைமை கொண்ட நாடுகளின் செயற்பாடுகளில் தலை வைக்க முடியாது. அவர்கள் சில அறிவுரைகள் கூறுவார்களே தவிர நேரடியாக தலையிட்டு தீர்வு தர மாட்டார்கள்.

நாடு சுதந்திரமடைந்த பின்னர் அது தா, இது தா, என்று நாங்கள் கேட்கவில்லை. 1948 ஆம் ஆண்டிற்குப் பின்னர் வந்த அரசாங்கம் ஏனைய சிறுபான்மை இனத்தவரினை அரவணைத்து போகாமல் சிங்கள, பௌத்தம் என்ற அடிப்படையில் போகும் போது தான் தமிழர்கள் எதிர்வினையாக அது தா, இது தா என்று கேட்டார்களே தவிர நாட்டினை பிரித்து தர கேட்கவில்லை, தமிழர்கள் இனவாதம் பேசவில்லை என்றார்.

## அடுத்த வருடத்திற்கான ...

அரசாங்கத்தின் வருவாய் சேகரிப்பு மற்றும் பெருகிவரும் செலவுகளில் குறிப்பிடத்தக்க குறைப்பே இந்த முடிவிற்கான காரணங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன.

சுற்றறிக்கை ஒன்றின் மூலம், புதிய அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்யக் கூடாது என்றும் அரச நிறுவனங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவுகள், நிதி அமைச்சின் செயலாளர் கே.எம். மகிந்த சிறிவர்தனவினால் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

திணைக்களத் தலைவர்கள், அமைச்சின் செயலாளர்கள் மற்றும் மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் உட்பட்டவர்கள், அரச ஊழியர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிகளை வழங்குவதைத் தவிர்க்குமாறும்

உள்ளூர் பயிற்சி முன்முயற்சிகளும் தேவைகளை கருதி கண்டிப்பாக கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை 2022 2025 காலப் பகுதிக்கான வரவு செலவுத்திட்டத்தின் கீழ் புதிய திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது கடினமாக இருக்கும் என்றும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைப் பாதுகாத்தல், பொதுப் போக்குவரத்தை மேம்படுத்துதல், அன்னிய நேரடி முதலீடுகள் மற்றும் சுற்றுலாத் துறையை புத்துயிர் பெறுதல் போன்ற அடையாளம் காணப்பட்ட திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

2025ஆம் ஆண்டின் இறுதிக்குள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை 2 வீதத்தால் அதிகரிக்கும் நோக்கில் 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாக செயலாளர் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில் அரசாங்க வருவாயை அதிகரிப்பதற்கு முன்னுரிமை இருந்தாலும், அதற்கு சிறிது நேரம் எடுக்கும்.

எனவே செலவினங்களைக் குறைப்பதற்கும் அரச சேவைகளை உறுதிப்படுத்துவதற்கும் மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமானது என செயலாளர் தமது சுற்றறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

## எட்டு மாதங்களில்....

தெரிவித்துள்ளது. அவர்களில் பெருமளவிலானோர் சுகாதார அமைச்சுக்கு அறிவிக்காமலேயே வெளிநாடு சென்றுள்ளதாகவும் அதனால் சுகாதாரத் துறைக்கு பெரும் பாதிப்பு ஏற்படுவதுடன் அப்பாவி பொதுமக்கள் அதனால் பெரிதும் பாதிப்படைவார்கள் என்றும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் டாக்டர் சமில் விஜேசிங்க அது தொடர்பில் தெரிவிக்கையில்:

கடந்த எட்டு மாதங்களில் 500 டாக்டர்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர். அவர்களின் பெரும்பாலும் சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கவில்லை என்பதுடன் கடந்த இரண்டு மாதங்களில் அவர்கள் இவ்வாறு வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர்.

## வெளிநாடு செல்ல....

ரணவிக்ரம கடற்படைக் கப்பலானது மட்டக்களப்பு கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட ரோந்து நடவடிக்கையின் போது இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. இதில் 18 வயதுக்கு மேற்பட்ட அறுபது (60) ஆண்கள், பதினான்கு (14) பெண்கள் மற்றும் 18 வயதுக்குட்பட்ட பதினொரு சிறார்கள் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, மூதூர், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் மடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.அத்துடன் குறித்த குழுவும் பல நாள் மீன்பிடி படகும் தற்போது திருகோணமலை துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக திருகோணமலை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

## எலிசபெத் மகாராணியின்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த வார இறுதியில் பிரித்தானியாவுக்கு செல்லவுள்ளார்.

இதற்காக ஜனாதிபதி செயலகம், லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்துடன் பயணத்திற்கான ஒருங்கிணைப்புக்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மகாராணியின் இறுதிச் சடங்கு நடைபெறும் தினத்திற்கு முதல் நாள் ஜனாதிபதி லண்டன் நோக்கி புறப்பட்டுச் செல்ல உள்ளார்.

இரண்டாவது எலிசபெத் மகாராணி கடந்த வியாழக்கிழமை ஸ்கொட்லாந்தின் பல்மோரல் காஸ்டலில் காலமானார்.

மகாராணியாரின் இறுதிச்சடங்குகள் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இலங்கை அரசு அன்றைய தினத்தை தேசிய துக்க தினமாக அறிவித்துள்ளது.

ஜனாதிபதி தனது இந்த குறுகிய கால விஜயத்தின் போது பிரித்தானிய அரசாங்கத்தின் பிரதிநிதிகளை சந்திக்க வாய்ப்புள்ளதாக அரசாங்கத்தின் உயர் மட்ட தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

## கொலையாளிகள் தப்பிக்க ...

தென் மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

156ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், குறித்த சம்பவங்களில் நான்குடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்துள்ளதுடன் அவர்கள் பயன்படுத்திய ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த கொலையாளிகள் இவ்வாறான சம்பவங்களை செய்துவிட்டு தப்பிக்க முடியும் என்று நினைப்பார்களாயின் நாங்கள் ஒரு போதும் அதற்கு இடமளிப்பதில்லை என்பதை கூறிக் கொள்ள விரும்புகின்றோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் "எமக்கு வழங்கப்பட்டுள்ள இந்த சவால்களை ஏற்றுக் கொள்ள நாங்கள் தயாராக இருக்கின்றோம். இன்னும் 6 வாரங்களில் நாங்கள் ஜெயிக்கின்றோமா அல்லது குற்றவாளிகள் ஜெயிக்கின்றார்களா என்பதை பார்ப்போம்" என அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், ஆயுதங்களை எடுத்துக்கொண்டு சுற்றித் திரியவும், இவ்வாறான கொலைகளை முன்னெடுக்கவும் நாங்கள் ஒரு போதும் இடமளிப்பதில்லை.இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் அனைவரையும் தற்போது நாங்கள் கண்டறிந்துள்ளோம்.

இந்த குற்றவாளிகளுக்கு உதவிகளை வழங்குபவர்களையும் நாங்கள் கண்டறிந்துள்ளோம். அவர்கள் அனைவருக்கும் எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவோம் என அவர் தெரிவித்துள்ளார்.

## தேசிய அரசாங்கத்தில் ...

பெறும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஏ.பி.சக்திவேல் தெரிவித்தார். கொட்டகலை சீ.எல்.எப் கேட்போர் கூடத்தில் நேற்று (11) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெருந்தோட்டப்பகுதிகளில் பல வருடங்களாக வாழ்ந்து வரும் மக்கள் பராமரித்து வந்த காணிகளில் வீடுகள் நிர்மாணிக்கும் பொழுதும், விவசாயம் செய்யும் பொழுதும் அந்த மக்களுக்கு தெரியாமலேயே தோட்ட நிர்வாகம் தான்தோன்றித்தனமாக அரச சொத்தை மீள பெறல் என்ற சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தின் ஊடாக குறித்த மக்களை வெளியேற்றுகின்றனர். இவ்வாறு தோட்ட நிர்வாகம் செய்வது உரிமை மீறலாகும்.

மக்களை இவ்வாறு வெளியேற்றும் செயல் குறித்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும், நுவரெலியா மாவட்ட எம்.பியுமான ஜீவன் தொண்டமானுக்கு பல முறைப்பாடுகள் அண்மையில் கிடைக்கப்பெற்றிருந்தது.

அதன்பின்னர், அவரின் ஆலோசனைக்கேற்ப இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரான நான் பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண மற்றும் அமைச்சின் அதிகாரிகளுடன், இந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினேன். அதன்போது ஒரு சுமுகமான தீர்வு கிடைக்கப்பெற்றது.

அதாவது, எவரையும் தோட்ட நிர்வாகம் நினைத்தப்படி வெளியேற்ற முடியாது. இது தொடர்பில் அமைச்சர் ரமேஷ் பத்திரண படிவம் ஒன்றை தயாரித்துள்ளார். அந்த படிவத்தில் குறிப்பிட்டுள்ள சில விடயங்களுக்கு பதிலளிக்க வேண்டும். அதன் பின்னர் தீர்மானம் எடுக்கப்படும்.

## உரம், விவசாய பொருட்களின்...

நாட்டை வந்தடைந்துள்ள சமந்தா பவர், ஜா எல ஏக்கலை பகுதியில் உள்ள விவசாயிகளை நேற்று பிற்பகல் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, விவசாயிகள் தமக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் சமந்தா பவரிடம் விளக்கமளித்துள்ளனர்.இதனையடுத்து, நாட்டின் விவசாயிகளின் தேவை கருதி உரம் மற்றும் விவசாய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக, மேலதிக உதவியாக 40 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்கவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவரகத்தின் நிர்வாகி சமந்தா பவர், இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று இலங்கையை வந்தடைந்தார்.

## தர்ஜினி சிவலிங்கத்தின்....

வென்றுள்ளது.

சிங்கப்பூர் ஓ சி பி சி உள்ளக அரங்கில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 13ஆவது ஆசிய வலைபந்தாட்ட சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் முன்னாள் சம்பியன் சிங்கப்பூரிடம் ஆரம்பத்தில் கடும் சவாலை எதிர்கொண்ட நடப்பு சம்பியன் இலங்கை 63 – 52 என்ற கோல்கள் கணக்கில் வெற்றியீட்டி சம்பியன் பட்டத்தை தக்கவைத்துக்கொண்டது.

இதன் மூலம் ஆசிய வலைபந்தாட்ட சம்பியன்சிப் வரலாற்றில் 6ஆவது தடவையாக இலங்கை ஆசிய சம்பியன் பட்டத்தை சூடி ஆசிய வலைபந்தாட்டத்தில் முடிசூடா இராணி என்பதை நிரூபித்தது.

இலங்கை அணி வீராங்கனைகள் அனைவரும் அற்புதமாக விளையாடி இலங்கை தோல்வி அடையாத அணியாக சம்பியனாவதற்கு பெரும் பங்களிப்பு செய்தனர்.

## SLPP தேசிய அமைப்பாளர்...

பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளதாக பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முக்கிய பதவிகளை மறுசீரமைக்க கட்சி மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸீற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை எடுத்து, அவரை கட்சியில் இருந்து நீக்குமாறு பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் கட்சியின் செயற்குழுவிடம் வலியுறுத்தியுள்ளனர்.மேற்படி கட்சிக்கு புதிய இளைஞர், யுவதிகளை இணைத்துக் கொள்ளும் பொறுப்பு முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய நாமல் ராஜபக்ஷ தலைமையில் எதிர்வரும் நாட்களில் நாடளாவிய ரீதியில் கட்சி கூட்டங்கள் நடைபெறவுள்ளதோடு முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் புதிய அரசியல் கூட்டணியையும் ஸ்தாபிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## உள்ளக பொறிமுறையின்...

ஆரம்பமாகவிருப்பதுடன் இதன் போது மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிச்சேல் பச்லெட்டினால் இலங்கை தொடர்பான எழுத்துமூல அறிக்கை வெளியிடப்பட்டு, இலங்கை குறித்த விவாதமும் இடம்பெறவுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு சில தினங்கள் முன்னதாகவே ஜெனீவாவை சென்றடைந்த இலங்கையின் அரச உயர் மட்டப் பிரதிநிதிகள் குழு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தலைவர் மற்றும் பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்தவகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தலைவர் ஃபெட்ரிகோ விலிகஸ் மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோரடங்கிய இலங்கைப் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது மனித உரிமைகள் நிலைவரத்தை மேம்படுத்துவதில் இலங்கை தொடர்ச்சியாக முன்னெடுத்து வரும் முயற்சிகள் மற்றும் தற்போதைய சவால்களை எதிர்கொள்வதற்கு ஒன்றிணைதல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

அதுமாத்திரமன்றி இதன்போது உள்ளகப்பொறிமுறையை மேலும் வலுப்படுத்துவதன் அவசியம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தலைவரிடம் மீளவலியுறுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## துருக்கி, துபாயிலிருந்து...

வேண்டாம் என அரசாங்கம் பேக்கரி உரிமையாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தியா கோதுமை மா இறக்குமதியை நிறுத்தியுள்ளதைத் தொடர்ந்து துருக்கி மற்றும் துபாயிலிருந்து கோதுமை மாவை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அதற்கிணங்க பாண் மற்றும் கோதுமை மா மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விலைகளை அதிகரிக்க வேண்டாம் என்றும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ பேக்கரி உரிமையாளர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

துருக்கி மற்றும் துபாயிலிருந்து கடன் அடிப்படையில் கோதுமை மாவை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அடுத்து வரும் இரண்டு வாரங்களுக்குள் அந்த மா நாட்டை வந்தடையும் என்றும் இடைப்பட்ட இரண்டு வாரங்களில் விலையை திகரிப்பை மேற்கொள்ள வேண்டாம் என்றும் அமைச்சர் பேக்கரி உரிமையாளர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார். அதேவேளை, எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை கோதுமை மாவை இறக்குமதி செய்யுமாறும் அதற்கான கடன் வசதிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் கொழும்பு, புறக்கோட்டை சிறு இறக்குமதியாளர்களிடம் அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்துடன் 80 வீத கோதுமை மா இறக்குமதியை மேற்கொள்ளும் இரண்டு பெரிய நிறுவனங்களுக்கும் கடன் வசதிகளை செய்து தருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## மின்சார சபைக்கான... (03ஆம் பக்கத் தொடர்)

உள்ளூராட்சி சபைகள் மற்றும் இலங்கை ரயில்வே திணைக்களம் ஆகியவற்றிலிருந்து செலுத்த வேண்டியுள்ளது. 697 மில்லியன் ரூபாய்களை விடுதிகளும் சுற்றுலா விடுதிகள் 196 மில்லியன் ரூபாய்களையும் செலுத்த வேண்டியுள்ளன. இந்தநிலையில் எதிர்வரும் அக்டோபர் முதலாம் திகதி முதல் மத வழிபாட்டுத் தலங்களுக்கான மின்சார கட்டணத்தை குறித்த மத வழிபாட்டுத் தலங்களே செலுத்த வேண்டும் என்றும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் மின்சார சபை கட்டணத்தை அதிகரித்துள்ள நிலையில் மத நிறுவனங்களுக்கு 500 சதவீதத்திற்கும் அதிகமான கட்டண உயர்வு விதிக்கப்பட்டுள்ளது.

## யானை தாக்கி ... (03ஆம் பக்கத் தொடர்)

முறைப்பாடு செய்தனர். இம்முறைப்பாட்டினையடுத்து குறித்த காட்டுப்பகுதிக்கு பிரதேச மக்கள் தேடுதல் நடாத்திய போது காட்டுப்பகுதியில் யானையின் தாக்குதலினால் உயிரிழந்த நிலையில் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.விசாரணைகளை தம்பலகாமம் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மீதப்படுத்திய எரிபொருள்... (03ஆம் பக்கத் தொடர்)

அதன்படி ஒரு மொழியில் 350 வீதம் 3 மொழிகளிலும் அச்சிடப்படும் புத்தகங்களின் தொகை, 3 மொழிகளிலும் 12 புத்தகங்கள் என 248 ஆக அச்சிடப்படும் பிரதிகளை 2 ஆக குறைத்து மேலதிக செலவை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தார் எனவும் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

## எரிபொருள் தாங்கிய நான்கு... (03ஆம் பக்கத் தொடர்)

ஒரு பகுதி செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நான்கு எரிபொருள் கப்பல்களுக்கு செலுத்த 150 மில்லியன் டொலர்களை அரசாங்கம் திரட்ட வேண்டியுள்ளது. அதற்காக மத்திய வங்கியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஐக்கிய நாடுகள் பொதுச்... (03ஆம் பக்கத் தொடர்)

சீனாவின் ஜனாதிபதி ஜி.ஜின்பிங், வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன், சிரியாவின் ஜனாதிபதி பஷர் அல்அசாத், சவூதியின் இளவரசர் முகமது பின் சல்மான் மற்றும் மியன்மார் இராணுவ தலைமையாளர் ஆகியோர் பங்கேற்க மாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரூ. 20,000 கொடுப்பனவு ... (03ஆம் பக்கத் தொடர்)

நிதி கிடைக்காமை காரணமாக கர்ப்பிணித் தாய்மாருக்கு போஷாக்கு உணவுக்கான கொடுப்பனவு வேலைத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்ததாகவும் எனினும் தற்போது அதற்கான நிதி கிடைத்துள்ள நிலையில் சில கட்டங்களாக நாடளாவிய ரீதியில் அந்தக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

## சிறைக்கைதி... (03ஆம் பக்கத் தொடர்)

குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்கள் என்பது தெரியவந்துள்ளது.

## அமெரிக்கா முழுமையான ...

அமெரிக்க டொலர்களை உதவியாக வழங்குவதாகவும் உறுதியளித்தார்.

எனினும் தற்போது இலங்கை எதிர்கொள்ளும் சவால்களுக்கு மத்தியில் இது மிக மிக சிறிய மற்றும் சாதாரண உதவியாகும் என சமந்தா பவர் மேலும் சுட்டிக்காட்டினார். எனினும், இந்த உதவிகள் சர்வதேச நிதி நிறுவனங்களின் தனியார் துறைக்கும், இலங்கையில் புதிதாக முதலீடுகளை செய்ய எதிர்பார்த்துள்ள முதலீட்டாளர்களுக்கும் நம்பிக்கையை ஏற்படுத்தும் என்றும், புதிய அணுகுமுறைக்குத் தேவையான ஒரு உத்வேகமாக அமெரிக்கா இதன்மூலம் செயற்படும் என்றும் அவர் உறுதியளித்தார். எமது கூட்டிணைக்கும் சக்தியை இதன்மூலம் திறமாக பயன்படுத்த முடியும் என்றும் சமந்தா பவர் தெரிவித்தார்.

இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் அதிகாரி சமந்தா பவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதன்போது நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகள் தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ள ஜனாதிபதி,

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்படுவோர் தொடர்பில் தமிழ் தரப்புடன் பேசினோம். தடுப்புக் காவலில் இருந்த காலம், அவர்கள் அனைவரும் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டிருப்பது என்பவற்றை கருத்திற்கு கொண்டு அவர்களை விடுவிக்க முடியுமா என்பதை அறிய பொறிமுறையொன்றைத் தயாரிக்க கவனம் எம்.பிக்களின் கொலைகள் என்பவற்றுடன் தொடர்புபட்டவர்கள் தவிர ஏனையவர்கள் தொடர்பில் இதன் கீழ் கவனம் செலுத்தப்படும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் தடுப்புக்காவலில் உள்ள முஸ்லிம்களில் விடுதலை செய்யக் கூடியவர்களை அடையாளம் காணுமாறு புலனாய்வு பிரிவுகளுக்கு அறிவித்துள்ளேன். குண்டுத் தாக்குதல் தொடர்பான அறிக்கைகளை மதிப்பாய்வு செய்து இந்த முழு விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்கு இங்கு குண்டுவெடிப்புச் சம்பவத்தின் பின்னால் மறைகரம் இருந்ததா? அப்படியானால், அந்த மறை கரம் யாருடையது? சிலர் அமெரிக்கா என்கிறார்கள். சிலர் இந்தியா என்கிறார்கள். இன்னும் சிலர் சீனா என்கிறார்கள். மற்றவர்கள் பாகிஸ்தான் என்கிறார்கள். அதனால் மறைகரம் எதுவென்று யாருக்கும் தெரியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனநாயகத்தை பலப்படுத்த எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து சமந்தா பவருக்கு விளக்கமளித்த ஜனாதிபதி , உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைக்கு சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்பை பெறுவது தொடர்பிலும் எடுத்துரைத்தார். அத்துடன் தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பில் தேவைப்படின் சர்வ ஜன வாக்கெடுப்பை நடத்தவும் தாம் தயங்கப் போவதில்லை என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய அவசர நிலையால் இலங்கை மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறித்தும் இந்த நிலையில் இருந்து மீள்வதற்கு அமெரிக்கா எவ்வாறு ஒத்துழைப்பு வழங்க முடியும் என்பது குறித்தும் சமந்தா பவர் இதன்போது கலந்துரையாடினார்.

அத்துடன், இலங்கையின், பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு அமெரிக்கா வழங்கும் நீடித்த ஆதரவு குறித்தும் சமந்தா பவர் இதன்போது கலந்துரையாடினார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

"விவசாயிகளுக்காக 40 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியதற்கு அமெரிக்க அரசாங்கத்திற்கு முதலில் நாம் நன்றி தெரிவிக்க வேண்டும். நாட்டில் உள்ள 14,000 கிராம சேவகர் பிரிவுகளுக்கும் இதன் நன்மை சென்றடையும். 22ஆவது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதனை பாராளுமன்றம் நிறைவேற்றும் வரை காத்திருக்கிறோம்.நிர்வாகத்திற்காக முதலாவது அமைச்சரவைக் கையேடு அறிமுகப்படுத்தப்பட உள்ளது. அதற்கமைவாக அமைச்சரவையின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பிலான நடைமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் கண்காணிப்புக் குழுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு அமெரிக்காவின் ஆதரவை எதிர்பார்க்கின்றோம். பொருளாதாரக் குழுக்களை அதிகரிக்கவுள்ளோம். அரசாங்க நிதி பற்றிய குழு, அரசாங்க கணக்குகள் பற்றிய குழு, அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் தொடர்பான குழு, வங்கி மற்றும் நிதி பற்றிய குழு என பல குழுக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஊழலுக்கு எதிரான சட்டங்களுக்கு நாம் அங்கீகாரம் அளித்துள்ளோம்.

மேலும் பெண்கள் சமத்துவம் தொடர்பான சட்மூலமொன்றை தயாரிக்குமாறு பெண்கள் அமைப்புகளிடம் கேட்டுள்ளேன். ஓரினச்சேர்க்கையை குற்றமற்றதாக்கும் வகையில் தனிநபர் பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் அதை எதிர்க்காது. இதற்கு தனிப்பட்ட உறுப்பினர்களின் ஆதரவைப் பெற வேண்டும். விவாகரத்து சட்டங்களை இலகுபடுத்தி பரஸ்பர சம்மதத்துடன் விவாகரத்து செய்ய வாய்ப்பளிக்கப்படும். அத்தோடு மேலும் விடுவிக்கக் கூடிய காணிகள் குறித்து ஆராயப்படுகிறது. காணாமல் போனோர் விவகாரம் குறித்து தீர்வு காண துரிதப்படுத்தப்படும். புனரமைப்புத் திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டு துரிதப்படுத்தப்படும். அத்தோடு வடக்கு அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுக்க இருக்கிறோம். புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் வடக்கு பாரிய பொருளாதார மையமாக மாற்றப்படும். அபிவிருத்திகள் ஊடாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை விட எமக்கு அப்பகுதிகளில் அதிகம் பங்காற்ற முடியும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தையும் கொண்டு வர இருக்கிறோம். தேர்தல் சீர்திருத்தம் தொடர்பில் பாராளுமன்றத்தில் உடன்பாடு எட்டப்பட வேண்டும். இது தொடர்பில் கட்சிகள் ஆராய்ந்து வருகின்றன. அவர்களுக்கு ஆறு மாதங்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. கட்சிகளிடையே உடன்பாடு ஏற்படாவிட்டால் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி, உகந்த தேர்தல் முறை தொடர்பாக மக்களிடம் விருப்பத்தை கோருவேன். அரசியல் கட்சிகளால் இந்தப் பிரச்சினைகளை தள்ளிப் போட முடியாது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கிராம மட்டத்தில் மக்கள் சபை அமைப்பது தொடர்பில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. காலிமுகத்திடல் போராட்டத்திலும் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 14 ஆயிரம் கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கி மக்கள் சபைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

விவசாயத் துறையில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தவும் எதிர்பார்க்கிறோம் 2048 நமது சுதந்திரத்தின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படவுள்ளது.

அதனையொட்டி 2023இல் இருந்து 25 வருட வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும். அதற்கு அமெரிக்காவின் உதவி அவசியாமானது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கை தொடர்பில் ஜனாதிபதி பைடன் செலுத்தி வரும் அக்கறைக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார். எமது அழைப்பை ஏற்று வருகை தந்ததற்கு சமந்தாவுக்கும் நன்றிதெரிவித்த ஜனாதிபதி அடுத்த வருடமும் இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த சமந்தா பவர்,

இலங்கை மக்கள் எதிர்கொள்ளும் அவசர, இடைநிலைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், இலங்கை ஸ்திரநிலைக்குத் திரும்புவதற்கும் ஆதரவளிக்க அமெரிக்கா அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சுதந்திர மற்றும் திறந்த இந்து பசிபிக் பிராந்தியத்திற்கான இணைந்த, வளமான, நெகிழ்ச்சியான, பாதுகாப்பான உறுதியான ஆதரவை அமெரிக்கா வழங்கும் என்றும் பவர் இதன்போது வலியுத்தினார்.

# நுவரெலியாவில் உல்லாசப்பயணிகளின் வருகை அதிகரிப்பு



*(ஆ.ரமேஸ்.)*

நுவரெலியாவுக்கு உல்லாசப்பயணிகள் வருவது அதிகரித்துள்ளது.குறிப்பாக ஞாயிற்றுக்கிழமைகளிலே இவர்கள் அதிகமாக வருகின்றனர்.

வெளிநாட்டு உல்லாசப்பயணிகள், உள்ளூர் மற்றும் வெளிமாவட்டங்களிருந்தே இவர்கள் வருகை தருகின்றனர்.

நாட்டில் கொரோனா தொற்று அதிகரித்து வருவதாக சுகாதார தரப்பில் பொது அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ள நிலையிலும்,மக்களின் வருகை குறைவடையவில்லை.

இவ்வாறு நுவரெலியாவுக்கு வருகை தருவோர்,விக்டோரியா பூங்கா,கிறேகறி தெப்பக்குளம் உட்பட இயற்கை அழகுள்ள இடங்களிலே அதிகமாக கூடுகின்றனர்.

கொரோனா விழிப்புணர்வு மற்றும் சுகாதார வழிமுறைகளை இவர்கள் பின்பற்றாததால்,கொரோனா பரவும் அச்சம் ஏற்படும் நிலையும் தோன்றியுள்ளது.

இதுதொடர்பில், நுவரெலியா மாவட்ட பொதுச்சுகாதார பிரிவினர் மற்றும் நுவரெலியா மாநகரசபை பொதுச் சுகாதார பரிசோதக பிரிவினரின் கவனத்திற் கொண்டு வருமாறு கோரப்பட்டுள்ளது.

முகக்கவசம் அணிதல் மற்றும் சுகாதார வழிமுறைகளை பின்பற்றுதல் போன்ற நடவடிக்கைகளை கட்டாயப்படுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## அறிவித்தல்
## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

பாணந்துறை, காலி வீதி, இல. 501/2Aஐச் சேர்ந்த **ரோசி ஹுசைன்** (தே.அ.அ. 195552210068இன் உரிமையாளர்) ஆகிய நான் கொழும்பு மாவட்டத்தின் தெஹிவளை, களுபோவில, மங்கள வீதி, 53/1Aஐச் சேர்ந்த **மொஹமட் ஜெலீல் மொஹமட் ஸரூக்** (தே.அ.அ.இல. 583283919V இன் உரிமையாளர்) இற்கு வழங்கப்பட்ட அற்றோணி அதிகாரம் பதிவில் தினப்புத்தக இல. 8111 பக்கம் 311 வரிகள் 116இல் 2020.07.27இல் பதிவு செய்யப்பட்ட மற்றும் கொழும்பு பகிரங்க நொத்தாரிசு **சமந்தி பி. குமாரசிங்ஹவினால்** அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2020.07.27ம் திகதியிடப்பட்ட அற்றோணி தத்துவ இல. 1522ஐ 2022.08.30 முதல் இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகிறது. என் சார்பாக சொல்லப்பட்ட **மொஹமட் ஜெலீல் மொஹமட் ஸரூக்** இனால் மேற்கொள்ளப்படும் எந்த விடயத்திற்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.

**ரோசி ஹுசைன்,**
**இல. 501/2A, காலி வீதி, பாணந்துறை.**
திகதி: 30.08.2022

## இலங்கை முதலீட்டுச் சபை
# பெறுகை அறிவித்தல்

பின்வரும் பெறுகைக்கான விலைக்கோரல் விளம்பரம் 2022 செப்டெம்பர் 10ஆம் திகதிய ‘‘டெய்லி நியூஸ்’’ பத்திரிகையிலும் இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணைய தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. (www.investsrilanka.com)

**INVITATION FOR BIDS FOR SUPPLY OF 100,000 NOS. OF BOLD TYPE CONTAINER SECURITY SEALS TO BOI**

**CONTRACT NO. BOI/S&S/Q/091/2022**

மேற்படி பெறுகைக்கு இயைபான கேள்விப் படிவங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதுடன் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க ஆர்வம் காட்டும் ஒப்பந்தக்காரர்கள் ‘‘டெய்லி நியூஸ்’’ பத்திரிகையிலும் இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணைய தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ள விளம்பரத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. (www.investsrilanka.com)

விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை 011-2543041/074-1531432 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**

## பாதுமக்கள் கருத்துக்காக இலங்கை கட்டளைகள் வரைவு மற்றும் திருத்தப்பட்ட வரைவு

1. பசளை மற்றும் மண்வளம் சல்ஃபர் பூசப்பட்ட யூரியாவின் பொதுவான தேவைப்பாடுகள் தொடர்பான இலங்கை கட்டளைகள் வரைவு
   (இ.க. வரைவு ..................................) (ISO 17322:2015)
2. பசளை மற்றும் மண்வளம் கட்டுப்பாட்டுடன் போசனையை வழங்கும் பசளைகளின் பொதுவான தேவைப்பாடுகள் தொடர்பான இலங்கை கட்டளைகள் வரைவு.
   (இ.க. வரைவு ..................................) (ISO 18644:2016)
3. பசளை மற்றும் மண்வளம் திண்ம யூரியா எல்டிஹேட் மெதுவாகப் பொசனையை வழங்கும் பசளைகளின் பொதுவான தேவைப்பாடுகள் தொடர்பான இலங்கை கட்டளைகள் வரைவு
   (இ.க. வரைவு ..................................) (ISO 19670:2017)
4. பால் சேர்க்கப்பட்ட பானங்கள் தொடர்பான இலங்கை கட்டளைகள் விபரக்குறிப்புகளிற்கான திருத்த வரைவு இலக்கம்: 01
   (இ.க. வரைவு 917:2018 முதலாம் திருத்தம்)

மேற்படி கட்டளை வரைவுகள் மற்றும் திருத்தப்பட்ட வரைவு இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் பொது மக்கள் மற்றும் ஏனைய ஆர்வமுள்ள தரப்பினரின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக இத்தால் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இக்கட்டளை வரைவுகள் மற்றும் திருத்தப்பட்ட வரைவு இலங்கை கட்டளைகளாக அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் கிடைக்கும் ஆலோசனைகள் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் உரித்தான சபையினால் பரிசீலனை செய்யப்பட்டதன் பின்னர் இறுதியாக திருத்தம் மேற்கொள்ளப்படும்.

மேற்படி கட்டளை வரைவுகளை 01) முதல் 03) வரை இந் நிறுவனத்தின் நூலகத்தில் கொள்வனவு செய்து கொள்ளலாம். திருத்தப்பட்ட கட்டளை வரைவுகளை இந்நிறுவனத்தின் விஞ்ஞானவியல் கட்டளைகள் பிரிவில் அல்லது ஆவணங்கள் மற்றும் தகவல் பிரிவில் அல்லது www.slsi.lk என்ற இணையத்தளத்தில் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

அனைத்து ஆலோசனைகளும் 2022.11.12 இற்கு அல்லது அதற்கு முன்னர் எனக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை கட்டளைகள் நிறுவகம்,**
**இல. 17, விக்டோரியா பிளேஸ்,**
**எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு -08.**

**தொ. பே. 011-2671567-72**
**தொலைநகல்: 011-2671579**
**மின்னஞ்சல்: dg@slsi.lk**
**இணையம்: www.slsi.lk**
**முகநூல்: https://www.facebook.com/officiaSLSI**

இலங்கை கட்டளைகள் நிறுவகம்
தொழில்நுட்பவியல் அமைச்சு

## கலைப்பாளர்களை நியமிப்பதற்கான அறிவித்தல்

| | |
|---|---|
| கம்பனியின் பெயர் | - மைடீல் எல்கே (பிரைவட்) லிமிட்டட் |
| பதிவு இல. | - PV 80907 |
| பதிவு அலுவலக முகவரி | - இல. 248, காலி வீதி, கொழும்பு -4 |
| கலைப்பாளரின் அலுவலக முகவரி | - இல. 130, 2ம் மாடி, நாவல வீதி, நாரஹேன்பிட்ட, கொழும்பு -5 |
| வழக்கு இலக்கம் | - HC/CIVIL/61/2021/CO |

**களைப்பாளரின் பெயர் மற்றும் அலுவலக முகவரி**
**லிங்கன் சந்ரசோம பியசேன**
**இல. 130, 2ம் மாடி, நாவல வீதி, நாராஹேன்பிட்ட, கொழும்பு -5.**
நியமனம் இடம்பெற்ற திகதி - 2021 டிசம்பர் 09

NSB

## தேசிய சேமிப்பு வங்கி
# விலைமனுக் கோரல்

### பெறுகை அறிவித்தல் இல. என்.எஸ். பி/பி.டி/ஐ.டி.ஈ./2022/21

இங்கு காணப்படும் கேள்வியுடன் சம்பந்தப்பட்ட பொருட்களை வழங்குதல், விநியோகித்தல், பொருத்துதல், செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பிற்காக அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள்/வழங்குநர்களிடமிருந்து அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட உள்ளூர் முகவர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| Description of the procurement | Ant-Money Laundering Solution (AML) |
| Method of Procurement | National Competitive Bidding (NCB) (2 envelop bidding process) |
| Applicable Non-refundable Tender Fee | Rs. 15,000/- |
| Value of Bid Bond to be submitted | Rs. 700,000/- |
| Last Date & Time of Issuing Bid Documents | 04.10.2022 at 3.00 p.m. |
| Date & Time of Closing of Tender | 05.10.2022 at 10.00 a.m. |

1. எந்தக் கேள்விதாரர் சார்பாகவும் பிரதிநிதியொருவர் அல்லது உப பிரதிநிதியொருவர் பெயர் குறிப்பிடுபவராக செயற்படும் எந்த தனிநபரோ கேள்விக்காக விண்ணப்பிக்க முன்பு 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்தல் கட்டாயமாவதுடன் அவர் சார்பாக ஒப்பந்தத்தை பதிவு செய்தல் கட்டாயமாகும்.
2. 2022.09.12 முதல் 2022.10.04 வரை வேலை நாட்களில் முற்பகல் 8.30 முதல் பிற்பகல் 3.00 வரை குறித்த கேள்விப் பத்திரங்களை கொழும்பு -03 காலி வீதி, இல. 255இல் அமைந்துள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல்கள் பிரிவின் வழங்கல்கள் முகாமையாளரிடம் எழுத்து மூல வேண்டுதலின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் தினம் முதல் 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் வர்த்தக வங்கியிலிருந்து விநியோகிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியினால் அங்கீகரிக்கக் கூடிய வங்கிப் பிணையொன்றை/ கேள்விப் பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
4. குறித்த தினத்தில் கேள்வி விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளல் முற்பகல் 10.00 இற்கு முடிவடைந்தவுடன் கேள்வி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இன்றைய தினம் தொழில்நுட்ப கேள்விகள் மட்டும் திறக்கப்படுவதுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டின் பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விதாரர்களுக்கு நிதிக் கேள்வியை திறப்பதற்காக எதிர்வரும் தினம் ஒன்றில் அறிவிக்கப்படும்.
5. சகல கேள்விகளையும் அல்லது ஒரு கேள்வியை அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளல் அல்லது காரணம் கூறாமலேயே நிராகரிக்கும் உரிமை தேசிய சேமிப்பு வங்கிக்கு உரியது.

   இது பற்றி மேலதிக விபரங்களை தேசிய சேமிப்பு வங்கியின் பிரதம முகாமையாளர் (வழங்கல்கள்) இடம் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**நிறுவன பெறுகைக் குழு - பிரதான,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**இல. 255, காலி வீதி, கொழும்பு -03.**

## சுய வேலைவாய்ப்பு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனுக் கோரல் – 2022
### கண்டி கடவத்ஸத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபை

01. 5 கி. கிராம் ரைஸ் குக்கர் 01
02. சலூன் கதிரைகள் - 02
03. ட்ரிமர் இயந்திரம் - 01
04. தையல் மெஷின் இயந்திரங்கள் - 05
05. ஓவர்லொக் மெஷின் இயந்திரங்கள் - 02
06. பொத்தான் மெஷின் -01
07. நிழல் கம்பிவலை (2x50 மீற்றர்) - 03
08. பிளாஸ்திக் பூச்சாடி (12 அங்குல விட்டம், 06 அங்குல உயரம் - 100)
09. வேல்டிங் மெஷின் தொகுதி - 01
10. கையினால் துளையிடும் கருவி - 01
11. கொங்கிறீட் குழாய் அச்சு - 01
12. செலோபீன் பொலித்தின் (7 அங்குல அகலம் 200 கேஜ்) கி.கிராம் 6 - 04
13. குகல் கம்பிவலை - 05 யார்
14. கூரைத் தகடு - 06
15. மிளகாய் அரைக்கும் இயந்திரம் - 01
16. திரைச்சீலை பஞ்சர் மெஷின் - 01
17. பொப் கோர்ள் மெஷின் - 01
18. கம்பி வெட்டும் மெஷின் - 01
19. பவர் சப்ளை யுனிட் - கணினி இயந்திரத்தின் பாவனைக்கு - 01
20. ப்ரஷர் குக்கர் - 12 லீற்றர் - 01
21. பன்சன் பர்னர் - 01
22. மின்னியல் தராசு (0.00 கி.) - 01
23. பொலித்தீன் சீலர் - 01
24. பொஸெப்ஸ் - 02
25. ஸ்கெல்பஸ் 04 இலக்கம் - 04
26. பீக்கர் 1000 மி.லீ. - 01
27. மெஷரிங் ஸ்ரிஞ்ஜர் (மி.லீ. 1, 2, 5) - 01 வீதம்
28. ப்ளாஸ்திக் மெஷரிங் சிலிண்டர் (மி.லீ. 25, 100) - 01 வீதம்
29. சர்ஜிகல் பிளேடு இல. 23 - 10
30. கெல்வனிக் ஹெயார் ட்ரையர் இயந்திரம் - 01
31. இடியப்ப ஸ்ரீமர் (160 இடியப்பம் தயாரிக்க முடியுமான) - 01
32. இரும்பு எரிவாயு தனி அடுப்பு - 01
33. பெரிய ப்ளெண்டர் - 01

மீளளிக்கப்படாத ரூ. 1000.00 இற்கான தொகையை அலுவலக நேரத்தில் (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை) காசாளரிடம் செலுத்தி உரிய விலைமனு பற்றிய ஆவணங்களை 2022.09.19ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்னர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

விலைமனுக்களை முதற்பிரதி, இணைப்பிரதி என வேறாக்கிப் பின்னர் ஒரு உறையில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் ‘சுய வேலை வாய்ப்பு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனுக் கோரல்’ எனக் குறிப்பிட்டு 2022.09.20ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு முன்னர் தவிசாளர், கண்டி கடவத்தஸத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபை, அம்பிட்டிய என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். அல்லது அவற்றை கண்டி கடவத்ஸத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபையின் பிரதம அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இடுதல் வேண்டும்.

2022.09.20ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு கண்டி கடவத்ஸத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபை பிரதேச சபையின் பிரதம அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். அதில் நீங்கள் அல்லது உங்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவர் கலந்துகொள்ள முடியும்.

2022.09.05

**தவிசாளர்,**
**கண்டி கடவத்ஸத்தர மற்றும்,**
**கங்கவட்ட கோறளே பிரதேச சபை.**
**அம்பிட்டிய.**


திகதி 10.09.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB
மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4874 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,351,400.00 — ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 0 5 0 3 7 1 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,282,243.00

திகதி 09.09.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB
மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4873 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,986,770.00 — ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 5 3 2 7 3 9 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,454,978.00

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம்: 904 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,513,540.00 — வெற்றி இலக்கினம் T வெற்றி இலக்கங்கள் 14 17 20 53 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 124,847,852.00

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம்: 903 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,148,940.00 — வெற்றி இலக்கினம் G வெற்றி இலக்கங்கள் 23 32 34 57 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 124,847,852.00

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3116 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,669,700.00 — ஆங்கில எழுத்து R வெற்றி இலக்கங்கள் 05 06 30 73 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 75,503,358.40

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3115 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,180,660.00 — ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 08 10 13 48 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 75,358,040.80

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 183 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,124,160.00 — இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 08 21 44 57 — விசேட இலக்கினம் கன்னி — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,599,254.40

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 182 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,814,400.00 — இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 06 38 45 54 — விசேட இலக்கினம் சிம்மம் — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,599,254.40

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 1329 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,147,780.00 — வெற்றி இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 5 7 9 1 0 4 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,571,458.40

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 1328 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,881,460.00 — வெற்றி இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 5 0 4 8 7 9 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,548,322.00

கோடி 26+ Mega Power மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1222 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,635,900.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 269,788,050.00 — ஆங்கில எழுத்து U சுப்பர் நம்பர் 26 வெற்றி எண்கள் 01 40 67 80 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

கோடி 26+ Mega Power மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1221 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,190,560.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 269,646,250.00 — ஆங்கில எழுத்து I சுப்பர் நம்பர் 17 வெற்றி எண்கள் 31 35 41 51 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk — பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk — இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01




# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் இதழியல் கற்கை நெறியை ஆரம்பிக்குமாறு கோரிக்கை!

(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் இதழியல் கற்கை நெறியை மீண்டும் ஆரம்பிக்குமாறு சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் கோரிக்கை விடுத்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கரைச் சந்தித்தபோதே

அவர்,இந்தக் கோரிக்கையை விடுத்தார். இச்சந்திப்பு நேற்று முன்தினம் (09) வெள்ளிக்கிழமை உபவேந்தர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத்துறையில் ஆர்வமுள்ளவர்கள் இக்கற்கை நெறியை மேற்கொள்வதற்கு விருப்புடனுள்ளதாலே, இக்கோரிக்கையை முன்வைப்பதாகவும் உபவேந்தரிடம் கலாநிதி றியாத் ஏ.மஜீத் சுட்டிக்காட்டினார்.

இதனையெடுத்து உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கர், சிலோன் மீடியா போரத்தின் இக்கோரிக்கையை ஏற்றுள்ளதாகவும் இன்னும் ஓரிரு வாரங்களில் இதழியல் கற்கை நெறிக்காக விண்ணப்பம்படிவங்கள் கோரப்படுமென்றும் உறுதியளித்தார்.

மேலும் அண்மையில் இதழியல் கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வை பிரமாண்டமானதாக செய்தமைக்காக கலாநிதி றியாத் ஏ.மஜீத் நன்றியும் தெரிவித்தார்.

தற்போது உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூவக்கர் தலைமையில் பல்கலைக்கழகத்தில் முன்னெடுக்கப்படும் பல்வேறு செயற்பாடுகள், அபிவிருத்திப் பணிகள் மற்றும் துறைசார் ஆலோசனைகள் குறித்தும் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் பதவியேற்று ஒரு வருட பூர்த்தியை நினைவு கூர்ந்து நினைவுப் பரிசொன்றினை சிலோன் மீடியா போரத்தின் சார்பில் கலாநிதி றியாத் ஏ.மஜீத் வழங்கி வைத்தார்.

## உலக தற்கொலை தடுப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு வீதி நாடகம்



(மட்டக்களப்பு விசேட நிருபர்)

உலக தற்கொலை தடுப்பு தினத்தை முன்னிட்டு, தற்கொலை முயற்சியை தடுக்கும் விழிப்புணர்வு வீதி நாடகம் நேற்று முன்தினம் (10) மட்டக்களப்பு காந்திப் பூங்காவில் நடைபெற்றது.

மட்டக்களப்பு உழவியல் ஆலோசனை மையம் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில், ஆரம்ப நிகழ்வாக விழிப்புணர்வு நடை பவனி இடம்பெற்றது.கல்லடிப் பாலத்திலிருந்து ஆரம்பமான இப்பவனி மட்டக்களப்பு காந்திப் பூங்காவைச் சென்றடைந்தது.

தன்னைத்தானே மாய்த்துக் கொள்வதற்கான அபாயகரமான எண்ணங்கள், மனநலப் பிரச்சினைகளால் ஏற்படுகின்றன. இவற்றைத் தடுப்பதற்கான செயல்முறைகளை வெளிப்படுத்தி, கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் மாணவர்கள் வீதி நாடகத்தை நடாத்தினர்.

## கல்முனை மௌலவிக்கு கௌரவம்



(கல்முனை மத்திய னகரன் நிருபர்)

கல்முனையைச் சேர்ந்த மௌலவி அஷ்ஷெய்க் ஜவ்ஸாதை (ஸலாமி) கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

ஹுதா ஜும்ஆ பள்ளிவாசலில் அண்மையில் அவர் நிகழ்த்திய கன்னி குத்பா பேருரையின் பின்னர், இவர் கௌரவிக்கப்பட்டார்.

கல்முனை ஹுதா ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் ஏ.வி.எம். இப்றாஹீம் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. கல்முனை நகர மண்டப வீதியைச் சேர்ந்த மீஸான் சிக்கன் ஹவுஸ் உரிமையாளர் பாரூக்கின் புதல்வரான அஷ்ஷெய்க் ஜவ்ஸா

துக்கு மௌலவி ஜே.எம்.சாபித் ஸரயி, றியாதி உட்பட பள்ளிவாசல் நிர்வாகத்தினர் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர்.

ஓட்டமாவடி தாருஸ்ஸலாம் அரபிக்கல்லூரியில்,இவர் மௌலவி பட்டம் பெற்று வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ் வீரர்களுக்கு நினைவுத் தூபி திறப்பு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)



பொலிஸ் தினத்தை முன்னிட்டு யுத்தத்தால் உயிரிழந்த மற்றும் ஊனமுற்ற தீரமிக்க பொலிஸ் வீரர்களை நினைவு கூரும் வகையில் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் நினைவுத்தூபி (08) திறக்கப்பட்டது.அம்பாறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டீ.ஜயந்த இந்நினைவுத் தூபியை திறந்து வைத்தார்.

அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.எஸ்.பீ.விஜேதுங்க, அக்கரைப்பற்று உதவி பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.பீ.எச். செனவிரத்ன ஆகியோரும் இதில் பங்கேற்றிருந்தனர்.

இந்நிகழ்வில் ரணவிரு அதிகார சபையின் மாவட்ட உத்தியோகத்தர் திருமதி.நிவர்த்திகா, பொலிஸ் உயரதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், மதகுருமார்கள், யுத்தத்தில் உயிர் நீத்த பொலிஸ் வீரர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## காய்த்துக்குலுங்கும் பேரீச்சை மரங்கள்

(தோப்பூர் குறூப் நிருபர்)



மூதூர் அக்கரைச்சேனை முகைதீன் ஜும் ஆ ப் ப ள் ளி வாசலில் நடப்பட்டுள்ள பேரீச்சை மரங்கள்,காய்த்துக் குலுங்குகின்றன. இதைப்பார்வையிட பல பிரதேசங்களிலிருந்தும் மக்கள் வருகை தருகின்றனர்.

கடந்த 2019 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இரண்டாவது முறையாக இப்பேரீச்சை மரங்கள் காய்ந்ததுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## திருக்கோவிலில் கஞ்சா வைத்திருந்தவர் கைது

(பாலமுனை தினகரன் நிருபர்)

கஞ்சா வைத்திருந்த ஒருவர் திருக்கோவிலில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸாருக்கு கிடைத்த இகராசிய தகவலின் பிரகாரம் குறித்த பிரதேசத்திற்கு சென்ற பொலிஸார், அந்நபரை கைது செய்தனர். அவரிடமிருந்து 400 மில்லிகிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டது. கைது செய்யப்பட்ட சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் (10) ஆஜர்படுத்திய போது, எதிர் வரும் (23) வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.


## INVITATION FOR BIDS (IFB –III)

**Local Development Support Project - CREDIT NUMBER P 163305**
**VALIKAMAM NORTH PRADESHIYA SABHA, KANKESANTHURAI.**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received credit from the World Bank towards the cost of Local Development Support Project and intends to apply part of the proceeds of this credit to payments under the contract.
2. The Chairman, Local Authority Procurement Committee on behalf of **Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai, Northern Province** invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.
3. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
4. Interested eligible bidders may obtain further information from **Chairman,Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (T.No: 021-224 1130, FAX: 021-224 3688)** and inspect the Bidding documents at the address given below from any working days from **09:00** hrs. to **14:00** hrs till **11th October 2022**.
5. Qualification requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Section 5 of the bidding document.
6. To be eligible for contract award the successful bidders shall not have been blacklisted by Ministry of finance or World Bank or any other acceptable Institutions, and Domestic Contractors shall have been registered in the field of Construction for grade mentioned in the table below with the Construction Industry Development Authority (CIDA).
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the address below from **12th September 2022** until **11th October 2022** from **09:00** hrs. to **14:00** hrs. on working days upon payment of a non-refundable fee of **Rs. 2000.00.** The method of payment will be by cash.
8. Bids (Original & Copy) shall be delivered directly or sent by registered post to the Chairman, Local Authority Procurement Committee, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai **on or before 14.30 hrs on 11th October 2022**. Bid number must be written on the left – hand corner of envelop. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend. Bids must be accompanied by a Bid security as per the information given in the Table.
9. Pre-bid meeting will be held on **27th September 2022** at **11:30** hrs in the Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai Interested bidders may attend the pre-bid meeting at their own expenses.

| Contract No | Description of work | Estimated Cost Rs. (Million) | Contract Period | Required Grade Specialty | Validity Period of bid From the last date of Bid submission | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Validity Period | Security Amount | Validity Period |
| LDSP/NP/JAF/VNPS/PT1/01 | Construction of Building for Water and Sanitary facilities at Compost Yard | 2.321 | 90 Days | C8 or Above Buildings | 63 Days | 24,000/= | 10.01.2023 |

Chairman,
Local Authority Procurement Committee,
Valikamam North Pradeshiya Sabha.
Northern Province.
Tel:021-2241130
12.09.2022


## கராத்தே சம்மேளன மாணவர்கள் கௌரவிப்பு

(கல்குடா தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திற்குட்பட்ட ஓட்டமாவடி மத்திய கல்லூரியின் கராத்தே சம்மேளத்தின் மாணவர்களை கௌரவித்தல், புதியவர்களை வரவேற்கும் நிகழ்வுகள் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றன.

ஓட்டமாவடி மத்திய கல்லூரியின் அதிபர் எம்.ஏ.ஹலீம் இஸ்ஹாக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண விளையாட்டுத் துறையின் மாகாணப் பணிப்பாளர் என்.எம்.நௌபீஸ், ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர், ஓட்டமாவடி கோட்டக்கல்வி பணிப்பாளர் வி.ரீ. அஜ்மீர், சட்டத்தரணிகளான எம்.எம்.எம்.ராசிக், ஹபீப்றிபான், ஹயா சர்வதே கல்லூரி பணிப்பாளர் ஏ.எல்.நஜிமுதீன், வாழைச்சேனை பொலிஸ் நிலைய சிறுவர் பெண்கள் குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி ஈ.எல்.பதுர்தீன், பாடசாலையின் கராத்தே பயிற்றுவிப்பாளர் மௌலவி ஏ.ஆர்.நவாஸ், சமூக செயற்பாட்டாளர்களான ஏ.எல். ஜுனைட் நளீமி, எம்.பி.எம். முஸம்மில், ஐ.எல்.எம்.ஜமால்டீன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது ஓட்டமாவடி மத்திய கல்லூரியின் கராத்தே சம்மேளத்தின் கீழ் பயிற்சி பெறும் மாணவர்கள் பாடசாலை, மாவட்டம், மாகாணம், தேசிய மட்டங்களில் கராத்தே போட்டிகளில் வெற்றி பெற்று சாதனை படைத்த மாணவர்கள் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அத்தோடு கல்லூரியின் கராத்தே சம்மேளத்தின் கீழ் பயிற்சி பெறும் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வும் இடம்பெற்றதுடன், கல்லூரி அதிபர் மற்றும் நிருவாகத்தினரால் பிரதம அதிதி கிழக்கு மாகாண விளையாட்டுத் துறையின் மாகாணப் பணிப்பாளர் என்.எம்.நௌபீஸ் மற்றும் அதிதிகள் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## மக்குளூற்று பாலர் பாடசாலையில் சிறுவர் விளையாட்டு போட்டி

(கிண்ணியா தினகரன் நிருபர்)



திருகோணமலை மக்குளூற்று பாலர் பாடசாலையின் (2022) ஆண்டுக்கான சிறுவர் விளையாட்டுப்போட்டி மக்குளூற்று கரப்பந்தாட்ட மைதானத்தில் சனிக்கிழமை (10) நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக அல் ஹித்மத்துல் உம்மா பவுண்டேஷன் தலைவர் ஹஸ்ஸாலி முஹம்மட் பாத்திஹ் கலந்து சிறப்பித்தார்.

ஏனைய விருந்தினர்களாக திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் முஹமட் நௌபர்,

கருமலையூற்று முஸ்லிம் வித்தியாலயத்தின் அதிபர் நவாஸ், திருகோணமலை ஸாஹிரா கல்லூரி ஆசிரியர்களான சாதிக்,மன்சூர்,முனவ்வரா ஜும்மா பள்ளிவாசல் மௌலவி நஸ்வி, ஓய்வுபெற்ற ஆசிரியை சலீமா, மக்குளூற்று கிராம அபிவிருத்தி சங்க தலைவர் பைசர், செயளாலர் இம்தியாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நடுவர்களாக, சாதிக் ஆசிரியர், விளையாட்டு பயிற்றுவிப்பாளர் சிபான், இல்ஹாம் ஆகியோர் கடமையாற்றினர்.

## நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறிய வர்த்தகர்களுக்கு நடவடிக்கை

(ஒலுவில் விஷேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஆகஸ்ட் மாதம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபாரம் செய்த வர்த்தகர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு மொத்தமாக மூன்று இலட்சத்து

86 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர் கே.எம்.ஏ. றிஸ்லி தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதலான விலைக்கு பொருட்கள் விற்கப்படுவதாக கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து,சில பிரதேசங்கள் சுற்றிவளைக்கப்பட்டன.

மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸின் ஆலோசனைக்கமைய பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம். சாலிய பண்டார தலைமையில்,இச்சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. அம்பாறை,தெஹியத்தக்கண்டி,அக்கரைப்பற்று, பொத்துவில்,கல்முனை, சம்மாந்துறை ஆகிய நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்திற்குட்பட்ட பிரதேசங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் ஈடுபட்டனர்.

# நகர்வலம்



# கடற்றொழிலை மேம்படுத்த கடல் வளம் பாதுகாக்கப்படும்

## இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த





அஜ்வாத் பாஸி

நாட்டிற்கு அதிக வருமானத்தை ஈட்டித்தரும் கடற்றொழிலை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதோடு மீனவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளையும் இனங்கண்டு தேவையான நடவடிக்கைகளையும் எமது அமைச்சினூடாக மேற்கொள்ள தயாராக இருப்பதாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த தெரிவித்தார்.

புதிய கடற்றொழில் இராஜாங்க அமைச்சராக பதவியேற்றுள்ள பியல் நிசாந்தவுக்கு அவரது ஆதரவாளர்களினால் அளுத்கம, களுவாமோதர அலுவலகத்தில் நேற்று முன்தினம் (10) வரவேற்பளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன, பாராளுமன்ற உறுப்பினர்களான சஞ்சீவ எதிரிமான, பெஸ்குவல் உட்பட நகர, பிரதேச சபை உறுப்பினர்கள், ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த, நாட்டிற்கு மிக முக்கியமான வருமானத்தை ஈட்டித்தரக்கூடிய ஒரு அமைச்சு தான் இன்று எனக்கு கிடைத்துள்ளது. எனது அமைச்சராக டக்ளஸ் தேவானந்தா இருக்கிறார். அவரும் கடற்றொழிலாளர்களின் நன்மைக்காக நீண்டகாலம் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகிறார்.

இதற்கு முன் நான் கல்வி இராஜாங்க அமைச்சராக பணிபுரிந்தேன். இந்த அமைச்சைக்கொண்டு எமது மாவட்டத்தில் பாரிய பணிகளை மேற்கொண்டேன்.

இம்முறை அமைச்சரவை மாற்றத்தின்போது உல்லாசப்பயணத்துறை அல்லது கடற்றொழில் அமைச்சைத் தான் நான் எதிர்பார்த்தேன். அதேபோன்று கடற்றொழில் அமைச்சு எனக்கு கிடைத்துள்ளது. அந்த வகையில் எமது மாவட்டத்தோடு சம்பந்தமான அமைச்சென்ற வகையில் நிறைய சேவைகளை மீனவர்களுக்கு செய்ய நான் எதிர்பார்த்திருக்கிறேன். மீனவர்களுக்கு இன்று நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றை இனங்கண்டு தீர்ப்பதற்கு முதலில் நடவடிக்கை எடுப்பேன்.

பேருவளை மீன்பிடி துறைமுகம் பிரசித்திபெற்ற மிக முக்கிய இடத்தை வகிக்கும் ஒரு துறைமுகமாகும்.

இதனை மையமாக வைத்து நிறைய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டு வருகிறார்கள். இவர்களுக்கும் நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. இவற்றை மீனவர்களுடன் கலந்துரையாடி நடவடிக்கைகளை பெற்றுக்கொடுக்க முடியுமான நடவடிக்கை மேற்கொள்வேன் எனவும் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த இதன்போது தெரிவித்தார். இந்நிகழ்வில் மீனவ தொழிற்சங்க பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

# எலிசபெத் மகாராணிக்கு கொழும்பு வர்த்தகர் அஞ்சலி

ஏ.எஸ்.எம். ஜாவித்



பிரித்தானியாவின் 2ஆம் எலிசபெத் மகாராணியின் மரணச் செய்தி கேட்டு உலக நாடுகளில் அவருக்கா மக்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். இந்த வகையில் இலங்கையிலும் அவருக்கு பல இடங்களில் அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்று வருகின்றன.

கொழும்பு, போதிராஜ மாவத்தையில் சுமார் 30 வருடங்களுக்கும் மேலாக தோல் பொருட்களில் செய்யப்பட்ட பைகள் உள்ளிட்ட பொருட்களை விற்பனை செய்து வரும் ஜினதாஸ என்பவர் பிரித்தானிய மகாராணி பரம்பரையில் அன்பும் ஆசையும் கொண்டு வந்துள்ளார். இவர் பிரித்தானிய இளவரசி மற்றும் அவரது குடும்பங்களின் நிழற்படங்களை சேகரித்தும் வைத்துள்ளார்.

நேற்று அவர் புறக்கோட்டை போதிராஜ மாவத்தையிலுள்ள அவரது கடை இருந்த இடத்தில் பிரித்தானி மகாராணிக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவரது உருவப்பட பதாகைகளை காட்சிப்படுத்தியும் அவரால் சேகரிக்கப்பட்ட இளவரசி குடும்பத்தின் நிழற்படங்கள், செய்திகள் உள்ளிட்ட ஆவணங்களை வைத்து அவருக்கு தீப்பந்த சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தி வருகிறார்.

### பாடசாலைக்கு வரும்

# மாணவர்களின் புத்தகப்பைகளை பரிசோதிப்பதற்கு நடவடிக்கை

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

பாடசாலைகளில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ள நிலையில் மாணவர்களின் புத்தகப்பைகளை பரிசோதிப்பதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிய வருகிறது.

மாணவர்களை பயன்படுத்தி பாடசாலைக்குள் போதைப்பொருள் கடத்தப்படுவதாகவும் இதனை தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கையினை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

கிராமிய மற்றும் நகர்ப்புர பாடசாலைகளுக்கு வரும் மாணவர்கள் பாடசாலைக்கு நுழையும்போது ஒழுக்கத்துடன் வருவதாகவும் பின்னர் கழிவறை பகுதிக்கு சென்றுவந்த பின்னர் அவர்களின் செயற்பாட்டில் மாற்றங்கள் காணப்படுவதாகவும் தெரிய வந்துள்ளதுடன் இதனை கருத்திற்கொண்டு குறித்த நடைமுறைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதனால் மாணவ குழுக்களிடையே இடை இடையே மோதல்கள் ஏற்பட்டு வருவதாகவும் இது தொடர்பில் அதிபர் ஆசிரியர் குழாம் மற்றும் பெற்றோர்களும் விழிப்புடன் செயல்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

### மாத்தறை மாவட்டம்;

# தமிழ் மொழித்தின போட்டிகள் எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பம்

வெலிகம தினகரன் நிருபர்

அகில இலங்கை தமிழ் மொழித்தின மாத்தறை மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் எதிர்வரும் 14ம் திகதி புதன் கிழமை மாறை/ தாருல் உலூம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. இதில் மாத்தறை மற்றும் அகுரஸ்ஸ வலய மட்டப் பாடசாலைகள் கலந்து கொள்ளவுள்ளன.

எழுத்தாக்கப் போட்டிகள் ஏற்கனவே நடைபெற்று முடிந்துள்ள நிலையில், ஏனைய போட்டிகளே குறித்த தினத்தில் நடைபெறவுள்ளது. பேச்சு, பாஓதல், இசை. நடனம், விவாதம், நாடகம் போன்ற போட்டிகளே பல்வேறு பிரிவு மட்டங்களில் நடைபெறவுள்ளன.

முலட்டியன வலய கல்விப் பணிப்பாளரும், தென்மாகாண தமிழ் மொழி மூலப் பாடசாலைகளுக்குப் பொறுப்பான பதில் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான எம்.டீ.எம். ஆகில் தலைமையில் நடைபெறும் இப் போட்டிகளில் பாடசாலை மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவ மாணவிகள் கலந்து கொள்கின்றனர்.

காலி மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் யாவும் கடந்த வாரம் நடைபெற்றன. மூன்று மாவட்டங்களிலும் வெற்றியீட்டிய சகல போட்டியாளர்களும் மாகாண மட்டப் போட்டிகளுக்கு தகுதி பெறுவர் என மாவட்ட இணைப்பாளர் அஷ்ஷேக் எம்.எம்.எம். முன்திர் (நளீமி) ஆசிரியர் தெரிவித்தார். தென் மாகாண மட்டப் போட்டிகள் எதிர்வரும் அக்டோபர் மாதம் 5ம் , 6ம் திகதிகளில் வெலிகம மதுராபுர அஸ்ஸபா மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அநு./ ஹோராப்பொல கிராமத்திற்கு பொது குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம்

## அல்ஹிமா அமைப்பிற்கு மக்கள் பாராட்டு





கெக்கிராவ குறூப் நிருபர்

அநுராதபுரம் ஹோராப்பொல கிராமத்தில் பொதுமக்கள் பாவனைக்காக அமைக்கப்பட்டுள்ள பொது குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் மற்றும் அல்ஹிமா அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூருல்லாஹ் (நளீமி) ஆகியோர் இணைந்து வைபவரீதியாக பொதுமக்கள் பாவனைக்கு (10) திறந்து வைத்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான், அல்ஹிமா இஸ்லாமிய அமைப்பின் பணிப்பாளர் நூருல்லாஹ்விடம் விடுத்த வேண்டுகோளின் பேரில் குவைத் நாட்டின் நிதியொதுக்கீட்டின் கீழ் இக்குடிநீர் சுத்திகரி'ப்பு இயந்திரம் மேற்படி பிரதேசத்தில் அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் பொதுமக்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# கட்டடமொன்றுக்குள் இருந்து அழுகிய நிலையில் சடலம் மீட்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

புத்தளம், மதுரங்குளி, பாலசோலை பகுதியில் தோட்டம் ஒன்றில் நிர்மாணிக்கப்பட்ட சிறிய கட்டடமொன்றுக்குள் இருந்து அழுகிய நிலையில் சடலமொன்று (09) மீட்கப்பட்டுள்ளது. வென்னப்புவ பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய குமார என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர். வென்னப்புவ பகுதியைச் சேர்ந்த குறித்த நபர், மதுரங்குளி பாலசோலை பகுதியில் உள்ள தோட்டமொன்றில் கூலிக்கு இருக்கும் தனது நண்பரை பார்ப்பதற்காக அடிக்கடி வந்து செல்பவர் என மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட நபர், கடந்த டிசம்பர் மாதம் முதல் தனது நண்பர் வசிக்கும் பாலசோலை பகுதியில் உள்ள தோட்டத்தில் நண்பருடன் வசிந்து வந்துள்ளதாகவும், கடந்த சனிக்கிழமை இரவு 7 மணி முதல் முதல் நண்பரின் வீட்டிலிருந்து வெளியேறியுள்ளதாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

இதனையடுத்து, வியாழக்கிழமை (08) இரவு தோட்டத்தில் மின்சாரம் பெறுவதற்காக கட்டப்பட்டுள்ள சிறிய கட்டடம் ஒன்றுக்குள் இருந்து துர்நாற்றம் வீசுவதனை அவதானித்த நண்பரின் மகன், இதுபற்றி தனது தந்தையின் கவனத்திற்கு கொண்டு சென்று பின்னர் சம்பவம் பற்றி மதுரங்குளி பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அன்னாசிகல தமிழ் வித்தியாலயத்தில் ஆளுமை விருத்திச் செயற்றிட்டம்



மத்துகம அன்னாசிகல தமிழ் வித்தியாலய ஆரம்ப பிரிவு மாணவர்களின் மொழித்திறன் மற்றும் கணித எண்ணக்கரு விருத்தி, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள், சமய ஒழுக்க விடயங்கள், சுகாதார பழக்க வழக்கங்கள் மற்றும் கற்றல் செயற்பாடுகளை அதிகரிக்கும் நோக்கில் மாணவர்களின் ஆளுமை விருத்தி செயற்றிட்டமொன்று அண்மையில் பாடசாலையில் முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் றிப்கான் தலைமையில் அண்மையில் நடைபெற்ற செயலமர்வில் தர்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட ஆங்கில பாட விரிவுரையாளர் என். சிவச்செல்வன் தலைமையிலான ஆசிரியர்களான ஆர்.கேசாலினி, எம். எப். சுமையா, எம்.ரீ.எப். ஸப்ரா ஆகிய ஆசிரிய பயிலுநர்கள் இச்செயற்றிட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்து நடத்தினர்.

மேற்படி செயற்றிட்டமானது மாணவர்களுக்கு சிறந்த பயன்மிக்கதாக அமைந்ததோடு சிறந்த மாணவர் சமூகமொன்றை உருவாக்கும் நோக்கில் மேற்படி செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டதாக பாடசாலை அதிபர் றிப்கான் தெரிவித்தார்.

# வாகன விபத்தில் இருவர் உயிரிழப்பு

## ஹம்பாந்தோட்டையில் சம்பவம்

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

ஹம்பாந்தோட்டை வீரவிலை பிரதான வீதியில் திஸ்ஸபுர பிரதேசத்தில் ஏற்பட்ட வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதாக வீரவிலை பொலிஸார் (09) தெரிவித்தனர்.

இவ் விபத்தில் திஸ்ஸமகாராமை சேனபுர பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட டப்ளியூ. ஏச். ரஞ்சனீ எனும் 58 வயது பெண்ணும் திஸ்ஸமகாராமை ககசிறிபுர பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட கே. எச். அசோகலக்மால் எனும் 33 வயது இருவருமே உயிரிழந்துள்ளனர்.

ஹம்பாந்தோட்டை பிரதேசத்திலிருந்து சீமெந்து ஏற்றி வந்த லொறி ஒன்றுடன் மோதியே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் சிறியலொறி வண்டியின் சாரதி 33வயது நபரும் பின்னால் வருகை தந்துகொண்டிருந்த பெண் ஒருவருமென இருவருமே உயிரிழந்துள்ளனர்.

# வதிவிட பயிற்சி நெறி

இ/கலபட தமிழ் வித்தியாலயத்தில் வதிவிட பயிற்சிப்பாசறை கடந்தவாரம் பாடசாலை அதிபர் தினேஷ் தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

கொரோனா மற்றும் நாட்டின் ஸ்தம்பித நிலையால் பாதிக்கப்பட்டிருந்த கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கில் தரம் 06 09 வரையிலான மாணவர்களுக்கு இப்பாசறை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

பாசறையின் இறுதிநாள் நிகழ்வுக்கு சப்ரகமுவ மாகாண உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி சகுந்தலா கலந்துசிறப்பித்ததோடு அவர் தனது உரையில், ரோயல் கல்லூரியில் இல்லாத சந்தோஷத்தை இங்கே நான் உணர்கிறேன் எனக்கூறியமை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய விடயமாகும்.





# சூரியவெள கால்வாயிலிருந்து சடலம் மீட்பு

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

சூரியவெள சமூக சேவைபுர கிராம கால்வாயில் மிதந்து கொண்டிருந்த சடலமொன்றினை சூரியவெள பொலிஸார் (10) கண்டெடுத்துள்ளனர்.

சூரியவெள கோண்கெடிஆர சமகி மாவத்தையை வசிப்பிடமாகக் கொண்ட தர்மதாஸ கொடிகார எனும் 63 வயது இரண்டு குழந்தைகளின் தந்தையே இவ்வாறு இறந்த நிலையில் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

வீட்டிலிருந்து மாலையில் வருகை தந்த நபர் வேறு ஒருவருடன் கால்வாயிற்கு அருகாமையில் மதுபானம் அருந்திக் கொண்டிருந்துவிட்டுப் பிரிந்து சென்றதாக மற்றையவர் தெரிவித்துள்ளதாக ஆரம்பகட்டவிசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாக தெரிவித்த பொலிஸார், விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2023ஆம் வருடம்

## நாத்தாண்டிய பிரதேச சபை

2023ஆம் வருடத்திற்காக நாத்தாண்டிய பிரதேச சபைக்குத் தேவையான கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான வழங்குநர்கள் பதிவு செய்து கொள்ளப்படுவர்.

**பொருட்கள் வழங்கல்**

1. மேசை, கதிரை, அலுமாரி, கோவை கெபினட் போன்ற அலுவலக உபகரணங்கள் (உருக்கு, பலகை, பிளாஸ்திக்)
2. அலுவலக வேலைகளுக்குத் தேவையான காகிதாதிகள் மற்றும் உபகரணங்கள்.
3. துப்புரவேற்பாட்டுச் சேவைக்குத் தேவையான பொருட்கள் (சவர்க்காரம், பைனோல், ஹார்பிக், விளக்குமார், அரிவாள், கத்தி, குப்பைத்தொட்டி, டெட்டோல், கை வண்டி, மண்வெட்டி, தும்புத்தடி, பிரம்புக் கூடை)
4. வீதி நிர்மாணப் பொருட்கள் (கருங்கல், ஏபீசீ, சிப்ஸ், சரளைக் கற்கள், மணல், சீமெந்து, இரும்பு, கொலாஸ், தார், பலகைகள், விறகு)
5. கட்டிட நிர்மாணப் பொருட்கள் (கருங்கல், செங்கல், சரளைக் கற்கள், மணல், ஓடுகள். சீமெந்து, இரும்பு, நிறப்பூச்சுகள், தார், பலகைகள்)
6. நீர்க்குழாய் உதிரிப்பாகங்கள், நீர்மானிகள், நீர்ப் பம்பிகள்
7. ஹியும் குழாய் மற்றும் கொங்கிறீட் உற்பத்திகள்
8. அலுவலக வேலைகளுக்குத் தேவையான இயந்திராதிகள் (அச்சு இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம், கணனி, டுப்ளோ இயந்திரம், வளிச்சீராக்கி இயந்திரங்கள், ஒலிபெருக்கி உபகரணங்கள்)
9. புகைப்படப் பிரதி இயந்திரம், டுப்ளோ இயந்திரம் மற்றும் அச்சு இயந்திரத்திற்குத் தேவையான மைகள், டோனர்
10. கெப் வண்டிகள், கென்டர், டிரெக்டர், முச்சக்கர வண்டி, பக்கோ இயந்திரம், மோட்டர் கிரேடர்களுக்குத் தேவையான டயர்/ டியூப்/ ரிம்டேப்/ பற்றரி மற்றும் உதிரிப்பாகங்கள் (அதிகாரப் பிரதேசத்தினுள் அல்லது அதற்கு அண்மையில் அமைந்திருத்தல் வேண்டும்)
11. மின் விளக்குகளைப் பராமரிப்பதற்குத் தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
12. நாய்களுக்கான கழுத்துப் பட்டி
13. குப்பைகளை அப்புறப்படுத்தும் வேலைகளுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் (பொலித்தின் உறைகள், குப்பைத் தொட்டிகள், சேதனப் பசளைத் தொட்டிகள்)
14. உபசாரங்களுக்குத் தேவையான உணவு பானங்கள்
15. பூந்தோட்ட அலங்காரத்திற்குத் தேவையான உபகரணங்கள் (பூக் கன்றுகள், பழமரக் கன்றுகள், பூச்சாடிகள்)
16. சிறுவர் பூங்காவுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள்
17. குடி நீர் போத்தல்கள்
18. மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள்
19. எரிபொருள் மற்றும் எரிவாயு
20. திரைச்சீலைகள், துணிகள், கொடிகள் மற்றும் சீருடைகள் (சாரிகள், ட சேர்ட்கள், விளையாட்டு உடைகள்)
21. ஞாபகச் சின்னங்கள் மற்றும் பரிசுப் பொருட்கள்
22. பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான உபகரணங்கள் (பைகள், உணவுப் பெட்டிகள், தண்ணீர் போத்தல்கள்)
23. CCTV கமரா முறைமைகளைப் பொருத்துதல் மற்றும் உள்ளக தொலைபேசி முறைமைகளைப் பொருத்துதல்

**வேலை மற்றும் சேவை வழங்கல்**

1. அச்சிடல் சேவைகள் மற்றும் முத்திரைகளைத் தயாரித்தல்
2. அலுவலக இயந்திராதிகளைப் பழுதுபார்த்தல் (அச்சு பொறிகள், புகைப்படப் பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம், கணனி, டுப்ளோ இயந்திரம், வளிச்சீராக்கி இயந்திரங்கள், ஒலிபெருக்கி உபகரணங்கள்)
3. CCTV கமரா முறைமைகளைப் பொருத்துதல் மற்றும் உள்ளக தொலைபேசி முறைமைகளின் திருத்தவேலைகள்
4. பெயர்ப் பலகை, அறிவித்தல் பலகை, பதாகைகள் தயாரித்தல்
5. கட்டிட, வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்புச் சேவை 5 இலட்சம் ரூபாவிற்கு குறைவானவை
6. கட்டிட, வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்புச் சேவை 5 இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்டவை (இக்டாட் பதிவுடன்)
7. வீதிகள், பாலங்கள், மதகுகள், வடிகான்கள் நிர்மாண சேவை ஒப்பந்தங்கள் 5 இலட்சம் ரூபாவிற்கு குறைவானவை
8. வீதிகள், பாலங்கள், மதகுகள், வடிகான்கள் நிர்மாண சேவை ஒப்பந்தங்கள் 5 இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்டவை (இக்டாட் பதிவுடன்)
9. மேசன் வேலை, தச்சு வேலை, வெல்டிங் வேலை, நீர்க்குழாய் தொழில்நுட்ப சேவைகள், உள்ளக தொலைபேசி சேவைகள்
10. வீதி சமப்படுத்தல், டோஸர் இயந்திரம், எக்ஸ்கேவேட்டர் இயந்திரங்களை வாடகைக்கு அமர்த்துதல் மற்றும் போக்குவரத்துச் சேவைகளை வழங்கல் (கிரவல் போக்குவரத்து)
11. கெப் வண்டி, கென்டர், டிரக்டர், முச்சக்கர வண்டி, பெக்கோ இயந்திரம், மோட்டர் கிரேடர் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் (அதிகாரப் பிரதேசத்திற்குள் அல்லது அதற்கு அருகாமையில் இருத்தல் வேண்டும்)
12. ஒலிபெருக்கி, விழாக்களுக்கான பொருட்களை வாடகைக்கு வழங்குதல்
13. சட்டத்தரணிகள் சேவை மற்றும் நில அளவைச் சேவை வழங்கல்
14. நீர் பம்பி திருத்தவேலைகள்
15. ஆய்வுகூட சேவைகள்
16. குழாய்க் கிணறுகளை நிர்மாணித்தல்
17. பாதுகாப்பு சேவைகள் வழங்குதல்
18. மரங்களை வெட்டுதல்

பதிவிற்காக இங்கு தரப்படும் விண்ணப்பத்தினைப் பயன்படுத்துதல் வேண்டும். ஒரு வழங்கலுக்காக ரூ. 2000.00 கட்டணம் செலுத்திப் பதிவு செய்தல் வேண்டும். காசோலை, காசுக்கட்டளைகளை நாத்தாண்டிய பிரதேச சபையின் பெயரில் எழுதுதல் வேண்டும். விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் 2022.10.31ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு நிறைவுறும். விண்ணப்பத்தினை தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2023ஆம் வருடம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

- ❖ வழங்குநர்களின் வியாபாரத்திற்காக வியாபாரப் பதிவுச் சான்றிதழ் அல்லது அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றிருத்தல் கட்டாயமாகும்.
- ❖ பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளுக்காக மட்டும் பதிவு செய்தல் வேண்டும்.
- ❖ பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குவதிலுள்ள அனுபவம் தொடர்பான சான்றிதழின் புகைப்படப் பிரதியினை இணைத்து அனுப்புதல் வேண்டும்.
- ❖ பதிவினை வழங்குவது தொடர்பான இறுதித் தீர்மானம் நாத்தாண்டிய பிரதேச சபைக்குரியது.
- ❖ வெட் வரிச் சான்றிதழினையுடையவர்கள் வெட் வரிச் சான்றிதழினையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
- ❖ தேவைப்பாடுகளுக்கமைய பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்குப் புறம்பாக பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**சட்டத்தரணி ரொஷான் நிலந்த பர்னாந்து,**
**தலைவர்,**
**நாத்தாண்டிய பிரதேச சபை**

2022-09-12
**பிரதேச சபை, அலுவலகம்,**
**நாத்தாண்டிய.**
**தொலைபேசி: 032-2254276 / 032-4934143**

## நாத்தாண்டிய பிரதேச சபை

### 2023ஆம் வருடத்திற்கு வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம்

வழங்குநரின் பெயர் : ..............................................................................
முகவரி : ..............................................................................
அடையாள அட்டை இலக்கம் : ..............................................................................
தொலைபேசி இலக்கம் : .............................. தொலைநகல் இல. ...........................
மின்னஞ்சல் முகவரி : ..............................................................................
வழங்கப்படுகின்ற 1. பொருள்: ..............................................................
2. சேவை: ..............................................................
3. வேலை: ..............................................................

பொருள் / சேவை வழங்கல் தொடர்பாக பெற்றுள்ள அனுபவம்: 1. ..........................................
2. ..........................................
3 ..........................................

இக்டாட் பதிவு இலக்கம் / வியாபாரப் பதிவு இலக்கம்:..............................................................

பதிவுக் கட்டணம் ரூ.................................................. (ஒரு விடயத்துக்காக 2000.00 ரூபா)

காசோலை இலக்கம் / காசுக்கட்டளை இலக்கம்:..............................................................

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானது என்பதையும் குறித்த பதிவுச் சான்றிதழை இத்துடன் இணைத்துள்ளேன் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். வழங்குநர்களைப் பதிவு செய்வதற்குரிய விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்குகிறேன்.

**திகதி:............................** .................................................
**கையொப்பம்**

**அலுவலக உபயோகத்திற்காக**

விடயப்பொறுப்பதிகாரியின் பரிந்துரை:..............................................................
விடயப் பொறுப்பதிகாரியின் கையொப்பம்:.......................................... திகதி: ..................
செயலாளரின் பரிந்துரை:................................ தலைவர் ஒப்புதல்:..................................

.................................... ................................
செயலாளர் தலைவர்

பற்றுச்சீட்டு இலக்கம்:.............................. திகதி:..............................................
பதிவேட்டின் பக்கம் இலக்கம்:..............................................................

# இலங்கை திரிபோஷ லிமிடட்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை திரிபோஷ லிமிடட்டிற்கு HPLC தர நீருக்காக Photodiode Array, Fluorescence Detector, Auto sampler சகிதம் நீர் சுத்திகரிப்பு முறைமையுடன் HPLC ஐ வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல்**

**Bid No: SLTL/TB/17/2022**

1. இலங்கை திரிபோஷ லிமிட்டிற்கு HPLC தர நீருக்காக Photodiode Array, Fluorescence Detector, Auto sampler சகிதம் நீர் சுத்திகரிப்பு முறைமையுடன் HPLC ஐ வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் பராமரித்தலுக்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நிறுவனத்தின் பெறுகைக் குழுத்தலைவர் அழைக்கின்றார்.
2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை ஊடாக, விலைமனுச் செயற்பாடானது மேற்கொள்ளப்படும்.
3. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு ஒப்பந்ததாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 2007இன் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் கூட்டிணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வங்காட்டும் விலைமனுதரர்கள் வேலை நாட்களில் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையே ஜா-எல, கப்புவத்த, த.பெ. இல. 17, நீர்கொழும்பு வீதி, இலங்கை திரிபோஷ லிமிடட்டின் சிரேஷ்ட முகாமையாளரிமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
5. ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்கள் பின்வரும் முகவரிக்கு பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்படும் PCA3 சகிதம் மீளளிக்கப்படாத கட்டணமாக 10,250.00 ரூபா ரொக்கப் பணத்தையும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றையும் செய்வதன் பேரில் 2022-10-03ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் இலங்கை திரிபோஷ லிமிடட்டின் பெறுகைப் பிரிவிலிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் இறுதி நாள் முதல் 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும். (2022.10.04ஆம் திகதி முதல் 2023.01.03ஆம் திகதி வரை)
7. விலைமனுக்கள் 2022-10-04ஆம் திகதி பி. ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். அனைத்து விலைமனுக்களுடனும் 600,000.00 இலங்கை ரூபா தொகைக்கு விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் இறுதி நாள் முதல் 119 நாட்கள் வரையில் (2022-10-04ஆம் திகதி முதல் 2023.01.31ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியால் வழங்கப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிடப்பட்ட நேரத்தில் (2022.10.04ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு) விலைமனுதாரர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் பின்வரும் முகவரியில் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும்.

மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**தலைவர்,**
**உயர்நிலை பெறுகைக் குழு,**
**இலங்கை திரிபோஷ லிமிடட்,**
**த. பெ. 17, நீர்கொழும்பு வீதி,**
**கப்புவத்த, ஜா-எல.**
**011-2236588, 011-2237418**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

01. உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் (WFP) கிடைக்கும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தொகை (Break Bulk Cargo / 20', 40' Container), மியன்மார் அரசிலிருந்து கிடைக்கும் அரிசி தொகை (20', 40' Container) மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெறும் ஏனைய உதவிகளை உணவு ஆணையாளர் திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் துறைமுகத்திலிருந்து விடுவித்தல், போக்குவரத்து மற்றும் இறக்குதல் என்பவற்றுக்கு 2022ஆம் வருத்திற்கு விலைமனுக்களை கோருதல்.

- அத்தியாவசிய உணவுப் பொருட்களை விடுவித்தல் (Donation Distribution/04/01)
அத்தியாவசிய உணவுப் பொருட்களை துறைமுகத்திலிருந்து மருதானை ஒல்கொட் மாவத்தை புகையிரத களஞ்சிய முற்றவெளி / ஒருகொடவத்த / வெயாங்கொட கட்டிடத்தொகுதி வரை சரியான முறையில் விடுவிப்பதற்காக விலைமனுகோரல் ''அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில்'' பெற்றுக்கொண்ட 5 இலட்சம் (ரூபா 500,000.00) பெறுமதியான விலைக்கோரல் பிணை முறியொன்றை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு சமர்ப்பிக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
- போக்குவரத்து (Donation Distribution/04/02)
மருதானை ஒல்கொட் மாவத்தை புகையிரத களஞ்சிய முற்றவெளி / ஒருகொடவத்த / வெயாங்கொட கட்டிடத்தொகுதியிலிருந்து போக்குவரத்து முடியும் இடமான அனைத்து மாவட்டச் செயலாளர் அலுவலகங்கள் / பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் / Mini Coop மற்றும் Coop City என்பவற்றுக்கு 20 மற்றும் 40 மெற்றிக் தொன் அளவிலான கொள்கலன்கள் மூலம் அல்லது மூடப்பட்ட லொறிகள் போக்குவரத்து செய்வதற்கான விலைமனுக்கள் கோரல் ''அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில்'' பெற்றுக்கொண்ட 2 இலட்சம் (ரூபா 200,000.00) பெறுமதியான விலைக்கோரல் பிணை முறியொன்றை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு சமர்ப்பிக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
- 10Kg - 100Kg வரையான பல்வேறு அளவுகளிலான உறைகளை லொறிகளுக்கு ஏற்றுதல் மற்றும் இறக்குதல் (Donation Distribution/04/03)
மருதானை ஒல்கொட் மாவத்தை புகையிரத களஞ்சிய முற்றவெளி / ஒருகொடவத்த / வெயாங்கொட கட்டிடத்தொகுதியில் குவித்து வைக்கப்பட்டுள்ள 10Kg - 100Kg வரையான பல்வேறு அளவுகளிலான அரிசி மூடைகளை தோளில் சுமந்து லொறிகளுக்கு ஏற்றுவதற்காக விலைமனு கோரல். ''அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில்'' பெற்றுக்கொண்ட ஒரு இலட்சம் (ரூபா 100,000.00) பெறுமதியான விலைக்கோரல் பிணை முறியொன்றை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாற சமர்ப்பிக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

02. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறைக்கமைய விலைக்கோரல்கள் மேற்கொள்ளப்படும்.

03. மேற்படி விடயங்கள் தொடர்பில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்களுக்குத் தேவையான மேலதிக தகவல்களை கொழும்பு -02, இல. 330, யூனியன் பிளேஸ், உணவு ஆணையாளர் திணைக்களத்தின் கணக்கிடல் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே. இல. 0112-424211 / 0112-329216) குறித்த விலைக்கோரல் விண்ணப்பங்களை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் விலைமனுக்கள் திறக்கப்படும் தினத்தில் மு.ப. 10.30 மணி வரை பின்வரும் முகவரியிலுள்ள எமது பிரதான அலுவலகத்திற்கு வருகை தந்து 500.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை சிறாப்பருக்குச் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். விலைக்கோரல் விண்ணப்பத்தை பெற்றுக்கொள்வதற்கு வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் கட்டாயமாகும். சிறாப்பருக்குச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை விண்ணபத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

04. முத்திரைக் குறி பொறிக்கப்பட்டு வெவ்வேறாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவங்களை ஒரு உறையில் இட்டு பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி அல்லது உணவு ஆணையாளர் திணைக்களத்தின் கணக்கிடல் பிரிவிற்கு 2022-09-30ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அன்றைய தினமே பி.ப. 2.05 மணிக்கு திறக்கப்படும் என்பதுடன் இதற்கு முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ள நிறுவனத்தின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**உணவு ஆணையாளர் திணைக்களம்,**
**இல. 330, யூனியன் பிளேஸ்,**
**கொழும்பு 02.**

SUNDAY OBSERVER adz
தினகரன் வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
| --- | --- | --- |
| ரூ. 500/- (Except Thinakaran Varamanjari) | ரூ. 700/- (Except Thinakaran Varamanjari) | ரூ. 950/- |

- ISLANDWIDE -

MONARAGALA
MONARAGALA .................... 077 6 565 653
SRI RAMYA STORES, NO 19, 20, MONARAGALA.

MATARA
MATARA .................... 047 2 230 093
NILMINI STORSE - NO 69, DHARMAPALA MAWATHA, MATARA

ANURADAPURA
THABUTTEGAMA .................... 025 2 276 431
MUTHUKUDA PAPER CORNER - No 95, Thambuttegama

ANURADHAPURA .................... 025 2 221 411
MAHAJANA BOOK SHOP - Anuradhapura

ANURADHAPURA .................... 025 2 222 806
SATHSARA BOOK SHOP - 40, KADAPANAHA, ANURADHAPURA

ANURADHAPURA .................... 025 2 222 575

RATHNAPURA
RATHNAPURA .................... 071 2 900 35
NO 15, CHURCH ROAD, RATNAPURA

RATHNAPURA .................... 045 2 223 883
LAKE HOUSE ADVERTISING CENTER - NO 88, MAIN STREET, RATNAPURA

HAMBANTHOTA
MIDDENIYA .................... 047 2 27 245
SOMASIRI STORES - HUNGAMA ROAD MIDDENIYA

TANGALLE .................... 047 2 240 402
D.W.TRADERS - NO 158, MATARA ROAD, TANGALLE

HAMBANTOTA .................... 077 0 051 975

AMBALANTOTA .................... 047 2 223 152
SUMITHRA TRADE CENTER - NO 11, MAIN STREET, AMBALANTOTA.

TISSAMAHARAMA .................... 047 2 239 088
T.D. MADANAYAKE & COMPANY (PVT) LTD - MAIN STREET, TISSAMAHARAMA

BATTICALO
KATHTHANKUDY .................... 077 7 435 566
A.L.M. UWAIS, OLD POST OFFICE BUILDING, KATHTHANKUDY.

BATTICALA .................... 065 2 226 034
PRIYA STORES, N.K. RATHNASINGHAM, NO. 01, MARKET ROAD, BATTICALOA.

POLONNARUWA
POLONNARUWA .................... 077 9 627 542
PARAKUM BOOK SHOP - HOSPITAL JUNCTION, POLONNARUWA.

KADURUWELA .................... 076 4 201 263
GALLE CITY STORES - KADURUWELA, POLONNARUWA

KANDY
HIDAGALA .................... 081 3 813 666
ANURA STORES - DOLUWA ROAD, HINDAGALA.

KANDY .................... 081 2 222 780
JAYAKODY TRADERS (PVT) LTD - NO.229/A, PERADENIYA ROAD, KANDY.

GAAMPOLA .................... 081 2 354 994
DAMASA CENTER - NO.14, STATION ROAD, GAMPOLA.

NAWALAPITIYA .................... 077 3 039 996
CHEAP SIDE BOOK SHOP - NO 46, GAMPOLA ROAD, NAWALAPITIYA.

MATHALE
MATALE .................... 066 5 671 304
MALAKA TRADERS (PVT) LTD - NO.55-57, MAIN STREET, MATALE

NUWARA ELIYA
N.ELIYA .................... 052 2 234 660
NO 06, NEW MARKET BUILDING, NUWARA ELIYA

KEGALLA
KEGALLA .................... 035 2222427
SALGADO BAKERY & HOTEL - KEGALLE

KEGALLA .................... 035 2 221 721
RED ROSE BOOK SHOP - NO.253 B, MAIN STREET, KEGALLE

BADULLA
BANDARAWELA .................... 071 0 796 060
NAYANA BOOK SHOP - NO 343, BANDARAWELA

BADULLA .................... 055 2 225 616
ADVERTISING OFFICE (LAKE HOUSE) - NO. 14, BADULLA

DEMODARA .................... 055 2 225 616
ADVERTISING AGENCY - NEAR MUTHIYANGANA CLOCK TOWER, BADULLA.

classified@lakehouse.lk
011 2 429 342 | 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380

# பல்கலை. அனுமதி தொடர்பான இலவச கருத்தரங்கு

*ஓமந்தை விஷேட நிருபர்*

பல்கலைக்கழக அனுமதி தொடர்பான இலவச கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 13.09.2022 அன்று முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை பம்பைமடு வவுனியாப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள SH 4 மண்டபம், சூசைரட்ணம் கட்டடத்தொகுதியில் நடைபெறவுள்ளது.

க.பொ.த உயர்தரம் 2021 ஆண்டு பரீட்சைக்கு தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க எதிர் பார்த்திருக்கும் அனைத்து பாட மாணவர்களுக்கும் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்தல், இணைய வழிப்பதிவு மற்றும் பல்கலைக்கழக பாடத் தெரிவு தொடர்பான விழிப்புணர்வு மற்றும் வழிகாட்டல் தொடர்பாகவே குறித்த கருத்தரங்கு இடம்பெற இருக்கின்றது.

குறித்த கருத்தரங்கானது தொழில் வழிகாட்டல் அலகு, வவுனியாப் பல்கலைக்கழகத்தின் ஒழுங்கமைப்பில் வெளிச்சம் அறக்கட்டளையின் நிதி அனுசரணையுடன் இடம்பெற இருப்பது குறிப்பிடத்தக்கது.

# சுத்தானந்த இந்து இளைஞர் சங்க பாலர் பாடசாலையின் 27 ஆவது விளையாட்டு விழா

*ஓமந்தை விஷேட நிருபர்*

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க பாலர் பாடசாலையின் 27 ஆவது விளையாட்டு விழா (10) பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் தலைவர் வைத்தியர் ப.சத்தியநாதன் தலைமையில் இடம்பெற்ற விளையாட்டு விழாவில் வவுனியா பிரதேச செயலாளர் ந. கமலதாசனும் சிறப்பு விருந்தினராக வைத்தியர் ராஜ்மோகன் மனோராஜ்ஜும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது இருபிரிவு மாணவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# அம்புலன்ஸ் சாரதியை தாக்கிய குற்றத்தில் கைதானவர் மறியலில்

*யாழ்.விசேட நிருபர்*

நோயாளியை வைத்திய சாலைக்கு அழைத்து சென்ற நோயாளர் காவு வண்டி சாரதியை தாக்கியவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் திடீரென சுகவீனமுற்ற நிலையில் நோயாளர் காவு வண்டிக்கு அறிவித்து , நோயாளர் காவு வண்டி மூலம் வைத்திய சாலைக்கு அழைத்து செல்லப்பட்டார்.

அதன் போது வீதியில் நோயாளர் காவு வண்டியை இடைமறித்த அதே பகுதியை சேர்ந்த இளைஞன் ஒருவர் சாரதியை சரமாரியாக தாக்கி விட்டு தப்பி சென்று இருந்தார்.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதன் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சாரதியை தாக்கியதாக இளைஞன் ஒருவரை கைது செய்து மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

அதனை அடுத்து மன்று குறித்த இளைஞனை எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது.

## ஹல்தும்முல்லை பிரதேச சபை

### 2023ஆம் வருடத்திற்கான வரவு செலவு அறிக்கை வரைவினை பொது மக்களின் பரிசீலனைக்கான சந்தர்ப்பம் வழங்கல்

1987இல. 12 எனும் மாகாண சபை (துணைஏற்பாடுகள்) சட்டத்தின் 2ஆம் பிரிவும் 1987இல 15 எனும் பிரதேச சபை சட்டத்தின் 223ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 இல 15 எனும் பிரதேச சபை சட்டத்தின் 184ஆம் பிரிவில் கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களின்படி உவாமாகாண ஆளுநரால் 2020.10.29ஆம் நாள் வர்த்தமானியின் இல. 2199/25இன் மூலம் பிரசித்தப்படுத்தப்பட்ட 2020 பிரதேச சபை வரவு செலவு அறிக்கை தயாரித்தல் மற்றும் நடை முறைப்படுத்தல் விதி இல. 10(2)(ஆ) இன்படி 2323ஆம் ஆண்டிற்காக ஹல்தும் முல்லை பிரதேச சபையினால் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவு அறிக்கையின் வரைவு 2022.09.15ஆம் நாள் முதல் 07 வேலை நாட்கள் வரை அலுவலக நேரத்தில் பொதுமக்களால் பரிசீலிப்பதற்கு ஹல்தும்முல்லை பிரதேச சபையினால் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ஏ. அசோக்குமார்,**
**தவிசாளர்,**
**ஹல்தும்முல்லை பிரதேச சபை.**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2022 செப்டெம்பர் 14ஆம் திகதியன்று ஏல விற்பனையினூடாக 80,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09122L164 | LKA18223C176 | LKA36423I151 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 35,000 | 25,000 | 20,000 | 80,000 |

| | | |
|---|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : | 2022 செப்டெம்பர் 14 |
| தீர்ப்பனவுத் திகதி | : | 2022 செப்டெம்பர் 16 |
| வழங்கப்படும் திகதி | : | 2022 செப்டெம்பர் 16 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : | 2022 செப்டெம்பர் 14, புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்கள் |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

✳ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம்.இசட்.எம். ஆசிம்**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

CDU/TS/2022/09&10

# இலங்கை சுங்கம்

## அரசுடமையாக்கப்பட்ட பொருட்களை விற்றல்

அரசுடமையாக்கப்பட்ட வாகனங்கள், தங்கம்/வெள்ளி ஆபரணங்கள், மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் ஏனைய பல்வேறு உருப்படிகளை விற்பனை செய்வதற்கான கேள்வி 2022.09.15 மு.ப. 10.00 இற்கு இலங்கைச் சுங்கத்தின் மத்திய அகற்றல் பிரிவு கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

அப்பொருட்கள் மற்றும் அதன் விபரங்கள் உள்ளடங்கிய பத்திரங்களை மீளளிக்கப்படாத ரூபா 25/- தொகையைச் செலுத்தி இலங்கைச் சுங்கத்தின் மூன்றாம் மாடியில் மத்திய அகற்றல் பிரிவில் 2022 செப்டெம்பர் மாதம் 12, 13, 14ம் திகதிகளில் மு.ப. 10.00 முதல் பி.ப. 3.30 வரை பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் அப்பொருட்களின் பட்டியல் இலங்கை சுங்கத்தின் உத்தியோகபூர்வ இணையதளம் www.customs.gov.lk மூலம் 2022 செப்டெம்பர் 09ம் திகதி முதல் காட்சிப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களுக்கு: தொலைபேசி இல. 011-2430795, 011-2143434 - நீடிப்பு 7300

**சுங்கப் பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை சுங்கம்,**
**இல. 40, மெயின் வீதி, கொழும்பு -11.**

CSIAP THE WORLD BANK

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## கமத்தொழில் அமைச்சு

## தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

## காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)

**செயற்றிட்ட இல.: P163742**

1. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது உலக வங்கி - சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) கமத்தொழில் அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) கிரயச் செலவிற்காகப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பாகமொன்றை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் தகுதியான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.
2. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களின் வழங்கல்களுக்காக தகுதியும் தகைமையுமுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சின் கால நிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) சார்பாக, செயற்றிட்ட பெறுகைக் குழுத்தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| இல. | ஒப்பந்த இல. | வேலைகளின் விளக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (இல. ரூபா) | விலை மனுப் பிணை முறி தொகை மற்றும் செல்லுபடிக் காலம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | LK-MOA-280251-GO-RFB /PMU(All Provinces)/ WP(110)/2022/015 | வடக்கு, கிழக்கு, ஊவா, வடமேற்கு, வட மத்திய மற்றும் தென் மாகாணங்களுக்கு 2022ஆம் வருடத்திற்கான சிறு போகம், பெரும்போகம் மற்றும் கொத்தணி கிராம திட்டத்திற்கு 299ஆம் எண்ணிக்கையான நீர்ப் பம்பிகளை வழங்குதல் | 5,000.00 | 320,000.00 2023 பெப்ரவரி 27ஆம் திகதி வரை |
| 02 | LK-MOA-280238-GO-RFB/PMU/GI pole(17)/2022/002 | வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் தென் மாகாணங்களில் 2022ஆம் வருடத்திற்கான சிறுபோக, பெரும்போக மற்றும் கொத்தணி கிராமத் திட்டத்திற்கு 6352 எண்ணிக்கையான GI குழாய் கம்பங்கள், 747 எண்ணிக்கையான பூச்சிகள் நுழையமுடியாத வலைகள் மற்றும் 4000 எண்ணிக்கையான சுழல் பிணைப்பு (Spun bonded) வலைகளுக்கான பெறுகை | | |
| | | லொட் இல. 1 - வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் தென் மாகாணங்களுக்கு சிறுபோக, பெரும்போக மற்றும் கொத்தணி கிராமத் திட்டத்திற்கு 6352 எண்ணிக்கையான GI குழாய் கம்பங்கள் | 6,500.00 | 960,000.00 2023 பெப்ரவரி 27ஆம் திகதி வரை |
| | | லொட் இல. 2 - வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் தென் மாகாணங்களுக்கு சிறுபோக, பெரும்போக மற்றும் கொத்தணி கிராமத் திட்டத்திற்கு 747 எண்ணிக்கையான பூச்சிகள் நுழையமுடியாத வலைகள் மற்றும் 4000 எண்ணிக்கையான சுழல் பிணைப்பு (Spun bonded) வலைகள் | | 700,000.00 2023 பெப்ரவரி 27ஆம் திகதி வரை |
| 03 | LK-MOA-308455-GO-RFB PMU(NCP) Seeds (13)/2022/41 | உலக வங்கியினால் நிதியிடப்படும் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் கீழ் வடமத்திய மாகாணத்தின் 2022/2023 பெரும் பருவகாலத்திற்கு 18750 கிலோ சோள (கலப்பின) விதைகளுக்கான பெறுகை | 6,500.00 | 1,000,000.00 2023 பெப்ரவரி 27ஆம் திகதி வரை |

3. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைமனுக்கோரல் நடைமுறைப்படுத்தப்படும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை ராஜகிரிய, மாதின்னாகொட, MDH ஜயவர்தன மாவத்த, இல. 61/1 காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் செயற்றிட்ட பெறுகை நிபுணரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 0112871293/0112053252, தொலைநகல்: 0112053167 மற்றும் அதே இடத்தில் 2022 செப்டெம்பர் 12 முதல் 2022 ஒக்டோபர் 03ஆம் திகதி மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையான வேலை நாட்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை (தொகைக்கு மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையைப் பார்க்கவும்) 2022 செப்டெம்பர் 12 முதல் 2022 ஒக்டோபர் 03ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் ரொக்கப் பணமாகச் செலுத்திய பின்னர், மேற்படி 4ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியிலுள்ள செயற்றிட்டப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை தகுதியுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.
6. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்குத் தகைமையாக வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் விலைமனு ஆவணத்திலுள்ள தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2022 செப்டெம்பர் 20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மேற்படி 4ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வளமுள்ள விலைமனுதாரர்கள் கலந்துகொள்வதற்கு முன் விலைக்கோரல் ஆவணத்துடன் குறிப்பாக விபரக்குறிப்புகள், ITB மற்றும் ஒப்பந்தத் தரவுகளை நன்கு அறிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
8. விலைமனுக்களுடன் விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்டுள்ள வடிவத்தின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் தரப்பட்டுள்ள தொகை மற்றும் செல்லுபடியாகும் தினத்திற்கான நிபந்தனையற்ற விலைக்கோரல் உத்தரவாதமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் உத்தரவாதமற்ற எந்தவொரு விலைமனுவும் பதிலளிக்கப்படாத விலைமனுவாகக் கருதப்படும் என்பதுடன் எவ்வித விசாரணைகளுமின்றி நிராகரிக்கப்படும்.
9. விலைக்கோரல் ஆவணத்தின் சகல பக்கங்களும் விலைமனுதாரரால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவரின் முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுக்கள் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வெவ்வேறான உறைகளில் இட்டு அதில் “மூலப் பிரதி” மற்றும் “நகல் பிரதி” எனக் குறிப்பிட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் பொருட்களின் விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கம் என்பன குறிக்கப்படுதல் வேண்டும்.
10. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2022 ஒக்டோபர் 03ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், திட்ட பெறுகைக் குழு, காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம் ராஜகிரிய மாதின்னாகொட, MDH ஜயவர்தன மாவத்தை, இல. 61/1 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
11. விலைமனுக்கள் 2022 ஒக்டோபர் 03ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். அரசாங்க அறிவித்தல் காரணமாக மேற்குறிப்பிடப்பட்ட முடிவுறுத்தல் திகதியில் அலுவலகம் மூடப்பட்டிருந்தால், அடுத்து வரும் வேலை நாளில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் மற்றும் அதே இடத்தில் மற்றும் நேரத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
12. செயற்றிட்டப் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியும் உறுதியுமான தீர்மானமாகும். செயற்றிட்டப் பெறுகைக் குழுவானது தமது சுய தீர்மானத்தின் பிரகாரம் எந்தவொரு, அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிக்கும் உரிமையை தன்னத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**செயற்றிட்டப் பெறுகைக் குழு,**
**செயற்றிட்ட முகாமைத்துவப் பணிமனை,**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம்,**
**இல. 61/1, M.D.H. ஜயவர்தன மாவத்தை,**
**மதின்னாகொட, இராஜகிரிய.**

**திகதி: 2022-09-12.**

## வன சீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சு

## வன பாதுகாப்புத் திணைக்களம்

# தேசிய சுற்றுச்சூழல் சட்ட பிரிவு 23 B B துணைப் பிரிவு (2) இன் கீழான அறிவிப்பு

### மொனராகலை மாவட்டத்தில் கட்டுமானிப்பதற்காக முன்மொழியப்பட்ட கும்பக்கன் ஓயா நீர்த்தேக்கத் திட்டத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை

1988 ஆம் ஆண்டின் 56 மற்றும் 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க சட்ட திருத்தம் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23 B B (1) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளப்படி கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தை, த. பெ. இல. 1138, இலக்கம் 230, நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட மொனராகல மாவட்டத்தில் கட்டமைக்க திட்டமிடப்பட்டுள்ள கும்புக்கன் ஓயா நீர்த்தேக்கத் திட்டத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை. இவ்விளம்பரம் பத்திரிகையில் பிரசுரமான முதல் நாளிலிருந்து **30 நாட்களுக்குள் மு.ப.8.30** மணி முதல் **பி.ப.4.15** மணி வரை பொதுமக்களின் பரிசீலனைக்காக பின்வரும் இடங்களில் வைக்கப்பட்டிருக்கும். (வார இறுதி நாட்கள் மற்றும் பொது விடுமுறை நாட்கள் தவிர).

1. பிரதேச செயலகம், மொனராகல, சியம்பலாண்டுவ, மெதகம, புத்தல, படல்கும்புர.
2. பிரதேச சபை, மொனராகல, சியம்பலாண்டுவ, மெதகம, புத்தல, படல்கும்புர.
3. வனப் பாதுகாப்புத் திணைக்களம், நூலகம், சம்பத்பாய, இல.82, இரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்ல.
4. மத்திய-ஊவா பிராந்திய அலுவலகம், வன பாதுகாப்பு திணைக்களம், உடபுஸ்ஸல்லாவ, நுவரெலியா.
5. மாவட்ட வன அலுவலகம், மொனராகல.
6. தேசிய சுற்றாடல் தகவல் நிலையம், மத்திய சுற்றாடல் அதிகார சபை, இல.104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.
7. **CEA இணையத்தளம் - www.cea.lk**

இந்த விளம்பரம் வெளியான நாளிலிருந்து **30 நாட்களுக்குள்** பொதுமக்களினால் மேற்கண்ட ஆவணம் தொடர்பான தங்கள் கருத்துக்களை எழுத்துப்பூர்வமாக வனப் பாதுகாப்புத் துறையின் பொது வனப் பாதுகாப்பாளர்க்கு தெரியப்படுத்தலாம்.

**பொது வனப் பாதுகாப்பாளர்**
**வன பாதுகாப்புத் திணைக்களம்,**
**தலைமை அலுவலகம், “சம்பத்பாய”**
**இல. 82, இராஜமல்வத்த வீதி,**
**பத்தரமுல்ல.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் - சப்ரகமுவ**

## சப்ரகமுவ மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு மருத்துவ, தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் முறைமைகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல்

கீழே விபரிக்கப்பட்டுள்ள உருப்படிகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தலுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை சுகாதார சேவைகள் திணைக்களத்தின் சார்பில் சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார். 2022 ஒக்டோபர் 05ஆம் திகதி பி.ப. 10.00 விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுறுத்தப்படும்.

| இல. | உருப்படி | எண்ணிக்கை | ஆவணக் கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறி பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|
| **Medical Equipment** | | | | |
| 01 | Tissue Embedding System | 2 | | 80,000.00 |
| 02 | Wax Box | 1 | | 12,000.00 |
| 03 | Slide Storing Cabinet | 1 | | 12,000.00 |
| 04 | Mini Autoclave (23 L) | 52 | | 275,000.00 |
| 05 | Hand Piece | 22 | | 5,000.00 |
| 06 | Micro Motor | 22 | | 70,000.00 |
| 07 | Length Measuring Board | 48 | | 35,000.00 |
| 08 | Digital Baby Scales | 49 | | 50,000.00 |
| 09 | Infant Weighting ScaleManual (Pead) 1-6 Yrs. | 48 | 5000.00 (ஒரு உருப்படிக்கு) | 70,000.00 |
| 10 | Stadiometer | 48 | | 60,000.00 |
| 11 | Spring Balance | 48 | | 20,000.00 |
| 12 | AB Scanner | 1 | | 40,000.00 |
| 13 | Slit Lamp | 1 | | 35,000.00 |
| 14 | Ultra Sound Scanner | 2 | | 400,000.00 |
| 15 | Hematology Analyzer | 2 | | 250,000.00 |
| 16 | Laparoscopic System | 2 | | 2,000,000.00 |
| 17 | Rigid Hysteroscope | 1 | | 50,000.00 |
| 18 | Dental Chair | 2 | | 100,000.00 |
| **Technical Equipment** | | | | |
| 19 | Air Conditioner 9000BTU | 3 | | 10,000.00 |
| 20 | Air Conditioner 12000BTU | 2 | | 10,000.00 |
| 21 | Air Conditioner 18000BTU | 1 | 5000.00 (ஒரு உருப்படிக்கு) | 7,000.00 |
| 22 | Air Conditioner 24000BTU | 3 | | 25,000.00 |
| 23 | Computer Servers | 4 | | 75,000.00 |
| **Technical Systems** | | | | |
| 24 | Piped Gas System for BH - Kahawatta | 1 | | 75,000.00 |
| 25 | Piped Gas System for BH - Eheliyagoda | 1 | | 75,000.00 |
| 26 | Piped Gas System for DH - Kithulgala | 1 | | 75,000.00 |
| 27 | Piped Gas System for DH - Rambukkana | 1 | | 75,000.00 |
| 28 | Solar System for BH - Kahawatta | 1 | 5000.00 (ஒரு உருப்படிக்கு) | 35,000.00 |
| 29 | Solar System for BH – Eheliyagoda | 1 | | 35,000.00 |
| 30 | Solar System for DH - Kiribathgala | 1 | | 35,000.00 |
| 31 | Solar System for DH - Pallebedda | 1 | | 35,000.00 |
| 32 | Water Purification Systems | 34 | | 40,000.00 |

1. விலைமனுதாரர் இயைபுடைய இயந்திரங்களின் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநராகவிருத்தல் வேண்டும்.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
3. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் இரத்தினபுரி, இல. 75, தர்மபால மாவத்தை, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் (தொலைபேசி: 045- 2222322/045-2222277) மற்றும் 2022 ஒக்டோபர் 04ஆம் திகதி அல்லது அதற்கு முன் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பின்வரும் முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

   **பணிப்பாளர்,**
   **மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்,**
   **இல. 75, தர்மபால மாவத்தை,**
   **இரத்தினபுரி.**

4. தகைமைகள் மற்றும் தேவைப்பாடுகள்
   அ. 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகவிருத்தல் வேண்டும்.
   ஆ. இயைபுடைய இயந்திரங்களை விற்பனை செய்வதில் 2022 செப்டெம்பர் 12ஆம் திகதிக்கு முன்னர் ஆகக் குறைந்தது 03 வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - மேலதிக தகவல்கள் விலைமனு ஆவணத்தில் வழங்கப்படும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022 செப்டெம்பர் 12ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத 5000.00 ரூபா கட்டணத்தை செலுத்தியதன் பின் மேற்குறிப்பிடப்பட்ட (03ஆம் பந்தியில்) முகவரிக்கு எழுத்துருவிலானா விண்ணப்பமொன்றை தனித்தனியாக சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை சப்ரகமுவ - மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பெயரில் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
6. விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட தரப்பினருக்கான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் மேற்குறிப்பிடப்பட்ட (03ஆம் பந்தியில்) முகவரியிலுள்ள கேட்போர் கூடத்தில் 2022-09-26ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.
7. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட இரு நகல்களில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியான விலைமனுக்களை 2022 ஒக்டோபர் 05ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிமம்பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் உடன் திறக்கப்படும். ஒவ்வொரு விலைமனுவுடனும் விலைமனு ஆவணத்தின் விபரிக்கப்பட்டுள்ள தொகைக்கான விலைமனுப் பிணை முறி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைக்கோரலின் தலைப்பு தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.
9. மேலே குறிப்பிடப்பட்ட முகவரியானது: தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், இல. 75, தர்மபால மாவத்தை, இரத்தினபுரி.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**இல. 75, தர்மபால மாவத்தை,**
**இரத்தினபுரி.**
2022-09-12.

# இலங்கை வங்கி

## ஏலவிலை கோரலுக்கான அழைப்பு

பின்வரும் உருப்படிகளை வழங்கி, விநியோகித்து, பொருத்தி மற்றும் உபகரணங்களைப் பராமரித்தல் என்பவற்றுக்காக இலங்கையின் முதன்மை உற்பத்தியாளர்கள் / விநியோகத்தர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் முகவர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| ஏல விலை கோரல் இல. | P/PROC/2022/253 |
| பண்டம் / சேவைகளின் விபரம் | இலங்கை வங்கிக்கான 2,500 இலத்திரனியற் தரவுப் பற்றுகைச் சாதனங்கள் (POS) |
| மீளளிக்கப்படாத ஏல விலைக் கட்டணம் | ரூபா.25,300/= [ரூபா.22,000/- + ரூபா.3,300/- (15% VAT)] |
| சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஏலமுறியின் பெறுமதி | ரூபா. 3,000,000/= |
| ஏல விலை கூறல் ஆவணங்களை விநியோகிக்கும் கடைசித்திகதியும் நேரமும் | 2022.09.25 1400 மணி வரை |
| ஏல விலை கூறல் முடிவடையும் திகதியும் நேரமும் | 2022.09.26 1000 மணி வரை |

1. **ஏல விலைகூறலை கவனத்திற்கொள்ளும் பொருட்டு விலைகூறுவோர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.**
   i) கடந்த மூன்று நிதி ஆண்டுகளில் அண்ணளவான வருடாந்தப் பணப் புரள்வானது ரூபா.250 மில்லியனாகக் காணப்பட வேண்டும். (2020/21, 2019/20 மற்றும் 2018/19).
   ii) கடந்த 05 ஆண்டுகளாக குறைந்தபட்சம் 2500 இலத்திரனியற் தரவுப் பற்றுகைச் சாதனங்களை வழங்கி, பொருத்தி, செயற்படுத்தி மற்றும் தற்பொழுதும் பராமரித்துக்கொண்டிருக்கவும் வேண்டும் (2017.07.31 முதல் 2022.07.31 வரை).
2. விலை கூறல் ஆவணங்களை, இலங்கை வங்கியின் தலைமையகக் காரியாலயத்தின் 14ஆம் தளத்திலுள்ள, சொத்துக்களும் சேகரிப்பும் பகுதியில், கடமை தினங்களில் 0900 மணி முதல் 1400 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
3. பூர்த்தி செய்யப்பட்ட விலை கூறல் விண்ணப்பங்களை மேலே குறிப்பிட்டுள்ளவாறு கேள்விக்குப் பொருத்தமான பெறுமதிக்குரிய தொகையை, 2023.01.23 வரை செல்லுபடியாகக் கூடியவாறு இலங்கை வங்கியினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய வர்த்தக வங்கி ஒன்றிலிருந்து (இலங்கை வங்கி அல்லாத) பெறப்படும் வங்கி உத்தரவாதத்துடன் இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும். ஏல பிணை முறிக்குப் பதிலாக, பணவைப்புகள் வங்கிக் கொடுப்பனவுகட்டளை, வங்கி உடனுண்டியல் என்பனவும் ஏற்றுக் கொள்ளப்படும். ஏலவிலை கூறுபவரால் வரையப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
4. ஏல விலை கூறல்கள் குறித்த முடிவுத் திகதியன்று 1000 மணிக்குப் பின் உடனடியாகத் திறக்கப்படும். 1000 மணிக்குப் பின்னர் பெறப்படும் விலை கூறல்கள் நிராகரிக்கப்படுவதோடு, திறக்கப்படாமலே திருப்பி அனுப்பி வைக்கப்படும்.
5. இலங்கை வங்கி, எவ்விதக் காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லா விலை கூறல்களையும் நிராகரிக்கும் அல்லது விலை கூறலின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்ளும் உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.
6. மேலதிக விபரங்களை சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி,
"இலங்கை வங்கிச் சதுக்கம்", இல.01,
இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு - 01.
தொலைபேசி இல. 2544310, 2434786

1975 BOC CALL CENTRE | www.boc.lk

AA- (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவராக குணதிலக்க ராஜபக்ஷ



*(பூஜாபிட்டிய தினகரன் நிருபர்)*

கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக கண்டி மாவட்ட பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக்க ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.இவருக்கான கடிதத்தை பிரதமர் தினேஷ்குணவர்தன வழங்கினார்.

பிரதமர் அலுவலகத்தில் இவருக்கான கடிதம் (08) கையளிக்கப்பட்டது.இதன் போது மேலும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களுக்கான நியமனக் கடிதங்களை பெற்றுக் கொண்டனர்.

கொழும்பு – பிரதீப் உந்துகொட
கம்பஹா – சஹான் பிரதீப்விதான
களுத்துறை – சஞ்சீவஎதிரிமான்ன
காலி – சம்பத் அத்துகோரள
மாத்தறை – நிபுனரணவக்க
ஹம்பாந்தோட்டை– சமல் ராஜபக்ஷ
குருநாகல் – சமந்திரிய ஹேரத்
புத்தளம் – சிந்தக மாயாதுன்னே
அநுராதபுரம் – எச். நந்தசேன
மாத்தளை – நாலக பண்டார கோட்டேகொட
நுவரெலியா – எஸ்.பி. திஸாநாயக்க
பதுளை – சுதர்சன தெனிபிட்டிய
மொனராகலை – குமாரசிறி ரத்நாயக்க
இரத்தினபுரி – அகில எல்லாவல
கேகாலை – ராஜிகா விக்கிரமாசிங்க
திகாமடுல்ல – டி. வீரசிங்க
திருகோணமலை – கபில அத்துகோரள

ஆகியோரே ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களுக்கான நியமனக் கடிதங்களை பெற்றுக் கொண்டனர்.

# சமூக சேவையாளருக்கு கௌரவம்

*(பலாங்கொடை தினகரன் நிருபர்)*

பலாங்கொடை பகுதியில் சமூகசேவை பணிகளில் அக்கறையுடன் பணியாற்றி வரும் அல்ஹாஜ் எம். எப். எம். நபீருக்கு,கௌரவம் வழங்கப்பட்டது.அகில இலங்கை சமாதான நீதிபதி பேரவை இந்த கௌரவத்தை வழங்கியது.இந்நிகழ்வு (10)

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்தது.

இவரது சமூக மேம்பாட்டு பணிகளை கௌரவிக்கும் முகமாக" தேச அபிமானி" பட்டம் வழங்கப்பட்டது.

ஜமாத்தே இஸ்லாமியின் உறுப்பினராக பலாங்கொடை பகுதியில் பணியாற்றி வரும் இவர், பல்வேறுபட்ட சமூகப் பணிகளில் முன்னின்று உழைத்தவர். பாடசாலை வைத்தியசாலைகளுக்கு தேவைப்படும் உதவிகளை வழங்க ஆர்வத்துடன் ஈடுபடுவது இவரது சமூகப்பணிகளுக்கு எடுத்துக்காட்டாகவுள்ளது.

## பஸ்பாகே கோரளை பிரதேச சபை

# பெறுகை அறிவித்தல்

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக தகுதி வாய்ந்த மற்றும் அபகீர்த்தியாளர் பட்டியலுகுள்ளாகாத விலைமனுதாரர்களிடமிருந்து பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| உருப்படி இல. | வேலை மற்றும் விலைக்கோரல் இல. | பொறியியல் மதிப்பீட்டுப் பெறுமதி (VAT இன்றி) ரூபா. மில். | ஒப்பந்தக் காலம் (வாரங்கள்) | CIDA/ ICTAD பதிவு | விலைக்கோரல் பிணை முறி | | | மீளளிக்கப் படாத ஆவணக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை முறியின் பெறுமதி | பணமாக வைப்புச் செய்ய வேண்டிய திகதி | செல்லுபடித் திகதி | |
| 01 | போகில் தோட்டப் பாலத்தை நிர்மாணித்தல் (CPC/PBK/PS/ERI/2022/01) | 26.5 | 11 | C5 அல்லது C4 (பாலம்) | 300,000.00 | 150,000.00 | 2023-01-31 | 5,000.00 |
| 02 | இங்குரு ஓய குறுக்காக உள்ள இங்குறு ஓய பாலத்தை மறுசீரமைத்தல் (CPC/PBK/PS/ERI/2022/02) | 18.3 | 11 | C6 அல்லது C5 (பாலம்) | 200,000.00 | 100,000.00 | 2023-01-17 | 5,000.00 |
| 03 | தொருவாதெனிய மற்றும் வரகாவ இடையில் தொங்கும் பாலத்தை மறுசீரமைத்தல் (CPC/PBK/PS/ERI/2022/03) | 5.9 | 10 | C7 அல்லது C6 (பாலம்) | 60,000.00 | 30,000.00 | 2023-01-17 | 3,500.00 |
| 04 | கலபொட வீதி பழைய தேயிலைத் தொழிற்சாலை அருகிலுள்ள மதகின் மிகுதி வேலைகளை முடிவுறுத்துதல் (CPC/PBK/PS/ERI/2022/04) | 3.5 | 10 | C8 அல்லது C7 (பாலம்) | 40,000.00 | 20,000.00 | 2023-01-03 | 3,000.00 |

01. இந்த விலைக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.
02. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை 054 4922922 எனும் தொலைபேசி இலக்கத்தில் பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் செயலாளரைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைக்கோரல் ஆவணங்களை 2022-09-12ஆம் திகதி முதல் 2022-09-26ஆம் திகதி வரையில் அலுவலக நேரங்களில் பஸ்பாகே கோரளை பிரதேச சபை அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
03. பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான கடிதமொன்றைச் சமர்ப்பித்து மேற்குறிப்பிடப்பட்ட வகையில் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தி குறித்த பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து 2022-09-12ஆம் திகதி முதல் 2022-09-26ஆம் திகதி வரையான அலுவலக நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
04. விலைக்கோரலின் பெறுமதி 05 மில்லியன் ரூபாவை விஞ்சும் வேளையில் ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரரால் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கிய சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு ''பஸ்பாகே கோரளை பிரதேச சபை'' பெயரில் அந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி வரை செல்லுபடியாகும் வகையில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட (இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட) வங்கி அல்லது நிர்மாணக் காப்பு நிதியத்திலிருந்து (CGF) பெற்றுக்கொண்ட அல்லது விலைக்கோரல் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது விலைக்கோரல் பிணை முறித் தொகையை ரொக்கப் பணமாக வைப்புச் செய்வதானால் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் சிறாப்பருக்கு வைப்புச் செய்து அந்தப் பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.
06. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நகல் பிரதியுடன் ''தலைவர், பெறுகைக் குழு, பஸ்பாகே கோரளை பிரதேச சபை, ரம்புக்பிட்டிய'' எனும் முகவரிக்கு 2022-09-27ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து பஸ்பாகே கோரளை பிரதேச சபை செயலாளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். குறித்த நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

இது தொடர்பிலான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2022-09-22ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு பஸ்பாகே கோரளை பிரதேச சபையில் இடம்பெறும். விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

**ஓ.ஜீ. ரோஹன பண்டார,**
**தலைவர், பெறுகைக் குழு,**
**பஸ்பாகே கோரளை பிரதேச சபை,**
**ரம்புக்பிட்டிய.**

22-09-09ஆம் திகதி
**தொலைபேசி இல. 0544922922**
**தொலைநகல் இல. 0542222375**

# கேள்வி அறிவித்தல்

## தங்கல்ல பிரதேச சபை

தங்கல்ல பிரதேச சபைக்கு உரித்தான கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்படும் ஆதனங்களை 2023ஆம் ஆண்டில் குத்தகைக்கு விடுவதற்காக என்னால் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**அட்டவணை**

| இலக்கம் | குத்தகையின் தன்மை/ ஆதனங்கள் | ஆகக் குறைந்த கேள்வி ரூபா | கேள்விப் படிவக் கட்டணம் ரூபா | கேள்விப் பிணையம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | ரன்ன வார சந்தையில் வரி அறவிடுதல் | 3,550,010.00 | 2,000.00 | 200,000.00 |
| 02 | ரன்ன மீன் சந்தையில் வரி அறவிடுதல் | 342,010.00 | 500.00 | 15,000.00 |
| 03 | வாடிகல சந்தையில் வரி அறவிடுதல் | 114,000.00 | 200.00 | 5,000.00 |
| 04 | தேனகம வார வர்த்தக சந்தையில் வரி அறவிடுதல் | 3,277,000.00 | 1,000.00 | 50,000.00 |
| 05 | நெடொல்பிட்டிய வார வர்த்தக சந்தையில் வரி அறவிடுதல் | 9,087.00 | 200.00 | 600.00 |
| 06 | குடாவெல்ல வார வர்த்தக சந்தையில் வரி அறவிடுதல் | 691,900.00 | 300.00 | 10,000.00 |
| 07 | பஹஜ்ஜாவ தென்னை விளைச்சல் | 2,050.00 | 50.00 | 200.00 |
| 08 | ரன்ன மிதிவண்டிகளை நிறுத்தும் இடம் | 46,000.00 | 100.00 | 500.00 |
| 09 | ரன்ன சந்தை வளாகத்தின் பொதுக்கழிவறையில் வரி அறவிடல் | 18,000.00 | 150.00 | 200.00 |
| 10 | யாயவத்த சந்தை | 19,000.00 | 200.00 | 1,000.00 |
| 11 | வலகும்புர விளையாட்டு மைதானம் மற்றும் சன சமூக நிலையம் உள்ள காணியின் தென்னை விளைச்சல் | 3,809.50 | 50.00 | 200.00 |
| 12 | பொலொம்மாறுவ களுவரகஹ மண்டிய இலக்கம் 07, 08 துண்டுகளின் தென்னை விளைச்சல் | 2,700.00 | 50.00 | 200.00 |
| 13 | கதுருபொகுண மெதகொட இலக்கம் 02 மயானபூமியுள்ள காணியின் தென்னை விளைச்சல் | 2,100.00 | 50.00 | 200.00 |
| 14 | வல்கம் எளிய குருவலயாய அல்லது திகண பஸ்னாஹிரயாய காணியின் பொதுப்பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட துண்டின் தென்னை விளைச்சல் | 2,165.00 | 50.00 | 200.00 |

**கேள்விப் படிவங்களை வழங்கும்** : 2022.09.19 முதல்

**இறுதித் தினம்** : 2022.10.10 அன்று பி.ப. 3.00 வரை

தேசிய அடையாள அட்டை/ சாரதி அனுமதி பத்திரம்/ செல்லுபடியாகும் தன்மையிலுள்ள கடவுச்சீட்டு மற்றும் கிராம அலுவலரின் சான்றிதழைச் சமர்ப்பித்து தங்கல்ல பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**கேள்விகளை ஏற்றுக்கொள்ளல்** : 2022.10.11 அன்று பி.ப. 1.00 வரை

**கேள்விகளைத் திறத்தல்** : 2022.10.11 அன்று பி.ப. 1.30 இற்கு

**மேலதிக விபரங்களிற்கு** : செயலாளரை அழைக்கவும்

**தொலைபேசி இலக்கம்** : 047-2240475

**லலித ஆர். வனிகசேகர**
**தலைவர்**
**தங்கல்ல பிரதேச சபை,**
**நெடொல்பிட்டிய.**

**2022.09.12**
**தங்கல்ல பிரதேச சபை அலுவலகத்தில்**

# பெறுகை அறிவித்தல்

## பாதுகாப்பு சேவைகள் வழங்கல் - 2023

## ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் - பதுளை

ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் பின்வரும் சுகாதார நிறுவனங்களுக்கு 2023-01-01ஆம் திகதி முதல் 2023-12-31ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்துள்ள பாதுகாப்புச் சேவைகளை வழங்கும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் நபர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

| பொதி இல. | வைத்தியசாலை / நிறுவனம் | கேள்வி மாதிரிப் படிவக் கட்டணம் (ரொக்கப் பணமாக) | மீளளிக்கப்படாத கேள்விப் பிணை முறி பணமாக |
|---|---|---|---|
| **A தரமுடைய ஆதார வைத்தியசாலைகள்** | | | |
| 01 | ஆதார வைத்தியசாலை - தியத்தலாவ | 5,000.00 | 120,000.00 |
| 02 | ஆதார வைத்தியசாலை - மஹியங்கனை | 6,000.00 | 165,000.00 |
| **B தரமுடைய ஆதார வைத்தியசாலைகள்** | | | |
| 03 | ஆதார வைத்தியசாலை - பிபிலை | 5,000.00 | 120,000.00 |
| 04 | ஆதார வைத்தியசாலை - வெலிமட | 3,000.00 | 47,000.00 |
| 05 | ஆதார வைத்தியசாலை - சியம்பலாண்டுவ | 2,500.00 | 39,000.00 |
| 06 | ஆதார வைத்தியசாலை - வெல்லவாய | 3,500.00 | 64,000.00 |
| **A தரமுடைய வைத்தியசாலைகள்** | | | |
| 07 | பண்டாரவளை, புத்தள பிரதேச வைத்தியசாலைகள் | 3,000.00 | 53,000.00 |
| **B தரமுடைய வைத்தியசாலைகள்** | | | |
| 09 | பிரதேச வைத்தியசாலை - மீகஹகிவுல, ஹிராந்துருகோட்டே, தனமல்வில, மெதகம பிரதேச வைத்தியசாலைகள் | 3,000.00 | 54,000.00 |
| **C தரமுடைய வைத்தியசாலைகள்** | | | |
| 13 | இங்கினியாகல, கதிர்காமம் பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் மத்திய மருந்தகம் மற்றும் புனருத்தாரண அலகு - மீதும்பிட்டிய மற்றும் 11 பிரதேச வைத்தியசாலைகளுக்கு | 4,000.00 | 88,000.00 |
| **சுகாதார நிறுவனங்கள்** | | | |
| 17 | சுகாதார பயிற்சி நிலையம், பண்டாரவளை, மாகாண சபை புதிய கட்டிடத் தொகுதி – பதுளை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - பதுளை மற்றும் மொனராகலை, பிராந்திய மலேரியா அலுவலகம், பிராந்திய மருத்துவ வழங்கல் பிரிவு, ஹுலங்தாவ தெற்கு கிருமிநாசினி களஞ்சியம் (மொனராகலை), கதிர்காமம் புனித நகர பல்காரிய சிகிச்சை நிலையம், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் | 6,000.00 | 138,000.00 |

01. கேள்விதாரர் இலங்கை வியாபாரப் பெயர்ப் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக அல்லது நபராக இருத்தல் வேண்டும் என்பதுடன் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்படாத வழங்குநராகவிருத்தல் வேண்டும்.

02. மேற்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் மாதிரிப் படிவத்தை ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் கேள்வி மாதிரிப் படிவங்கள் 2022-09-12ஆம் திகதி முதல் 2022-10-03ஆம் திகதி வரை 12.30 வரை வழங்கப்படும் என்பதுடன் அன்றைய தினமே பி.ப. 2.00 மணிக்கு ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கூட்ட மண்டபத்தில் கேள்விப் படிவங்கள் திறக்கப்படும். இந்நிகழ்வில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம். நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகளை ஏற்றுக்கொள்ளும், நிராகரிக்கும் அல்லது ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது. மேலதிக விபரங்களை 055-2231981 எனும் தொலைபேசி இலக்கத்தில் விசாரித்தறியலாம்.

03. கேள்வி மாதிரிப் படிவக் கட்டணம்/கேள்விப் பிணைக் கட்டணத்தை அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் அதற்கு இயைபான தொகையை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் மக்கள் வங்கி 269100188440649 நடைமுறைக் கணக்கு இலக்கத்திற்கு வைப்புச் செய்து அதற்கு இயைபான பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை கேள்வி மாதிரிப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

04. அதேபோல் மீளளிக்கப்படும் பிணை முறிக் கட்டணத்திற்கான வங்கிப் பிணையொன்றைச் சமர்ப்பிப்பதானால் அதன்பொருட்டு மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியின் இரண்டு மடங்குத் தொகையை கேள்விகள் திறக்கப்படும் நாள் முதல் 120 நாட்கள் வரை செல்லுபடியாகும் வங்கிப் பிணை முறியாகவிருத்தல் வேண்டும். மேலும் கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான நிபந்தனைகள் மற்றும் கேள்வி மதிப்பீட்டுகளை கேள்வி மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன் அந்த ஆவணங்களை மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. C தரமுடைய பிரதேச வைத்தியசாலைகள் / சுகாதார நிறுவனங்களுக்கு பாதுகாப்பு சேவைகளை வழங்கிய அனுபவம் இருக்குமாயின் B தரமுடைய பிரதேச வைத்தியசாலைகளுக்கும், B தரமுடைய பிரதேச வைத்தியசாலைகளுக்கு பாதுகாப்பு சேவைகளை வழங்கிய அனுபவம் இருக்குமாயின் A தரமுடைய பிரதேச வைத்தியசாலைகளுக்காகவும், A தரமுடைய பிரதேச வைத்தியசாலைகளுக்கு பாதுகாப்பு சேவைகளை வழங்கிய அனுபவம் இருக்குமாயின் B தரமுடைய ஆதார வைத்தியசாலைகளுக்கும் B தரமுடைய ஆதார வைத்தியசாலைகளுக்கு பாதுகாப்பு சேவைகளை வழங்கிய அனுபவம் இருக்குமாயின் A தரமுடைய ஆதார வைத்தியசாலைகளுக்காகவும் விண்ணப்பிக்கலாம். இயைபுடைய துறையில் அனுபவம் உள்ள நிறுவனங்கள் C தரமுடைய வைத்தியசாலைகள் / சுகாதார நிறுவனங்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

06. சகல பொதிகளுக்கும் கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தில் பெற்றுக்கொண்ட பொது ஒப்பந்த உடன்படிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**இல. 301, ஆர்.எச். குணவர்தன மாவத்தை,**
**பதுளை.**

**தொலைபேசி இலக்கம்: 055-2231981**
**தொலைநகல் இலக்கம்: 055-2223098**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## பிரதேச சபை பதியத்தலாவ

**LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT - PROJECT ID: P 163305**
**CONSTRUCTION OF LIBRARY BUILDING, PADIYATHALAWA**

**Contract Number: LDSP/EP/AMP/PTPS/2021/01**

1. உள்ளூர் அபிவிருத்தி ஆதரவுத் திட்டத்தின் செலவை நோக்கி உலக வங்கியிடமிருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசிற்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு பதியத்தலாவையில் நூலக கட்டடம் அமைத்தல் ஒப்பந்தத்தில் கீழுள்ள கொடுப்பனவுகளுக்கு இந்த கடனின் பகுதியினை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாணப் பணிக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து பதியத்தலாவ பிரதேச சபையின் சார்பில் உள்ளூர் நிர்வாக பெறுகைக் குழுவின் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.
3. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடைபெறும்.
4. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் பதியத்தலாவ பிரதேச சபை பெறுகைக்குழு தலைவரிடம் இருந்து மேலதிக தகவல்களைப் பெறலாம் (தொ.இல./தொ.நகல் 2246048) (மின்னஞ்சல் - padiyathalawa@gmail.com) என்பதோடு 2022 செப்டெம்பர் 12ஆம் திகதி தொடக்கம் 2022 ஒக்டோபர் 03 வரை 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை எந்தவொரு வேலை நாட்களிலும் இதே முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. தகைமைத் தேவைகள் விலைமனு ஆவணத்தின் பிரிவு 4இல் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்துடன் மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணத்தின் பிரிவு 5 இல் வழங்கப்பட்டுள்ளது.
6. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு வெற்றிகரமான விலைமனுதாரர்கள் நிதி அமைச்சு அல்லது உலக வங்கி அல்லது வேறு ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினால் தடுப்புப் பட்டியலில் இடம் பெறாதவராக இருத்தல் வேண்டும். என்பதோடு உள்நாட்டு ஒப்பந்தக்காரர்கள் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையுடன் (CIDA) கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்காக கட்டட கட்டுமானத் துறையில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 ரூபாவினை செலுத்தி 12 செப்டம்பர் 2022 முதல் 2022 ஒக்டோபர் 03 வரை வேலை நாட்களில் 9.0 மணி முதல் 15.00 மணி வரை பதியத்தலாவ பிரதேச சபையின் தலைவருக்கு எழுத்து மூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றினை கொள்வனவு செய்யலாம் கட்டணம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்.
8. விலைமனுக்களை 03 ஒக்டோபர் 2022 அன்று 15.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழே உள்ள முகவரிக்கு அசல் மற்றும் நகல் பிரதிகளில் தயாரித்து அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்றபின் அவை உடன் திறக்கப்படும். விலைமனுக்கள் கீழுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள விபரத்தின்படி விலைமனு பிணை ஒன்றினை கொண்டிருத்தல் வேண்டும்.
9. விலைமனுவிற்கு முந்தைய கூட்டம் 22 செப்டம்பர் 2022 அன்று 11.00 மணிக்கு பதியத்தலாவ பிரதேச சபையில் நடைபெறும். ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தங்கள் சொந்த செலவில் விலைமனுவிற்கு முந்தைய கூட்டத்தில் கலந்து கொள்ளலாம்.
10. ஒப்பந்தம் வழங்கப்படுவதில் பெறுகைக் குழுவின் முடிவு இறுதியானது.
11. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு முன் எந்த நேரத்திலும் இந்த பெறுகையை இரத்துச் செய்ய அல்லது மீளப்பெற தொழில் வழங்குநருக்கு உரிமை உள்ளது.

| Contract No. | Descrtprion of Works | Tenderable Amount (Mn) | Contract Period | Required Grade | Bid Validity Period | Required Bid Security | | Bid validity Period up to |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Bid Security Amount | Validty Period | |
| LDSP/EP/AMP/PTPS/2021/01 | Construction of Library building Padiyathalawa | 9.807 Mn | 135 calendar days | C7 or C6 Building construction | 77 days | 118,000.00 | 16.01.2023 | 19.12.2022 |

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**பிரதேச சபை, பதியத்தலாவ.**



# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் ஒப்பந்த வேலைகளுக்கு ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| EW/13/EL/2022/ CCTV/BQ-01 | Tender for Installation & Commissioning of CCTV IP Camera system for BQ-1 Ware house of SLPA | ரூபா 100,000.00 | ரூபா 3,500.00 | 29-09-2022 பி.ப. 2.00 மணி |
| EW/13/EL/2022/ CCTV/BQ-02 | Tender for Installation & Commissioning of CCTV IP Camera system for BQ-2 Ware house of SLPA | ரூபா 60,000.00 | ரூபா 2,500.00 | 29-09-2022 பி.ப. 2.00 மணி |
| EW/13/EL/2022/ CCTV/BQ-03 | Tender for Installation & Commissioning of CCTV IP Camera system for BQ-03 Ware house of SLPA | ரூபா 100,000.00 | ரூபா 3,500.00 | 29-09-2022 பி.ப. 2.00 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும் என்பதுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான சேவைகளை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது கடந்த மூன்று (3) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராகவும் EM3 (ELV) CIDA தரப் பதிவையும் கொண்டிருத்தல் வேண்டும்.
5. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2022-09-22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கை துறைமுக அதிகார சபையின் தொழில்நுட்ப நூலகத்தில் இடம்பெறும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022-09-13ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00) மணி வரையான நேரத்தில் மூடும் திகதிக்கு முதல் நாள் வரை பிரதான பொறியியலாளர் (மின்சாரம்) அவர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் கொழும்பு-01, இல. 45. லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கை துறைமுக அதிகார சபை, பொறியியல் வேலைகள் கிளையிலிருந்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
7. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் மூடும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு (இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை),**
**மே/பா பிரதான முகாமையாளர் (மின்சாரம்),**
**இயந்திரப் பொறித்தொகுதி பொறியியல் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## பிரதேச சபை சம்மாந்துறை

**LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT - PROJECT ID: P 163305**
**Construcion of Children Park at Veeramaunai -01 Sammanthurai.**

**Contract Number: LDSP/EP/AMP/SPS/2021/01**

1. உள்ளூர் அபிவிருத்தி ஆதரவுத் திட்டத்தின் செலவை நோக்கி உலக வங்கியிடமிருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசிற்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு சம்மாந்துறை வீரமுனை -01இல் சிறுவர் பூங்கா அமைத்தல் ஒப்பந்தத்தல் கீழுள்ள கொடுப்பனவுகளுக்கு இந்த கடனின் பகுதியினை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாணப் பணிக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து சம்மாந்துறை பிரதேச சபையின் சார்பில் உள்ளூர் நிர்வாக பெறுகைக் குழுவின் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.
3. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடைபெறும்.
4. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் சம்மாந்துறை பிரதேச சபை பெறுகைக் குழு தலைவரிடம் இருந்து மேலதிக தகவல்களைப் பெறலாம் (தொ.இல./தொ.நகல் 067 2260043/067 2260235) (மின்னஞ்சல் -strps2009@yahoo.com) என்பதோடு 2022 செப்டெம்பர் 12ஆம் திகதி தொடக்கம் 2022 ஒக்டோபர் 03 வரை 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை எந்தவொரு வேலை நாட்களிலும் இதே முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. தகைமைத் தேவைகள் விலைமனு ஆவணத்தில் பிரிவு 4இல் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்துடன் மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணத்தில் பிரிவு 5 இல் வழங்கப்பட்டுள்ளது.
6. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு வெற்றிகரமான விலைமனுதாரர்கள் நிதி அமைச்சு அல்லது உலக வங்கி அல்லது வேறு ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினால் தடுப்புப் பட்டியலில் இடம் பெறாதவராக இருத்தல் வேண்டும். என்பதோடு உள்நாட்டு ஒப்பந்ததாரர்கள் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையுடன் (CIDA) கீழுள்ள அட்டவணையில் குறிப்படப்பிட்டுள்ள தரத்திற்காக கட்டட கட்டுமானத் துறையில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 ரூபாவினை செலுத்தி 12 செப்டெம்பர் 2022 முதல் 2022 ஒக்டோபர் 03 வரை வேலை நாட்களில் 9.00 மணி முதல் 15.00 மணி வரை சம்மாந்துறை பிரதேச சபையின் தலைவருக்கு எழுத்து மூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றினை கொள்வனவு செய்யலாம் கட்டணம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்.
8. விலைமனுக்களை 03 செப்டெம்பர் 2022 அன்று 15.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழே உள்ள முகவரிக்கு அசல் மற்று நகல் பிரதிகளில் தயாரித்து அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்றபின் அவை உடன் திறக்கப்படும். விலைமனுக்கள் கீழுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள விபரத்தின்படி விலைமனு பிணை ஒன்றினை கொண்டிருத்தல் வேண்டும்.
9. விலைமனுவிற்கு முந்தைய கூட்டம் 22 செப்டெம்பர் 2022 அன்று 11.00 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையில் நடைபெறும். ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தங்கள் சொந்த செலவில் விலைமனுவிற்கு முந்தைய கூட்டத்தில் கலந்து கொள்ளலாம்.
10. ஒப்பந்தம் வழங்கப்படுவதில் பெறுகைக் குழுவின் முடிவு இறுதியானது.
11. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு முன் எந்த நேரத்திலும் இந்த பெறுகையை இரத்துச் செய்ய அல்லது மீளப்பெற தொழில் வழங்குநருக்கு உரிமை உள்ளது.

| Contract No. | Description of Works | Tenderable Amount (Mn) | Contract Period | Required Grade | Bid Validity Period | Required Bid Security | | Bid validity Period up to |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Bid Security Amount | Validity Period | |
| LDSP/ EP/AMP/ SPS/2021/01 | Construction of Children park at Veeramaunai 01 Sammanthurai | 9.564 Mn | 135 calendar days | C7 or C6 Building construction | 77 days | 115,000.00 | 16.01.2023 | 19.12.2022 |

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**பிரதேசசபை, சம்மாந்துறை.**

# வ/ப லக்திவ பொறியியல் கம்பனிக்கு உரித்தான சிதைவடைந்த இரும்பு மற்றும் சிதைவடைந்த அலுமினியம் உதிரிப்பாகங்களை விற்பனை செய்வதற்காக விலைமனுக்கோரல்

1. ஜா-எல ஏக்கல மினுவங்கொட வீதியில் இலக்கம் 73இல் அமைந்துள்ள பொறியியல் கம்பனி (போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுடன் ஒருங்கிணைந்த) சிதைவடைந்த அலுமினியம் சிதைவடைந்த இரும்பு மற்றும் சிதைவடைந்த இயந்திராதிகளின் பகுதிகளை விற்பனை செய்வதற்காக விலைமனுக் கோரப்படுகின்றது.
2. விலைமனுக்களை ஏற்றுக் கொள்ளல் 2022.09.29 அன்று நண்பகல் 12.00 இற்கு முடிவுறுத்தப்படும்.
3. சிதைவடைந்த அலுமினியம் மற்றும் சிதைவடைந்த இரும்புத் தொகைகளைப் பரிசீலனை செய்தல் வார வேலை நாட்களில் 2022.09.12 முதல் 2022.09.28 வரை 9.00 மணி முதல் 15.00 மணி வரை மேற்கொள்ளலாம். (சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரச விடுமுறை நாட்கள் தவிர்ந்த நாட்களில்)
4. மீளளிக்கப்படாத ரூபா 10,000/- மற்றும் மீளளிக்கப்படும் ரூபா 100,000/- இற்கான தொகையை லக்திவ பொறியியல் கம்பனியின் பெயரில் ஜா-எல இலங்கை வங்கியிலுள்ள நடைமுறைக் கணக்கு இலக்கம் 404914 கணக்கில் வைப்புச் செய்து பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை, நிறுவனத்தின் நிருவாக அலுவலருக்குச் சமர்ப்பித்து இதற்கான படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். (நாட்டின் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் இத் தொகையைச் செலுத்தலாம்). கேள்விப் படிவங்கள், வார வேலை நாட்களில் 2022.09.12 முதல் 2022.09.28 வரை 9.00 மணி முதல் 15.00 மணி வரை மாத்திரம் வழங்கப்படும்.
5. முத்திரையிடப்பட்ட கேள்விகள் பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது நேரில் நிருவாகப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்க்கலாம். பதிவுத் தபாலில் அனுப்பப்படும் ஆவணங்கள் 2022.09.29 அன்று நண்பகல் 12.00 இற்கு முன்னர் கிடைக்கப் பெறல் வேண்டுமென்பதுடன் தாமதமாகக் கிடைக்கப் பெறும் கடிதங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
6. விலைமனுத்திறத்தல் 2022.09.29 அன்று நண்பகல் 12.00 மணிக்கு மேற்கொள்ளப்படும்.
7. முத்திரையிடப்பட்ட கேள்விகளை உள்ளிட்டு அனுப்பப்படும் தபாலுறைகளின் இடது பக்க மேல் மூலையில் ‘சிதைவடைந்த இரும்பு அலுமினியம் மற்றும் இயந்திராதிகளின் பகுதிகளைக் கொள்வனவு செய்வதற்கான கேள்வி - 2022’ எனக்குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**வ/ப லக்திவ பொறியியல் கம்பனி,**
**இல. 73, மினுவங்கொட வீதி,**
**ஏக்கல - ஜா-எல.**
**விசாரணைகள்: 011 2236530, 011 2236458**

# பெறுகை அறிவித்தல்

## ஆதனங்களைக் குத்தகைக்கு விடுதல் – 2023

### பிரதேச சபை - இப்பாகமுவ

இப்பாகமுவ பிரதேச சபைக்கு உரித்தான ஆதனங்களை 2023ஆம் ஆண்டின் ஜனவரி 01 முதல் 2023 டிசம்பர் 31 வரையான காலத்திற்குக் குத்தகைக்கு விடுவதற்காக என்னால் பெறுகை கோரப்படுகின்றது.

01. பெறுகைப்படிவங்கள் வழங்கப்படும் ஆரம்ப தினம் : 2022.09.12 மு.ப. 9.00 முதல்
02. பெறுகைப்படிவங்கள் வழங்கப்படும் இறுதி தினம் : 2022.09.29 பி.ப. 1.00 வரை
03. பெறுகைப்படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித்தினம் : 2022.09.30 பி.ப. 1.00 வரை
04. பெறுகை திறத்தல் : 2022.09.30 அன்று பி.ப. 1.30 இற்கு

01. பெறுகைப்படிவங்களை வழங்கல் 2022.09.12 முதல் 2022.09.29 வரை இப்பாகமுவ பிரதேச சபை அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுவதுடன் 2022.09.29 அன்று பி.ப. 1.00 வரை மாத்திரம் பெறுகைகள் ஏற்றுக் கொள்ளப்படும். 2022.09.30 அன்று பி.ப. 1.30 இற்கு பெறுகை திறக்கப்படும்.
02. பெறுகைக்கான மாதிரி விண்ணப்பப் படிவங்கள் இரண்டு பிரதிகளாக வழங்கப்படுவதுடன் அவற்றைப் பூரணப்படுத்தி தனித்தனி தபாலுறைகளில் சேர்த்து மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென தெளிவாக உறையின் இடது பக்கத்தில் குறிப்பிடுதல் வேண்டும். பின்னர் அவற்றை ஒருறையில் சேர்த்து ‘செயலாளர், பிரதேச சபை, இப்பாகமவ’ என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். அவற்றை நேரில் ஒப்படைக்க நாடினால் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும்.
03. பெறுகைப்படிவங்கள் உரியவாறு பூரணப்படுத்தப்படல் வேண்டுமென்பதுடன் அவற்றை உள்ளடக்கும் உறையின் மேல் பெறுகையின் பெயர், கேள்விதாரரின் முகவரி தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். அனைத்து பெறுகைப் படிவங்களும் அந்தந்த ஆதணங்களிற்கான ஆகக் குறைந்த கேள்விக்கு மேற்பட்ட தொகைக்கு விண்ணப்பித்தல் வேண்டும் ஆகக் குறைந்த கேள்விக்கும் குறைவான தொகைக்கு சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன் பிணைத் தொகையானது சபைக்கு உரித்தாக்கப்படும்.
04. சித்திகரமான கேள்விதாரர், உரிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் பின்னர் ஏனைய விண்ணப்பதாரர்களின் பெறுகைப் பிணைத் தொகையானது மீளளிக்கப்படுவதுடன் கேள்வி விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொண்டு கேள்விகளைச் சமர்ப்பிக்கத் தவறும் நபர்களின் பிணைத் தொகையானது சபைக்கு உரித்தாக்கப்படும். உரிய தினத்தன்று ஒப்பந்தத்தில் கைச்சாத்து இடாத கேள்விதாரர்களின் கேள்விப் பிணைத் தொகையானது சபைக்கு உரித்தாக்கப்படும்.

**கேள்விக்கான நிபந்தனைகள்**

01. கேள்விப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளும் வேளையில் தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
02. இப்பாகமுவ பிரதேச சபையினால் அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்பட்ட நபர்கள் மற்றும் இப்பாகமுவ பிரதேச சபையின் ஆதணங்கள் மற்றும் சொத்துக்களைக் குத்தகைக்குப் பெற்றுக் கொண்டதன் பின்னர் இடை நடுவில் கைவிடும் அல்லது பிரதேச சபையுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை மீறியுள்ள நபர்களிற்கு விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது.
03. சித்திகரமான கேள்விதாரர்களிற்கு கேள்விகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டதன் பின்னர், உரித்தான கேள்வித் தொகையின் மூன்று மாதங்களிற்கு நிகரான தொகையொன்று பிணையமாக வைப்புச் செய்து ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுதல் வேண்டும். அவ்வாறு செயற்படத் தவறும் கேள்விதரர்களின் கேள்விகள், குறித்த தினத்தின் பின்னர் இரத்தானவையெனக் கணிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
04. சபைக்கு உரித்தான இறைச்சிக்கடைகள் மற்றும் மீன் கடைகளைப் பாதுகாத்தல் மற்றும் உபயோகப்படுத்தும் மின்சாரம், பராமரிப்புக் கட்டணங்களைச் செலத்தவும் குத்தகைதாரர் கடப்பாடுடையவராவர்.
05. அனைத்து உரிமம் பெற்ற இறைச்சிக்கடைக்காரர்களும் அரசினால் பகிரங்கப்படுத்தப்படும் தினங்களில் மாடறுத்தல் மற்றும் இறைச்சி வர்த்தகத்திலிருந்து முற்றாகத் தவிர்ந்திருத்தல் வேண்டும்.
06. அனைத்து சித்திகரமான கேள்விதாரர்களும் மேற்படி நிபந்தனைகள் மற்றும் பிரதேச சபையினால் அவ்வப்போது விதிக்கப்படும் நிபந்தனைகளிற்குக் கீழ்ப்படிதல் வேண்டுமென்பதுடன் அமுலில் உள்ள இடை ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இசைதல் வேண்டும்.
07. எந்தவொரு கேள்வியையும் முழுமையாக அல்லது பகுதியொன்றாக ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமை இப்பாகமுவ பிரதேச சபைக்கு உரித்தாகும்.
08. கோரப்பட்ட விலைகள் பெறுகைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டாலும் அங்கீகரிக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாக இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசினால் விதிக்கப்படும் எந்தவொரு வரியையும் செலுத்துவதற்கு நீங்கள் ஒத்துக் கொள்ளல் வேண்டும்.

மேலதிக விபரங்களை இப்பாகமுவ பிரதேச சபைக்கு நேரில் சமுகமளித்து அல்லது இலக்கம் 037 2259977 என்ற தொலைபேசியை அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**தொலைநகல் இல. 037 2258021**
**மின்னஞ்சல் www.ibbaps@gmail.com**
**www.dolgwp.lk இல் பிரவேசித்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.**

2022.09.12
**இப்பாகமுவ பிரதேச சபை அலுவலகம்,**
**இப்பாகமுவ.**

**டபிள்யு. அஜித் குமார் விக்கரமசிங்ஹ,**
**தலைவர்,**
**பிரதேச சபை, இப்பாகமுவ.**

# கேள்வி அறிவித்தல்

**சுகாதார அமைச்சு**

## தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரலின் கீழ் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களுக்கு சுத்திகரிப்புச் சேவையை வழங்குதல் 2022/2023

2022/2023ஆம் வருடங்களில் சுகாதார அமைச்சின் கீழுள்ள பின்வரும் நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலைகளுக்கு சுத்திகரிப்புச் சேவைகளை வழங்கும் பொருட்டு பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து சுகாதார அமைச்சின் அமைச்சுப் பெறுகை $C_2$ குழுவின் தலைவரால் கேள்விகள் கோரப்படுகின்றன.

1. இந்த ஒப்பந்தங்களுக்கு பின்வரும் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

I. இலங்கையில் வியாபாரப் பெயர் பதிவுச் சட்டத்தின் கீழ் அல்லது 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் சுத்திகரிப்புச் சேவைகளை வழங்கும் நிறுவமொன்றாக பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்படும் தினத்தில் ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்கு முன் பதிவைப் பெற்ற நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

II. சுத்திகரிப்புச் சேவைகள் வழங்குதல் தொடர்பில் அரசாங்க / அரை அரசாங்க அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களுக்கு குறைந்தபட்சம் 01 வருட அனுபவம் இருத்தல் வேண்டும் என்பதுடன் இதனை குறித்த நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தத்தைப் பெறுக்கொண்டதற்கான ஆவணங்கள் மற்றும் உடன்படிக்கைகளின் சான்றுபடுத்திய பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

III. பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 08ஆம் அத்தியாயத்தின் கீழான பதிவுச் சான்றிதழ் (அந்தந்த வைத்தியசாலைகள் / நிறுவனங்களுக்கு வெவ்வேறாகப் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.)

IV. பின்வரும் ஒவ்வொரு வைத்தியசாலைகள் / நிறுவனங்களுக்காக அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு நிபந்தனையற்ற வங்கி மேலதிகப்பற்று வசதிகள் வழங்கப்படுவதாக ஒப்பந்தக்காரர் கொடுக்கல் வாங்கல் செய்யும் வங்கியினால் வழங்கப்பட்ட கடிதம் (மூலப் பிரதி) (ஒப்பந்தக்காரரால் ஒன்றுக்கு மேற்பட்ட வைத்தியசாலைகள் / நிறுவனங்களுக்கு விலைமனுக்கள் சமர்ப்பிப்பதானால் அந்தந்த வைத்தியசாலைகள் / நிறுவனங்களின் பெறுமதி கூட்டுத் தொகைக்குச் சமமான அல்லது அதிக பெறுமதிக்குப் பெற்றுக்கொண்ட சான்றிதழாகவிருத்தல் வேண்டும்) (கேள்விகள் திறக்கப்படும் தினத்திற்கு முன்னரான ஒரு மாத காலத்திற்குள் பெற்றுக்கொண்ட சான்றிதழாகவிருத்தல் வேண்டும்)

V. வைத்தியசாலை மற்றும் சுகாதார நிறுவனங்கள் பின்வரும் பெறுமதிகளுக்கு 06 மாத காலத்திற்குள் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட பொது 170 மாதிரிப் பெறுமதிச் சான்றிதழின் (மூலப் பிரதி) (ஒப்பந்தக்காரரினால் பல வைத்தியசாலை / நிறுவனங்களுக்கு கேள்விகளைச் சமர்ப்பிப்பதானால் அந்த வைத்தியசாலைகள் / நிறுவனங்களின் பெறுமதி கூட்டுத் தொகைக்குச் சமமான அல்லது அதிக பெறுமதிக்குப் பெற்றுக்கொண்ட சான்றிதழாகவிருத்தல் வேண்டும்) மேலும் உங்களால் விண்ணப்பிக்கப்படும் வைத்தியசாலை / நிறுவனத்தின் வருடாந்தப் பெறுமதி பின்வருமாறாகவிருத்தல் வேண்டும். (அரசு சார்பான நிறுவனங்கள் கேள்வியைச் சமர்ப்பிப்பதானால் இந்த சான்றிதழுக்குப் பதிலாக நிறுவனத்தின் தலைவரினால் இந்த ஒப்பந்தத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக சான்றிதழொன்றைச் சமர்ப்பித்தல் போதுமானதாகும்.)

| | |
|---|---|
| போதனா வைத்தியசாலைகள் மற்றும் பொது வைத்தியசாலைகள் | ரூபா 1,000,000.00 |
| ஆதார வைத்தியசாலைகள், மாவட்ட வைத்தியசாலைகள் மற்றும் பிரதேச வைத்தியசாலைகள் | ரூபா 500,000.00 |
| சுகாதார நிறுவனங்கள் | ரூபா 300,000.00 |

VI. முன்னைய வருடங்களில் வியாபாரப் பெயர் பதிவின் கீழ் சுத்திகரிப்புச் சேவையை வழங்குவதற்காக சேவையில் ஈடுபடுத்திய அனைத்து ஊழியர்களுக்கான ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றுக்கு பங்களிப்பு நிதி செலுத்தியதற்காக இலங்கை மத்திய வங்கி / ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினால் வழங்கப்பட்ட கடிதம் / மிகுதி அறிக்கையை 2021 வருடங்களுக்குரித்தான (அண்மைய கடந்த 12 மாதங்கள்) 2021-12-31ஆம் திகதி வரை உள்ளடக்கப்பட்ட கொடுப்பனவு ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

VII. முன்னைய மதிப்பீட்டு வருடங்களில் சுத்திகரிப்புச் சேவை நிறுவனத்தின் பெயரில் வெட் வரி / வருமான வரி என்பன செலுத்தப்பட்டமையை ஆவணச் சாட்சி மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும். (வரையறுக்கப்பட்ட நிறுவனமானால் நிறுவனத்தின் பெயரிலும், தனி நபர் / பங்கு வியாபார நிறுவனமானால் சகல பங்காளர்களின் பெயரிலும் முன்னைய வருடங்களுக்கான வருமான வரி, வெட் வரி செலுத்தியதற்கான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். (2020/2021 வருடங்களுக்காக மட்டும்)

VIII. ................................ ரூபா பெறுமதியான வங்கிப் பிணை முறி அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் / காப்புறுதி நிறுவனத்தினால் கொழும்பு-10, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, சுவசிரிபாய, 385ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள சுகாதார அமைச்சின் செயலாளரின் பெயருக்கு வழங்கப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த நாள் முதல் 119 நாட்களுக்குச் செல்லுபடியாகும் வகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கிப் பிணை முறியை கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். (2022-10-04ஆம் திகதி முதல் 2023-01-31ஆம் திகதி வரை) செல்லுபடியாதல் வேண்டும்.

02. கேள்வி விண்ணப்பங்களை 2022-09-12ஆம் திகதி முதல் 2022-10-03ஆம் திகதி வரையான காலத்தில் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை கொழும்பு-10, இல. 26, 2ஆம் மாடி, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை முகவரியில் அமைந்துள்ள சுகாதார அமைச்சின் (உப அலுவலகம்) பெறுகைக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அந்தந்த வைத்தியசாலைகளுக்கான மீளளிக்கப்படாத கட்டணத்தை இலங்கை வங்கி - தப்ரபேன் கிளையில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் பேணப்படும் 7040244 எனும் கணக்கிலக்கத்திற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் கேள்வி ஆவணங்களுக்கான வேண்டுகோள் கடிதத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

**நிறுவனங்கள் / வைத்தியசாலைகள்**

| தொ. இல. | நிறுவனம்/ வைத்தியசாலையின் பெயர் | பெறுகை இலக்கம் | பெறுமதிச் சான்றிதழ் (ரூபா) | வங்கி மேலதிகப் பற்று வசதிகள் பெற்றுக் கொள்ள வேண்டிய பெறுமதி (ரூபா) (அல்லது குறையாமல்) | கேள்விப் பிணை (ரூபா) | கேள்வி ஆவணக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 01. | இலங்கை தேசிய வைத்தியசாலை - நரம்பியல் சிகிச்சைப் பிரிவு மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு உள்லடங்களான பிரதேசம் | MH/PB/ CL/01/2022 | 1,000,000.00 | 1,487,619.25 | 595,100.00 | 12500.00 |
| 02. | இலங்கை தேசிய வைத்தியசாலை - தொண்டை, காது, மூக்கு சிகிச்சையகம், 18,45 சிகிச்சையகம், X-கதிர் பிரிவு மற்றும் X-கதிர் கழிவுகள், 15, 16, 62, 63, 64, 66ம் இலக்க வாட்டுகள், வைட் ஹவுஸ் சுற்றுப்புறம், சரும நோய் சிகிச்சையகம், பௌத்த மத்திய நிலையச் சுற்றுப்புறம், PHI அலுவலகம், தனியார் அலுவலகம், AB ஓவசியர் அலுவலகம், ABC நவலோக்க சத்திர சிகிச்சையகம், இரத்த வங்கி சுற்றுப்புறம், பௌதீக ஒளிக்கதிர் சுற்றுப்புறத்தில் அனைத்து தரைப் பகுதி, 65ம் இலக்க வாட்டு உள்லடங்களான பிரதேசம் | MH/PB/ CL/02/2022 | 1,000,000.00 | 628,743.63 | 251,500.00 | 3500.00 |
| 03. | இலங்கை தேசிய வைத்தியசாலை – 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28 மற்றும் 65AB வாட்டுகளின் சத்திரசிகிச்சையகம், OPD, ECG அறை, வஸ்கியூலர் லெப், போதியைச் சுற்றியுள்ள பிரதேசம் உட்பட தோட்டத்திற்குரித்தான வலயம் உள்லடங்களான பிரதேசம் | MH/PB/ CL/03/2022 | 1,000,000.00 | 680,606.13 | 272,250.00 | 3500.00 |
| 04. | இலங்கை தேசிய வைத்தியசாலை – 02 சமையலறைகள், மருந்தகம், மருந்தாளர் பயிற்சிப் பாடசாலை, காகிதாதிகள் களஞ்சியசாலை, பதிவகம், தீவிர பராமரிப்பு, கணக்காய்வு, புத்தகம் கட்டுதல், காற்றுச்சீராக்கி பராமரிப்பு, போசணையாளர், மகளிர் தாதியர் அலுவலகம், வைத்தியர் ஓய்வு அறை, பிரதான சிற்றூழியர் சேவை நிர்வாகம் மற்றும் பிரதான ஓவசியர் அலுவலகம் உள்லடங்களான பிரதேசம் | MH/PB/ CL/04/2022 | 1,000,000.00 | 264,623.10 | 105,900.00 | 3500.00 |
| 05. | இலங்கை தேசிய வைத்தியசாலை – 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 38, 39, 40 இலக்கம் வரையான வாட்டுகள், ஆய்வு கூடம், பிரேத அறை, சிற்றூழியர் நிர்வாக அலுவலகம் E, இன்சிலேட்டர் நிலையம் உள்லடங்களான பிரதேசம் | MH/PB/ CL/05/2022 | 1,000,000.00 | 569,391.41 | 227,800.00 | 3500.00 |
| 06. | இலங்கை தேசிய வைத்தியசாலை – 52, 53, 54 BU, BMOT, VSOT சட்ட வைத்திய அதிகாரி அலுவலகம், ஓவசியர், திடீர் விபத்து எலும்பியல் பிரிவு, (ASOC), எலும்பியல் சிகிச்சையகம் CSSD, DPM மருந்தகம், தொழில்நுட்ப வேலைத்தள வலயம் உள்லடங்களான பிரதேசம் | MH/PB/ CL/06/2022 | 1,000,000.00 | 461,636.88 | 184,700.00 | 3500.00 |
| 07. | இலங்கை தேசிய வைத்தியசாலை – 60, 61, 69, 70 CCU, ICU, NICU, NDU, OTJ, OPD, CIU I, CIU II, ECG கருத்தரங்கு மண்டபம், CIU III, NTS 93NQ 200NQ, PBS, பௌதீக மருத்துவர் பாடசாலை, DQ உத்தியோகபூர்வ விடுதி உள்லடங்களான பிரதேசம் | MH/PB/ CL/07/2022 | 1,000,000.00 | 1,019,457.20 | 407,800.00 | 3500.00 |
| 08. | இலங்கை தேசிய வைத்தியசாலை – வெளி நோயாளர் பிரிவு உள்லடங்களான பிரதேசம் | MH/PB/ CL/08/2022 | 1,000,000.00 | 325,728.05 | 130,300.00 | 3500.00 |
| 09. | இலங்கை தேசிய வைத்தியசாலை – காக்காய் வலிப்பு கட்டிடம் மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசம் | MH/PB/ CL/09/2022 | 1,000,000.00 | 480,060.00 | 192,100.00 | 3500.00 |
| 10. | தேசிய சுகாதார கல்வி நிறுவனம் – களுத்துறை | MH/PB/ CL/10/2022 | 300,000.00 | 202,601.45 | 81,100.00 | 1000.00 |
| 11. | சுகாதார மேம்பாட்டுப் பணியகம் | MH/PB/ CL/11/2022 | 300,000.00 | 82,310.70 | 33,000.00 | 1000.00 |
| 12. | பொது வைத்தியசாலை – சிலாபம் | MH/PB/ CL/12/2022 | 1,000,000.00 | 1,498,899.88 | 599,600.00 | 12500.00 |
| 13. | அபேக்ஷா வைத்தியசாலை, மஹரகம | MH/PB/ CL/13/2022 | 1,000,000.00 | 1,667,541.85 | 667,000.00 | 12500.00 |
| 14. | குடும்ப சுகாதாரப் பணியகம் | MH/PB/ CL/14/2022 | 300,000.00 | 92,052.45 | 36,900.00 | 1000.00 |
| 15. | பொது வைத்தியசாலை (போதனா) – கேகாலை | MH/PB/ CL/15/2022 | 1,000,000.00 | 801,008.18 | 320,400.00 | 3500.00 |
| 16. | பொது வைத்தியசாலை, மாத்தறை மற்றும் இணை நிறுவனங்கள் | MH/PB/ CL/16/2022 | 1,000,000.00 | 1,554,608.12 | 621,900.00 | 12500.00 |
| 17. | ஆதார வைத்தியசாலை (போதனா) – கம்பளை | MH/PB/ CL/17/2022 | 500,000.00 | 736,735.66 | 294,700.00 | 3500.00 |
| 18. | மருத்துவ ஆராச்சிய் நிறுவனம், பொரளை | MH/PB/ CL/18/2022 | 300,000.00 | 170,996.00 | 68,400.00 | 1000.00 |
| 19. | காசல் வீதி மகளிர் மருத்துவமனை (போதனா) | MH/PB/ CL/19/2022 | 1,000,000.00 | 1,091,400.00 | 436,600.00 | 3500.00 |
| 20. | பொது வைத்தியசாலை – திருகோணமலை | MH/PB/ CL/20/2022 | 1,000,000.00 | 1,016,459.50 | 406,600.00 | 3500.00 |
| 21 | மாவட்ட பொது வைத்தியசாலை – மொனராகலை | MH/PB/ CL/21/2022 | 1,000,000.00 | 1,282,155.98 | 512,900.00 | 12500.00 |
| 22. | மாகாண பொது வைத்தியசாலை - இரத்தினபுரி | MH/PB/ CL/22/2022 | 1,000,000.00 | 2,195,790.81 | 878,400.00 | 12500.00 |
| 23. | காச நோய் ஒழிப்பு மற்றும் நுரையீரல் நோய் தொடர்பான தேசிய நிகழ்ச்சித் திட்டம், நாராஹென்பிட்டி | MH/PB/ CL/23/2022 | 300,000.00 | 171,057.83 | 68,500.00 | 1000.00 |
| 24. | மாகாண பொது வைத்தியசாலை – பதுளை | MH/PB/ CL/24/2022 | 1,000,000.00 | 1,937,624.34 | 775,100.00 | 12500.00 |
| 25. | டி சொய்சா மகளிர் மருத்துவமனை | MH/PB/ CL/25/2022 | 1,000,000.00 | 651,875.63 | 260,800.00 | 3500.00 |
| 26. | போதனா வைத்தியசாலை – மட்டக்களப்பு | MH/PB/ CL/26/2022 | 1,000,000.00 | 1,748,583.10 | 699,500.00 | 12500.00 |
| 27. | கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை – முல்லேரியா | MH/PB/ CL/27/2022 | 500,000.00 | 730,926.08 | 292,400.00 | 3500.00 |
| 28. | முல்லேரியா இல. II மற்றும் தாதியர் பாடசாலை | MH/PB/ CL/28/2022 | 1,000,000.00 | 1,027,558.78 | 411,100.00 | 3500.00 |
| 29. | சிறிமாவோ பண்டாரநாயக்க சிறுவர்களுக்கான விசேட வைத்தியசாலை, பேராதனை | MH/PB/ CL/29/2022 | 1,000,000.00 | 639,540.00 | 255,900.00 | 3500.00 |
| 30. | போதனா வைத்தியசாலை, பேராதனை – வைத்தியசாலையோடு இணைந்த கலஹா தேசிய பிக்கு நிலையம் | MH/PB/ CL/30/2022 | 1,000,000.00 | 110,452.50 | 44,200.00 | 1000.00 |
| 31. | போதனா வைத்தியசாலை, குளியாப்பிட்டி | MH/PB/ CL/31/2022 | 1,000,000.00 | 962,769.72 | 385,100.00 | 3500.00 |
| 32. | கொழும்பு தெற்கு போதனா வைத்தியசலை - களுபோவில | MH/PB/ CL/32/2022 | 1,000,000.00 | 1,931,398.81 | 772,600.00 | 12500.00 |
| 33. | மாவட்ட பொது வைத்தியசாலை, நீர்கொழும்பு | MH/PB/ CL/33/2022 | 1,000,000.00 | 943,172.95 | 377,300.00 | 3500.00 |
| 34. | விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை, சீதுவ | MH/PB/ CL/34/2022 | 1,000,000.00 | 220,366.28 | 88,200.00 | 1000.00 |
| 35. | போதனா வைத்தியசாலை, கராப்பிட்டிய | MH/PB/ CL/35/2022 | 1,000,000.00 | 2,403,735.00 | 961,500.00 | 12500.00 |
| 36. | தேசிய கண் வைத்தியசாலை, கொழும்பு-10 | MH/PB/ CL/36/2022 | 1,000,000.00 | 470,917.46 | 188,400.00 | 3500.00 |
| 37. | நுவரெலியா பொது வைத்தியசாலை | MH/PB/ CL/37/2022 | 1,000,000.00 | 9,985,500.00 | 600,000.00 | 12,500.00 |
| 38. | மருத்துவ வழங்கல் பிரிவு | MH/PB/ CL/38/2022 | 300,000.00 | 306,864.00 | 122,800.00 | 3500.00 |
| 39. | யாழ்ப்பாண போதனா வையத்தியசாலை | MH/PB/ CL/39/2022 | 1,000,000.00 | 13,143,441.25 | 789,000.00 | 12,500.00 |
| 40. | போதனா வைத்தியசாலை மற்றும் தாதியர் பாடசாலை, குருநாகல் | MH/PB/ CL/40/2022 | 1,000,000.00 | 15,830,629.17 | 950,000.00 | 12,500.00 |

03. பூரணப்படுத்திய கேள்வி ஆவணங்களை 2022-10-04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், அமைச்சுப் பெறுகைக் குழு **“$C_2$”,** சுகாதார அமைச்சு (உப அலுவலகம்), இல. 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, மெடி ஹவுஸ் கட்டிடம், இரண்டாம் மாடி, கொழும்பு-10 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது சுகாதார அமைச்சின் 2வது மாடியில் அமைந்துள்ள உதவிச் செயலாளர், (பெறுகைகள்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘2022/2023ஆம் வருடத்திற்கான ... ... ... ... ... ... ... ... ... . நிறுவனம்/ வைத்தியசாலைக்கான சுத்திகரிப்புச் சேவைகள் வழங்குதல்’’ எனக் குறிப்பிடல் வேண்டும். தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும்.

04. சுகாதார அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களுக்கான சுத்திகரிப்புச் சேவையை வழங்க சமர்ப்பிக்கும் கேள்விகள் ஒவ்வொரு நிறுவனங்களுக்காகவும் தனித்தனியாக சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களுக்கு கேள்வியைச் சமர்ப்பிப்பதானால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களின் மூலப் பிரதியை ஒரு கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அது எந்த கேள்வியுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை ஏனைய கேள்விகளில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். ஏனைய கேள்வியுடன் மூலப் பிரதியின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை வெவ்வேறாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. கேள்வி ஆவணங்களை இரு பிரதிகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனத் தயார் செய்து அவைகளை வெவ்வேறான உறைகளின் இட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. 2022-10-14ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை இல. 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, சுகாதார அமைச்சு, உப அலுவலகத்தின் 2ஆம் மாடியிலுள்ள மேலதிகச் செயலாளர் (பெறுகைகள்) அலுவலகத்தில் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவுற்றதும் அவை உடன் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கேள்விகள் திறக்கும் வேளையில் கலந்துகொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு மேலதிகச் செயலாளரைத் (பெறுகைகள்) தொடர்புகொள்ளவும். (தொலைபேசி இல. 011-2112713, 011-2112717)

07. கேள்வி முன்னோடிக் கூட்டம் 2022-09-20ஆம் திகதி சுகாதார அமைச்சு, (புதிய கட்டிடம்), இல. 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10 மேலதிகச் செயலாளர் (பெறுகைகள்) அலுவலகத்தில் மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.

08. சமர்ப்பிக்கப்படும் கேள்வியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,.**
**அமைச்சு பெறுகைக் குழு “$C_2$”,**
**பெறுகைப் பிரிவு,**
**சுகாதார அமைச்சு (புதிய கட்டிடம்),**
**இரண்டாம் மாடி,**
**இல. 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,**
**கொழும்பு-10.**

# ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன் பட்டம் மீண்டும் இலங்கை வசம்

## 2023 உலகக் கிண்ணத்திற்கும் தகுதி

சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டியில் சிங்கப்பூர் அணியை 63-53 என்ற புள்ளிகள் கணக்கில் வீழ்த்திய இலங்கை தோல்வியுறாத அணியாக சம்பியன் பட்டத்தை தக்கவைத்துக்கொண்டது.

இலங்கை அணி சாதனை எண்ணிக்கையாக ஆசிய சம்பியன் பட்டத்தை ஆறாவது முறையாக வென்றுள்ளது. அத்துடன் இம்முறை தொடரின் அரையிறுதியில் ஹொங்கொங் அணியை வீழ்த்தியதை அடுத்து இலங்கை அணி அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள வலைப்பந்தாட்ட உலகக் கிண்ணப் போட்டிக்கும் தகுதி பெற்றுள்ளது.

இந்த உலகக் கிண்ணப் போட்டி தென்னாபிரிக்காவில் ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் நடைபெறவுள்ளது. இதில் ஆசிய சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய சிங்கப்பூரும் தகுதி பெற்றுள்ளது.

இந்நிலையில் சிங்கப்பூர் ஸ்போட்ஸ் ஹப் அரங்கில் நேற்று (11) நடைபெற்ற இறுதிப் போட்டியில் இலங்கை அணி ஆரம்பத்தில் தடுமாற்றம் கண்டது. போட்டியின் முதல் கால் பகுதியில் சிங்கப்பூர் அணி 19-13 புள்ளிகளால் முன்னிலை பெற்றது.

இரண்டாவது 15 நிமிடங்களிலும் கூட சிங்கப்பூரின் ஆதிக்கமே இருந்தது. அந்தக் கால்பகுதியை சிங்கப்பூர் அணி 30-27 என வென்றது.

எனினும் 3 ஆம் கால் பகுதியில் தனது வழக்கமான ஆட்டத்திற்கு திரும்பிய இலங்கை பெண்கள், தர்ஜினி சிவலிங்கம் அடுத்தடுத்து பந்தை கூடைக்குள் புகுத்த புள்ளிகளை அதிகரித்துக் கொண்டது.

தேசிய வலைப்பந்து அணியின் உத்தியோகபூர்வ அனுசரணையாளர்
Dialog

இதன்படி 3ஆம் கால்பகுதி முடியும்போது இலங்கை 46-38 என முன்னிலைக்கு வந்தது.

இதனால் கடைசி கால்பகுதியில் விறுவிறுப்பு அதிகரித்தது. சிங்கப்பூர் வீராங்கனைகள் அதிகம் கோல்களை புகுத்தும் முயற்சியாக வேகமாக ஆட முயலும் போது இலங்கை வீராங்கனைகள் பந்தை நிதானமாக தர்ஜினியிடம் கொடுத்து புள்ளிகளை அதிகரித்தனர்.

இதன்மூலம் போட்டி நேரம் முடிவடையும்போது 63-53 என 10 புள்ளிகள் வித்தியாசத்தில் இலங்கை அணியால் வெற்றியீட்ட முடிந்தது.

இலங்கை வலைப்பந்து அணி இம்முறை ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடரில் தோல்வியுறாத அணியாகவே கிண்ணத்தை சுவீகரித்தது. ஆரம்ப சுற்றில் இந்தியா, பிலிப்பைன்ஸை வீழ்த்திய இலங்கை தொடர்ந்து மலேசியா, சிங்கப்பூர் மற்றும் ஹொங்கொங் அணிகளை வீழ்த்தி, அரையிறுதிக்கு முன்னேறி அரையிறுதியில் ஹொங்கொங்கை தோற்கடித்தது.



# ஒருநாள் தொடரை முழுமையாக இழந்தது இலங்கை இளையோர்



இங்கிலாந்து 19 வயதுக்கு உட்பட்ட அணிக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி இளையோர் ஒருநாள் சர்வதேச போட்டியிலும் இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்தது.

இதன்மூலம் இங்கிலாந்து இளையோர் அணி மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரை 3-0 என முழுமையாகக் கைப்பற்றியது.

லெய்செஸ்டரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட இலங்கை அணி 50 ஓவர்களுக்கும் சகல விக்கெட்டுகளையும் இழந்து 252 ஓட்டங்களை பெற்றது.

மத்திய வரிசையில் ரனுத சோமரத்ன மற்றும் அஞ்சல பண்டார (அட்டமிழக்காது) தலா 76 ஓட்டங்களை பெற்றனர்.

எனினும் பதிலெடுத்தாடிய இங்கிலாந்து இளையேர் அணி 44.3 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை இளையோர் அணி ஒருநாள் தொடரை தோற்றபோதும் இரண்டு போட்டிகள் கொண்ட இளையோர் டெஸ்ட் தொடரை 1-0 என கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognising talent, inspiring greatness.
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..........
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..........
வாக்களித்தவர் பெயர் : ..........
முகவரி : ..........
மொபைல் இல. : ..........

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 17-09-2022
இல. 25

MOBILE
வேகத்திலும் அதிவேகமான மொபைல் வலையமைப்பு.
இன்றே SLT-MOBITEL உடன் இணையுங்கள்!
SLTMOBITEL

## சர்வதேச செய்திகள்

# மகாராணி 2ஆம் எலிசபெத்தின் பூதவுடலை லண்டனுக்கு எடுத்துவரும் பயணம் ஆரம்பம்

## மன்னராக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டார் மூன்றாம் சார்ல்ஸ்

காலஞ்சென்ற பிரிட்டிஷ் மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் அரச முறையிலான இறுதிக் கிரியை வரும் செப்டெம்பர் 19ஆம் திகதி இடம்பெறும் என்று அரச அதிகாரிகள் அறிவித்துள்ள நிலையில், பிரிட்டிஷ் மன்னராக மூன்றாம் சார்ல்ஸ் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

லண்டனில் உள்ள புனித ஜேம்ஸ் மாளிகையில் கடந்த சனிக்கிழமை (10) நடைபெற்ற விழாவிலேயே புதிய மன்னராக மூன்றாம் சார்ல்ஸ் அறிவிக்கப்பட்டார். எனினும் மன்னருக்கான பணிகளை அவர் ஏற்கனவே ஆரம்பித்திருக்கும் நிலையில் அவர் முறைப்படி மன்னராகப் பொறுப்பேற்க இன்னும் சில நாட்கள் ஆகும் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில் அவுஸ்திரேலியாவும் நியூசிலாந்தும் மன்னர் சார்ல்ஸை அவற்றின் சடங்குபூர்வத் தலைவராக அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளன.

96 வயதான இரண்டாம் எலிசபெத்தின் மரணம் பிரிட்டனைத் தாண்டி உலகெங்கும் அனுதாப அலையை ஏற்படுத்தியுள்ளது.

மகாராணியின் பூதவுடன் தாங்கிய பேழை அவர் கடந்த வியாழக்கிழமை (06) அமைதியான முறையில் மரணித்த ஸ்கொட்லாந்தில் உள்ள பால்மோரல் கோட்டையின் நடன அரங்கில் வைக்கப்பட்டிருந்தது. அந்தப் பேழை நேற்று (11) பால்மோரலில் இருந்து கிராமங்கள், நகரங்கள் வழியாக ஊர்வலமாக எடுத்துச் செல்லப் பட்டது.





290 கிலோமீற்றர் நீளமுள்ள அந்தப் பயணம் 6 மணிநேரத்துக்கு மேல் நீடித்தது. போகும் வழியில் மக்கள் வீதிகளில் திரண்டு மகாராணிக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

எடின்பர்கில் பழைமை வாய்ந்த ஹோலிரூட்ஹவுஸ் அரண்மனைக்கு மகாராணியின் நல்லுடலைத் தாங்கிய பேழை செல்லும்போது மரியாதை அணிவகுப்பு இடம்பெறும்.

இன்று (12) மகாராணியின் பூதவுடலைத் தாங்கிய பேழை ரோயல் மைல் ஸ்டிரீடில் உள்ள செயின்ட் கில்ஸ் தேவாலயத்தில் ஒரு நாள் வைக்கப்பட்டிருக்கும்.

தொடர்ந்து நாளை செவ்வாய்க்கிழமை அவரது பூதவுடல் லண்டனுக்கு விமானம் வழி எடுத்துவரப்படும்.

இம்மாதம் 19ஆம் திகதி இறுதிச்சடங்கு நடைபெறுவதற்கு முன்னர் 4 நாட்களுக்கு, மகாராணியின் நல்லுடல் வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனையில் இருக்கும்.

இறுதிச்சடங்கிற்குப் பின் அவரது நல்லுடல் விண்ட்சர் அரண்மனையில் உள்ள செயின்ட் ஜோர்ஜ் தேவாலயத்தில் அடக்கம் செய்யப்படும்.

மகாராணியின் அரச முறை இறுதிக் கிரியைகள் வரை பிரிட்டனில் தேசிய துக்க தினம் அறிவிக்கப்பட்டிருப்பதோடு அன்றைய தினத்தில் பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உட்பட மகாராணியின் இறுதிக் கிரியையில் உலகத் தலைவர்கள் பலரும் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோன்று லண்டனில் நடைபெறவிருக்கும் எலிசபெத் மகாராணியின் இறுதிச்சடங்கிற்காக மில்லியன் கணக்கில் மக்கள் திரள்வார்கள் என்று நம்பப்படுகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 செப்டெம்பர் மாதம் 12ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.